விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 05 செவ்வாய்க்கிழமை (19.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031

விக்கிக்கு எதிராக விஷமம்

மொட்டைக் கடிதத்தில் கையெழுத்து முயற்சி!

மாகாண உறுப்பினர்கள் சிலரின் தூண்டுதலுக்கு ஏனைய உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் தலைவராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அன்று வாக்குறுதியளித்த ரணில் இன்று அதை மறந்துவிட்டார்

வாழ்விட விடுவிப்பில் வருந்தத்தக்க விடயம்!

(கொழும்பு)

அன்று எம்முடன் உண்ணாவிரதம் இருக்கும் போது தான் ஆட்சிக்கு வந்தால் மக்களை மீள்குடியேறுவதாக கூறிய பிரதமர் ரணில்

04 ஆம் பக்கம் பார்க்க

தொடர்ந்தும் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியில் விக்னேஸ்வரன் நீடிக்க முடியாது என்பதை முதலமைச்சரிடம் தெரிவிப்பதற்கான முயற்சிகளை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக இவர்களினால் இரசிய கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு உறுப்பினர்களிடம் கடிதம் ஒன்றில் கையெழுத்துப் பெறவும் முயற்சிக்கப்பட்டுள்ளது. எனினும் மாகாண சபை உறுப்பினர்களில் பலர் அக் கடிதத்தை மொட்டைக் கடிதம் என விமர்சித்ததுடன் அதில் கையெழுத்திடவும் மறுப்புத் தெரிவித்துள்ளனர். 23 ஆம் பக்கம் பார்க்க

சா/த பரீட்சையில் புதிய வினாத்தாள்

(கொழும்பு)

கல்விப் பெரதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு நிலைகளில் கணிதம் மற்றும் ஆங்கில பாட வினாத்தாள்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் ஆண்டு முதல் இரண்டு நிலைகளைக் கொண்ட கணிதப்பாட வினாத்தாள்களும் இரண்டு நிலைகளைக் கொண்ட ஆங்கிலப் பாட வினாத்தாள்களும் அறிமுகம் செய்யப்படும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டு முதல் அனைத்து மாணவர்களும் இடையறாது 13 ஆண்டுகள் கல்வி கற்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. இந்தக் கொள்கைக்கு அமையவே இரண்டு நிலைகளில் கணித

24 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் பேரவையின் பணி அமைதியாக முன்னெடுக்கப்படுகிறது

விஷமப் பிரசாரங்களை நம்ப வேண்டாம்-பேரவை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவை கலைக்கப்பட்டுவிட்டதாக வெளிவரும் செய்திகள் தவறானவை என்பதை தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக்குழுதெரிவிக்கின்றது. தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகளைமுடக்கும் நோக்கில் வெளியிடப்படும் இப்பரப்புரைகளைப் பொது மக்கள் நம்பவேண்டாம் எனதமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக் குழுகேட்டுக் கொள்கின்றது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக்குழு நேற்று வடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ் மக்கள் பேரவை அது

23 ஆம் பக்கம் பார்க்க

'படத்தைப் பார்க்காமல் பாடம் படி'

தந்தை கண்டிப்பு; மகள் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

படிக்காது திரைப்படம் பார்த்துக கொண்டு இருந்தமையை தந்தை கண்டித்தில் அதை தாங்க முடியாத மாணவி வீட்டு யன்னலில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சுதுமலை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலையில் கோவிலுக்கு பூசைக்காக சென்று விட்டு தந்தை வீடு திரும்பிய நிலையில் மகள் படிக்காது தொலைக்காட்சியில் திரைப்படம் பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்.

அவ்வேளை தந்தையார்தொலைகாட்சியை நிறுத்தி விட்டு பாடம்

04 ஆம் பக்கம் பார்க்க

மிருசுவில் கொலை வழக்கில் மூவருக்கு மரண தண்டனை

'இரத்தம் தோய்ந்த உலக்கையை வயலில் வீசியெறிந்தபோது'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் ஒருவரை உலக்கையால் அடித்து கொலை செய்து அவருடைய

23 ஆம் பக்கம் பார்க்க

யாழ்.நகரை அழகுபடுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அழகாக்கும் திட்டம் தொடர்பில் உலக வங்கி குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களுக்கு சென்று பார்வையிட்டுள்ளனர். முதற் கட்டமாக யாழ்.வீரசிங்கம் மண்டபம்

23 ஆம் பக்கம் பார்க்க

அவதூறு வழக்கு; கருணாநிதி ஆஜர்

(சென்னை)

தன் மீது தொடுக்கப்பட்டுள்ள அவதூறு வழக்கில் விளக்கம் அளிக்க திமுக தலைவர் மு.கருணாநிதி நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

தமிழக முதல்வரும் அஇஅதிமுகவின் பொதுச் செயலாளருமான ஜெ.ஜெயலலிதா, கருணாநிதி மீது தொடுத்துள்ள அவதூறு வழக்கில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

இன்றும் நாளையும் 8 அமர்வுகளாக நடைபெறும்



(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களுக்கு அமைய இன்று 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை 20ஆம் திகதி புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 31ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 942 பேர்களுக்கான பட்டங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இவற்றில் ஆயிரத்து 828 பட்டதாரிகளுக்கும் 114 டிப்ளோமா பட்டதாரிகளுக்குமான பட்டங்கள் வழங்கப்படவுள்ளது. இவர்களில் ஆயிரத்து

23 ஆம் பக்கம் பார்க்க

பொருளாதார மாநாடு ரணில் இன்று சுவிஸ் பயணம்

(கொழும்பு)

ஆண்டு தோறும் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தின், 2016ஆம் ஆண்டுக்கான மாநாட்டில் பங்கேற்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சுவிற்சர்லாந்து செல்லவுள்ளார். இந்த மாநாடு சுவிற்சர்லாந்தின், டாவோஸ் நகரில்

04 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மனமகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. பாலசிங்கம் ஜெகன்
(B.B.A, PGDE, M.ED 2nd UPPER)
(கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்- ஆசிரியர்)

19.01.2016 செவ்வாய்க்கிழமை இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி பட்டம் பெறுவதையிட்டு அவரை உளமார வாழ்த்தி அவர் மேன்மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

(C-3466)

"அன்னதாரகை"
மாலுசந்தி,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

வாழ்த்துவோர்கள்:
மாமா, மாமி
மைத்துனர்கள், மைத்துனி.

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
2மணித்தியாலத்தில் கணினி திருத்தம் Computer Repair
கணினி திருத்தக் கட்டணம் 500/- மட்டுமே!
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC 50/12,Hospital Road, Vairavar Kovil Lane Jaffna.
கணினிபயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம்.
(C-3473)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

மரண அறிவித்தல்

முருகேசு இரத்தினம்

அரசடி நல்லூரைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இரத்தினம் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-கதிராச்சி தம்பதியினரின் அன்பு மகனும், மனோன் மணியின் அன்புக் கணவரும், இராசு, மார்க்கண்டு, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சசிக்குமார், யஸ்மின், ஆர்த்திகா, துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மினி, ஜோன்சன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான யேசுராசா, மரியதாஸ் (மனோ) மற்றும் இராசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜொலின், ஜெவரின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3340)

தகவல்: குடும்பத்தினர்

60 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் வில்வராஜா சுதாகர்
(நரேசா இன்ஜினியல் உரிமையாளர்)

அமரர்
வில்வராஜா சுதாகர்
மலர்வு :- 12.06.1974 உதிர்வு :- 21.11.2015

21-11-2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த அமரர் **வில்வராஜா சுதாகர்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(3328)

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

K.S.T Builders & Staffs

பெருமையுடன் வாழ்த்துகின்றோம்

இன்று நடைபெறும் யாழ்ப்பாண பல்கலைகழக 31வது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது ஆருயிர் நண்பர்கள் இன்று போல் என்றும் பலபேறும் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

சங்க தலைவர்



வக்சன்
(BBA Second Upper)
(Finance)

சங்க காப்பாளர்



கீதாஞ்சன்
(BBA First Class)
(Finance)

சங்க தளபதி



எமிர்சன்
(BBA Second Upper)
(Finance)



கயுந்தன்
(BBA Second Upper)

தர்சிகன்(கிளி)
(BBA Second Lower)



பவகணேஸ்
(BBA)

ஆர்த்திகன்
(BSC Second Upper)

விஜயானந்
(BBA Second Upper)

(3341)

கீதாஞ்சன் வெட்டி சங்கம், நல்லூர் கிளை

இல. 227 கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.
கிளைகள்: கொழும்பு, லண்டன், கனடா, பிரான்ஸ்.

Twitter: @kvsNallur
Facebook: www.fb.com/kvsNallur

நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப சட்டத்தினால் மட்டும் முடியாது!

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களிடம் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு சட்டத்தினால் மட்டும் முடியாது என்றும் அதனை சமய தத்துவங்களுக்கேற்பவே மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல இனங்களுக்கு மத்தியிலும் அச்சம், சந்தேகத்தை இல்லாதொழித்து சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முன்வருமாறு தாம் சகல சமயத் தலைவர்களிடமும் கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

களுத்துறை பயாகலை இந்து கல்லூரியில் நேற்று நடைபெற்ற 2016 ஆம் ஆண்டு தைப்பொங்கல் பண்டிகை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதியை கல்லூரி மாணவர்கள் இந்து பாரம்பரியங்களுடன் வரவேற்று கல்லூரிக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்புகின்றபோது இனம், சமயம் என்ற பேதங்கள் தடையாக அமையக் கூடாது என்றும் நாட்டிலுள்ள எல்லா இனத்தவர்களும் சமாதானத்துடனும் ஐக்கியத்துடனும் வாழ்வதைக் காண்பதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அரசியல்வாதிகளைப் பார்க்கிலும் சமயத்தலைவர்களுக்கு முக்கிய பங்குண்டு என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்தி மீண்டும் நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் அடித்த எத்தை அமைக்க ஒன்றிணையுமாறு மகாசங்கத்தினர் உள்ளிட்ட இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் சமயங்களின் சமயத் தலைவர்களிடம் கேட்டுக்கொள்வதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ)



சுவிட்சர்லாந்து அரசின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான அரசியல் அமைப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று காலை யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சுவிஸ் நாட்டின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் டேவிட் விக்னட் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- உ. சாளின்)

இந்தியா-இலங்கை வர்த்தக ஒப்பந்தம் ஜூன் மாத இறுதியில்

ஜூன் மாத இறுதியில் இந்தியா - இலங்கை வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் என, சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தங்கள் நாட்டுக்கு தீங்கு விளைவிக்காது எனவும், நன்மையே பயக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்த ஒப்பந்தத்தில் வைத்தியத்துறை உள்ளடக்கப்படவில்லை எனவும், அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை துறைமுக நகரத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும், மார்ச் மாதமளவில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சீனா செல்கையில் இது பற்றி சுமுகமான கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படும்எனவும் மலிக் சமர விக்ரம மேலும் தெரிவித்துள்ளார். (இ)

டிலன்தவுக்கு நோட்டீஸ்

(கொழும்பு)

ஆசிய மோட்டார் பந்தய சம்பியனான இலங்கை வீரர், டிலன்த மாலகமுவவை எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நோட்டீஸ் நேற்றுக்காலை டிலன்த மாலகமுவவுக்கு நீதிமன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ)

இலங். புகையிரத சேவையை தனியார் மயப்படுத்த முயற்சி

புகையிரத சேவையை தனியார் மயப்படுத்தும் முயற்சிகள் மீண்டும் இடம்பெறுவதாக அகில இலங்கை புகையிரத பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்முதல் கட்டமாக ரயில் பெட்டிகளை திருத்தும் மற்றும் இயந்திரங்களை பழுதுபார்க்கும் விடயங்களை தனியார் நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் பாராளுமன்றத்தின் அனுமதியினைப் பெற்றுள்ளதாக இந்த சங்கத்தின் செயலாளர் எஸ்.பீ.விதானகே தெரிவித்துள்ளார்.

மேலும், ரயில் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கான திறன் ரயில்வே திணைக்களத்திற்கு இருந்தும் பழுதுபார்ப்பதில் காலதாமதங்கள் ஏற்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இங்கு காணப்படும் வளப்பற்றாக்குறையே இதற்கான காரணம். இதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த குறைபாட்டை அரசாங்கம் நிவர்த்தி செய்வதை விட்டு இதை தனியார் நிறுவனத்திற்கு வழங்கவுள்ள செயற்பாடானது வருந்தக்கூடிய செயல் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

சுதந்திரதின விழா காலிமுகத்திடலில்

இலங்கையின் 68 ஆவது தேசிய சுதந்திரதின விழாவை அடுத்த மாதம் 4 ஆம் திகதி காலி முகத்திடலில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கோலாகலமாக நடைபெறவுள்ள சுதந்திரதின விழா நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சபாநாயகர் கரு ஜெயசூரிய உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுதந்திரதினத்திற்கான முன்னோட்ட நிகழ்வுகள் இந்த மாத இறுதியில் நடத்தப்படவுள்ளன. (இ)

மகிந்தவின் பாதையில் மைத்திரியும் ரணிலும்

(கொழும்பு)

மகிந்தவின் பாதையிலேயே மைத்திரி-ரணில் கூட்டணியும் பயணிப்பதாகவும் அரசியல் சுயநலத்திற்காகவும் அதிகாரத்தை தக்கவைக்கும் நோக் கத்திலும் அரசாங்கம் குற்றவாளிகளை காப்பாற்ற முயற்சிக்கின்றது. திருடர்களை தண்டிக்க களமிறங்கிய அணியினர் இன்று திருடர்களுடன் கைகோர்த்து ஆட்சியை நடத்தி வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டியுள்ளார். (இ)

பாலித ரங்கே பண்டாரவிற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் அதிசொகுசு ஜீப் வண்டியொன்றை பெற்றுக் கொடுப்பதாகக் கூறி 54 இலட்சம் ரூபாய் பணமோசடி செய்தமை தொடர்பாக அவர் மீது தாக்கல் செய்யப்பட்டவழக்குமீதான விசாரணை அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி வீ.கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி நபர் ஒருவருக்கு அதிசொகுசு ஜீப் வண்டியொன்றை பெற்றுத்தருவதாக கூறி 54 இலட்சம் ரூபாய் பணத்தினைப் பெற்றுக் கொண்டு அந்த ஜீப் வண்டியை வழங்காமை தொடர் பில் பாலித ரங்கே பண்டாரவிற்கு எதிராக சட்டமா அதிபர் ஒருவரால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கானது நீதிமன்றிற்கு விசாரணைக்காக எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சருக்கு உடல்நிலை குறைபாடு காரணமாக குறித்த தினத்தில் அவரால் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்க முடியவில்லையென அவரது சட்டத்தரணி வைத்திய அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தமையை அடுத்து இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

இருபது - 20 போட்டிகளில் அதிவேக அரைச்சதம்

யுவராஜ் சாதனையை சமன் செய்தார் கிறிஸ் ஹெய்ல்

அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் ரெனேகட்ஸ் தொடரிலிருந்து வெளியேறியது

இருபது-20 தொடரில் குறைந்த பந்துகளில் (12 பந்துகள்) அரைச் சதம அடித்த வீரர் என்ற சாதனையை இந்திய வீரர் யுவராஜ் சிங்குடன் பகிர்ந்து கொண்டார் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் ஹெய்ல்.

பிக் பாஷ் இருபது - 20 தொட ரில் அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி க்கு எதிரான போட்டியிலேயே அவர் மேற்படிச் சாதனையை சமன் செய்தார்.

எனினும் கிறிஸ் ஹெய்ல் அதி ரடியாக துடுப்பெடுத்தாடிய போதி லும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி தோலவியைச் சந்தித்ததுடன் அரை யிறுதி வாய்ப்பையும் இழந்தது.

பிக் பாஷ் இருபது-20 தொட ரின் 32ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் அடிலெய்ட் ஸ்ரைக் கர்ஸ் - மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணிகள் மெல்போர்னில் பலப் பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியில் அதிக ஓட்ட விகிதத்தில் வெற்றி பெற்றால்தான் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி யால் அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற நிலைமை காணப் பட்டது.

போட்டியின் நாணயச்சுழற்சி யில் வெற்றி பெற்ற மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அடிலெய்ட் ஸ்ரைக கர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறை வில் 5 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்க ளான லூட்மேன் 49, டீன் 48, அணித்தலைவர் ஹொட்ஜ் 37 ஓட்டங் களை அதிகபட்சமாக எடுத்தனர்.

மெல்போர்ன் அணி அரையிறு திக்கு முன்னேற வேண்டுமென் றால் 15.1 ஓவர்களில் 171 ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்று நிபந் தனை விதிக்கப்பட்டது.

இதனால் அதிரடியை மைய மாகக் கொண்டு ரெனேகட்ஸ் அணி வீரர்கள் களமிறங்கினர்.

அவ்வணி சார்பில் ஹெய்ல் மற் றும் கூப்பர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

முதல் ஓவரை வெஸ்ட் வீசி னார். இந்த ஓவரின் 3ஆவது, 4ஆவது, 5ஆவது மற்றும் 6-வது பந்துகளை சிக்ஸருக்கு பறக்க விட்டு அதிரடியை ஜோராக ஆரம் பித்தார் ஹெய்ல்.

ஆரம்ப ஓவரிலேயே ஹெய்ல் ருத்ரதாண்டவம் ஆடியதால் ஸ்ரைக கர்ஸ் அணி வீரர்கள் கலக்கமடைந் தனர்.

3ஆவது ஓவரை லோலின் வீசினார். இந்த ஓவரின் 2ஆவது பந்தை சந்தித்த ஹெய்ல் அதை சிக்ஸருக்கு தூக்கினார். அந்த பந்து முறையற்ற பந்தாக அமைந்தது. இதனால் பிறிகிட்டாக வீசப்பட்ட அடுத்த பந்தை ஏன் விட்டுவைக்க வேண்டும் என்று அதையும் சிக் ஸருக்கு அனுப்பியதுடன், 3ஆவது பந்தை பவுண்டரிக்கு அனுப்பி னார்.

4ஆவது ஓவரின் முதல் பந்தில் மேலும் ஒரு சிக்ஸ் விளாசிய அவர் 12 பந்துகளில் ஒரு பவுண்டரி 7 சிக்சர்களுடன் அரைச்சதம் (51 ஓட்டங்கள்) அடித்தார்.

இதன்மூலம் அதிகவேகமாக (12 பந்தில்) அரைசதம் அடித்த யுவராஜ் சிங்கின் சாதனையை சமன் செய்தார்.

தொடர்ந்து விளையாடிய ஹெய்ல் 17 பந்துகளில் 2 பவுண் டரிகள், 7 சிக்சர்களுடன் 56 ஓட் டங்கள் குவித்து ஹேட்டின் பந்தில் லூட்மேனிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

ஹெய்ல் இவ்வாறு அதிரடியாக ஆடி அரைச் சதம் அடித்த போதி லும் (56 ஓட்டங்கள்) அவர் பிரதி நிதித்துவப்படுத்தும் ரெனேகட்ஸ் அணிக்கு வெற்றி இலக்கு நிபந் தனையுடன் கட்டாயப்படுத்தப்பட்ட மையால் மற்றைய வீரர்களும் அதிரடியைக் கையிலெடுத்த போதி லும் அது பலனளிக்கவில்லை.

இதனால் 15.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் அரையிறுதி வாய்ப்பை கோட்டைவிட, ஸ்ரைக்கர்ஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

பந்துவீச்சில் ஹெட் 16 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரைக்கர்ஸின் ஹெட் தெரிவா னார்.

முதல் அரையிறுதிப் போட்டி 21ஆம் திகதி ஸ்ரைக்கர்ஸ் - தண் டர் அணிகளுக்கு இடையில் அடி லெய்டிலும் 2ஆவது அரையிறுதிப் போட்டி 22ஆம் திகதி ஸ்கோச்சர்ஸ் - ஸ்ராஸ் அணிகளுக்கு இடை யில் மெல்போர்னிலும் நடைபெறு வதுடன் இறுதிப் போட்டி 24ஆம் திகதி நடைபெறுகிறது. (க)

அவதூறு வழக்கு..

அதில் கருணாநிதி நேரில் வந்து ஆஜரானார். அப்போது இந்த வழக் கின் விசாரணையை வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

நேற்றைய நீதிமன்ற விசார ணைக்குப் பிறகு செய்தியாளர்களை சந்தித்த கருணாநிதி, அவதூறு வழக்குகளைத் தொடர்ந்து தொடுக் கும் தமிழக அரசின் போக்கு சரியா னது அல்ல என இந்திய உச்ச நீதி மனறமே கூறியுள்ளதாக தெரிவித் தார். "இதை விட கூடுதலாக நான் கருத்து கூறத் தேவையில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி விகடன் இதழ், முர சொலி மற்றும் கருணாநிதி மீது ஜெய லலிதா அவதூறு வழக்கு ஒன்றை தொடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (செ-12)

தந்தை கண்டிப்பு...

படிக்கும்படி கண்டிப்புடன் கூறியுள் ளார்.

இதனால் விரக்தியடைந்த பிரஸ்தாப மாணவி தனது அறைக்குள் சென்று கதவை பூட்டிவிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இரவு 8.00 மணி யளவில் தாயார் மகளுக்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழைத்த போது மகள் வெளிவரவில்லை.

தொடர்ந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோதே யன னலில் தூக்கிட்ட நிலையில் மாணவி காணப்பட்டுள்ளார் என பொலிஸா ரின முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உடனடியாக அவரை மீட்டு யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் உயி ரைக் காப்பாற்ற முடியவில்லை.

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் உயர் தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் சுதுமலை மேற்கு மானிப்பாயை சேர்ந்த ஜெயராம சர்மா ஜெயரம்யா (வயது 17) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் நீதிமன்ற பணிப் புரைக்கு அமைவாக மரண விசார ணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமாரினால் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையைத் தொடர்ந்து சடலம் பெற்றோர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (செ-4,5,30)

ரணில் இன்று...

வரும் 20ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளாக நடந்து வரும், உலகப் பொருளாதார மன்றத் தின் மாநாட்டுக்கு இலங் கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

பிரதமருடன், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அனைத்துலக வர்த தக மற்றும் மூலோபாய அபி விருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகி யோரும் சுவிற்சர்லாந்து செல்லவுள் ளனர். (செ-12)

அன்று வாக்குறுதி...

விக்கிரமசிங்க தற்போது எமது வாழ் விடத்தை விட முடியாது என கூறுவது எம்மை ஏமாற்றும் செயல் என வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர் வாழ்வு சங்க தலைவர் ஆ.குணபால சிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கடந்த மாதம் யாழ்ப் பாணத்துக்கு வருகை தந்திருந்த போது நலன்புரி முகாம்களுக்கு நேர டியாக சென்று அங்குள்ள மக்க ளுடன் கலந்துரையாடி 6 மாத காலத்துக்குள் சொந்த இடங் களுக்கு அவர்களை மீள்குடியமர்த் துவதாக வாக்குறுதியளித்திருந் தார். அதை முற்றுமுழுதாக நம்பி யிருந்தோம்.

ஆனால் பொங்கல் தினத் தன்று யாழ் வருகை தந்த பிரதமர் பொங் கல் பானையை உடைத்தது போன்று மயிலிட்டி பிரதேசத்தை விட முடியாது என தெரிவித்துள் ளதாக ஊடகங்கள் ஊடாக அறிந்து ள்ளோம்.

கடந்த 2013 ஆம் ஆண்டு தெல் லிப் பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்தபோது தான் ஆட்சிக்கு வந்தால் மக்களை மீள்குடியேற்று வதாக எமக்கு வாக்கு றுதி அளித்த பிரதமர் ரணில் விகிரமசிங்க தற் போது எமது வாழ்விடமான மயி லிட்டியை விடமுடியாது என கூறி யது வருந்தத்தக்க விடய மாகும்.

மயிலிட்டிபிரதேசத்தில் 3 கிராம சேவகர் பிரிவின் கீழ் ஆயி ரத்து 700 தொடக்கம் 2 ஆயிரம் வரையானோர் மீள் குடியேற்றப்பட வேண்டியவர்கள். அவர்களின் வாழ்வாதாரமும் அப்பகுதியி லேயேதான் தங்கியுள்ளது.

எனவேஉயிர் போகும் நிலை யில் இருக்கும் எமக்கு சரியான தீர்வு ஒன்றை மிகவிரைவில் தந்து எம்மை மீள்குடியேற்ற வேண்டும். எம்மை ஏமாற்றும் நடவடிக்கை கள் தொடர்ச்சி யாக மேற்கொள்ளப் பட்டால் மக்களின் எதிர்ப்பு நடவடிக் கை கள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) காணி கட்டடம் கிணற்றடி விற்பனை அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான யாழ் காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தின் எதிர் பக்கமாகவும் சுன்னாகம் வர்த்தக வங்கிக்கு அருகாமையில் அமைந்த "பணிக்கலாவத்தையும் வாரிகலட்டியும் கிணற்றடியும்" என குறிப்பிடுகின்ற ஆதன இலக்கம் 3507 உடைய 05 பரப்பு 12.5 குளி கொண்ட காணி கட்டடம் கிணற்றடி விற்பனைக்கு உண்டு.

விற்பனை தொடர்பில் மீளளிக்க முடியாதவகையில் ரூபா 1000/= யினையும், மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5000/= யும் சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தினை பெற்று முழுமையாக பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலமாக பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் என்னும் விலாசத்திற்கு 03.02.2016ந் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னரான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் பின்னர் பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

வேண்டிய விபரங்களை விண்ணப்பப்பத்திரத்துடன் பெற்றுக் கொள்ள முடியும்.

18.01.2016 (C-3470) **பொது முகாமையாளர்**

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. மயில்வாகனம் மகேந்திரன்
(B.A, M.A, PGDE, M.ED)

யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் அதிபர் திரு.மயில்வாகனம் மகேந்திரன் யாழ் பல்கலைக்கழகத்தில் 31-வது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி பட்டம் பெறுவதையிட்டு எமது பாடசாலை சமூகம் பெரு மகிழ்ச்சியடைகின்றது. அவர் மேலும் பல பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற்று கவ்விப்பணியாற்றிட பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் (3333)
பாடசாலைச்சமூகம்
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை
இளவாலை

கண்ணீர் அஞ்சலி

அமரர் கார்த்திகேசு நடராசா

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கம்ஷவதனி ஸ்ரீகணேசராசா
அவர்களின் அன்புத்தந்தை
கார்த்திகேசு நடராசா
அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரது பிரிவினால் துயருறும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக

(C-3474)

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் கவிதை, பேச்சுப் போட்டிகளும் திருக்குறள் மனனப்போட்டியும்

ஆண்டுதோறும் கம்பன் விழாவினை நடத்திவரும் கொழும்புக் கம்பன்கழகம் 2016 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவை, எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டுக் கழகம் நடத்த வுள்ள அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகார் த்தப் பேச்சு மற்றும் அமரர் பொன்.பால சுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டிகள் குறித்த விபரங்களையும் நாவலர் நற்பணி மன்றம் அமைத்துள்ள அறக்கட்டளை ஆதர வில் நடத்தவுள்ள இலக்கணவித்தகர் நமசி வாய தேசிகர் ஞாபகார்த்த திருக்குறள் மனனப் போட்டிகள் குறித்த விபரங்களையும் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

மேற்படி பேச்சுப் போட்டி 02 பிரிவுகளாக இடம்பெறும். மத்திய பிரிவுப் போட்டிகளில் 13-16 வயதுக்குட்பட்ட மாணவர்களும் மேற்பிரிவு போட்டிகளில் 17-30 வயதிற் குட்பட்ட போட்டியாளர்களும் கலந்து கொள் ளலாம். கவிதைப் போட்டி ஒரே பிரிவாக மட்டுமே இடம்பெறும். இதில் 15-30 வயதிற் குட்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொள்ள லாம். திருக்குறள் மனனப்போட்டி இருபிரிவு களாக இடம்பெறும். பாலர் பிரிவில் ஐந்தாம் தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களும் கீழ்ப்பிரிவில் தரம் 6 முதல் 8 வரையான தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம். சென்றவிழாக்களில் தங்கப்பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த, பேசும், கவிதை இயற்றும் திறமை யுள்ளோர் மேற்படி போட்டிகளுக்கு விண் ணப்பிக்கலாம்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்ததிகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர், வீட்டு முகவரி, கலந்து கொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு, இல. 12, இரா மகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 (Sec retary, Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06.) எனும் முகவரிக்கு ஜனவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். ஒருவர் இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும். போட்டி நடைபெறும் திகதி போட்டியா ளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும். பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்க ளைத் தமிழ் மன்றம் ஒரே தொகுதியாக அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

பேச்சு மற்றும் கவிதை போட்டிகளில் கலந்து கொள்வோர் உடன் தரப்படும் தலைப்புகளில் தம் ஆற்றலை வெளிப் படுத்த வேண்டும். தலைப் புக்கள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர் பில் அமை ந்திருக்கும். திருக் குறள் மனனப் போட் டியாளர்க்கு தலைப் புகள் அனுமதி அட் டையுடன் அனுப்பி வைக்கப்படும் என வும் கொழும்புக் கம்ப ன்கழகம் அறிவித்து ள்ளது.

தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று போட்டியா ளர்களுக்கும் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கப் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட் டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும் புக் கம்பன்கழகச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலய ஆசிரியர்

திரு.க.கலியுகன்

(3326)

B.A (Hons), PGDE (NIE),
M.Phil, M.Ed (Hons)

அவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை (19.01.2016) யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் M.Ed (Hons) முதுகல்விமாணி பட்டம் பெறுவதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யா/உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம், ஆனைக்கோட்டை

ஆசிரிய நலன்புரிக் கழகம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

திரு.பாலசுப்பிரமணியம் சுதாகரன்

(B.B.A.(Hons) Dip.in English)
M.A in Public Administration (Distinction)
PGD in TESL (Hons)

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் 31 ஆவது பொதுப்பட்டமளிப்பு நிகழ்வின் போது ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (PGD-in- TESL) பட்டம் பெறுவதையிட்டு திரு.பாலசுப்பிரமணியம் சுதாகரன் (முகாமையாளர் - நிர்வாகம் மனிதவளம் - பனை அபிவிருத்திச் சபை) அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Director & the Staff members English Language Learning Centre
Thurai veethy, Kondavil West. Kondavil.

(3309)

உளமார வாழ்த்துகின்றேன்

Dr. திருமதி சந்திரிகா நாகேந்திரன்

(3322)

B.Sc (HONS) Phd.in Edu
இணைப்பாளர், கல்விமாணி பட்டநெறி
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி-நிலையம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 19.01.2016 செவ்வாய்க்கிழமை நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் துறையில் கலாநிதிப்பட்டம் பெறும் Dr. திருமதி சந்திரிகா நாகேந்திரன் அவர்கள் மென்மேலும் பலபட்டங்கள் பெற்று வாழ்வில் உயர உளமார வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
திரு.ப.கேசவன்
கல்விமாணி பட்டநெறி மாணவன் (2011-2013)

மீனம் பெரிய மனிதர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார் த்த திருப்பங்களைக் காண லாம், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம்.

மேடம் விடியும் போதே சுப தகவல் கள் வந்து சேரலாம், சுப நிகழ் வுகளில் கலந்து கொள்ளும் வாய் ப்புண்டு, பணத்தேவைகள் பூர் த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

இடபம் விரதம்,வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்,உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உணவில் கட்டுப்பாடு தேவை.

மிதுனம் எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்குப் பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செலவுகள் கூடும்.

கும்பம் பெற்றோர் மீது பிரியப கூடும், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், நல்ல தகவல் கள் வந்து சேரலாம்.

மகரம் பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற் றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் நாள்.

கேது	கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி- விசாகம்		
சூரி			ராகு
புத	சனி சுக்	செவ்	குரு

இராசி பலன்

19.01.2016
(தை 05, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
தசமி பிற்பகல் 1.23 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 10.49 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
கார்த்திகை விரதம்,சித்தாமிர்தம்
வளவன்

கடகம் பொருளாதார நிலையில் முன் னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியா கும், ஊக்கத்தோடும் உற்சாகத் தோடும் பணிபுரிவீர்கள்.

சிம்மம் சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள் கைப்பிடிப்போடு செயற்படு வீர்கள், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவா கும், போசன சுகமுண்டு.

தனுசு கடன்சுமை குறைந்து கவ லைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வியாபார விரோதம் விலகும், ஆரோக்கியமான நாள்.

விருச்சிகம் இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப் புண்டு, திடீர் பயணங்கள் தித் திக்க வைக்கும், உடன் பிறப் புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

துலாம் சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல் லது, செலவுகள் அதிகமா கும், கூட்டாளிகளிடம் விழிப் புணர்வு அவசியம், திருடர் பயமுண்டு.

கன்னி பிரிந்து சென்றவர்கள் பிரியமு டன் வந்திணைவர், பூர்வீக சொத்துக்களால் நன்மையு ண்டு, வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பயண ங்களால் பலனுண்டு.

48 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா 2015ல் தண்டப்பணமாக அறவீடு

யாழ்.மதுவரி அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 828 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு 48 இலட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மதுவரி அத்தி யட்சகர் தர்மசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்ட மதுவரி திணைக்களத்தினால் மது பான குற்றச் செயல்களை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் புதிதாக உத்தியோகத் தர்கள் மற்றும் பரிசோதகர்களை நியமித்து திடீர் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக குற்றச் செயல் கள் குறைவடைந்து வருகின்றன.

அந்த வகையில் மதுவரி திணைக் கள அதிகாரிகள் உத்தியோகத் தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது பல்வேறு குற்றச்செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டு குற்றங்களுக் கெதிராக அந்தந்த நீதிமன்றங் களினூடாக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டு தண்டப்பணம் அறவிடப் பட்டு வருகின்றது.

அந்த வகையில் யாழ். மாவட் டத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு கசிப்பு உற்பத்தி தொடர்பாக 5 வழக்குகளும், கசிப்பு வைத்தி ருந்தமை தொடர்பாக 14 வழக்குக ளும், சாராயம் விற்ற குற்றத்துக் காக 49 வழக்குகளும், சாராயம் வைத்திருந்த குற்றத்துக்காக ஒரு வழக்கும், வெளிநாட்டு மதுபானம் விற்ற குற்றத்துக்காக 8 வழக்கு களும், கள்ளு விற்றமை தொடர் பாக 764 வழக்குகளும், கள்ளு வைத்திருந்தமை தொடர்பாக 624 வழக்குகளும், கஞ்சா வைத்தி ருந்தமை தொடர்பாக 3 வழக்குக ளும், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்ற குற்றத்திற்காக 358 வழக்குகளும், புகையிலை வரிச்சட் டத்தை மீறியமை தொடர்பாக 2 வழக்குகளும் அந்தந்த நீதி மன் றங்களினூடாக தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

அதில் யாழ்ப்பாண மதுவரி நிலையத்தால் 512 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 12 இலட்சத்து 17 ஆயிரத்து 500 ரூபாவும், சங் கானை மதுவரி நிலையத்தால் 430 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 10 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா வும், சாவகச்சேரி மதுவரி திணைக் களத்தால் 277 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 11 இலட்சத்து 39 ஆயி ரம் ரூபாவும், பருத்தித்துறை மது வரி நிலையத்தால் 276 வழக்குகள் பதிவு செய்யபபட்டு 5 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாவும், மல்லாகம் மதுவரி நிலையத்தால் 333 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 9 இலட்சம் ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் சட்டவிரோதமான முறை யில் கள்ளு விற்றமை தொடர் பாகவே அதிகளவான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த 2014 ஆம் ஆண்டு ஆயிரத்து 414 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 57 இலட்சத்து 44 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

யுத்தப் பாதிப்பிலிருந்து மீளாத நாகர்கோவில்

(கரணவாய்)

யுத்தம் ஓய்ந்தும் யுத்தத்தின் வடுக்கள் அழிவடையாத நிலையில் நாகர்கோவில் பகுதி காணப்படுவ தாகமக்களால்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் காணப்படுகின்ற நாகர்கோவில் பிர தேசத்தின் சில பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றத்திற்காக விடப்பட்ட போதிலும் அப் பிரதேசங்களில் வாழ் வதற்கு அச்சப்படுவதாக அங்குள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சில பகுதிகளில் கண்ணிவெடி கள் அகற்றப்பட்டு கொடுக்கப்பட் டுள்ளது.

அங்கு மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்ற நிலையிலும் தமது வயல் நிலங்களில் கண்ணி வெடிகள் அகற்றப்படாது கண்ணி வெடி அடையாளங்கள் பொறிக்கப் பட்ட பதாகைகள் இன்றும் காணப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் வயல் நிலங்களை பதப்படுத்த தாமதம் ஏற்படுகின்றது.

அத்துடன் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட சில பிரதேசங்களில் துணிந்து நடமாடுவதற்கும் அச்சப் படுகின்றோம் என அங்குள்ள மக் களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இராணுவ ஆக்கிரமிப்பி லுள்ள நாகர்கோவில் என்ற பிர தேசம் முற்றுமுழுதாக மாற வேண் டும் யுத்த வடுக்கள் துளியும் தென் படக் கூடாது எனவும் இது தொடர் பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென அங்குள்ள மக் கள் கோரி நிற்கின்றனர். (இ-5-60)

உதைபந்தாட்டப் போட்டியில் திடீரென கல் வீசித்தாக்குதல்

(கரணவாய்)

உதைபந்தாட்டப் போட்டி இறுதி யில் கல்வீச்சுதாக்குதலில் முடிந்தது.

வடமராட்சி நவிண்டில் பகுதியில் உள்ள கலைமதி மற்றும் கொற் றாவத்தை பகுதியில் உள்ள றேஞ் சர்ஸ் விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான உதைபந்தாட்ட சுற் றுப் போட்டி கடந்த சனிக்கிழமை கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியின் முடிவில் தோல் வியை தழுவிக் கொண்ட அணி யினரை வெற்றி பெற்ற அணியின் ஆதரவாளர்கள் கேலி, கிண்டல் செய்ததையடுத்து இரு அணியின ருக்குமிடையில் வாக்குவாதம் இடம் பெற்ற பின்னர் கைகலப்பு உரு வாகி இறுதியில் கல் வீச்சுத் தாக்கு தலில் முடிவுற்றுள்ளது.

இது தொடர்பில் அன்றைய தினம் இரவு 11 மணியளவில் வல் வெட்டித் துறை பொலிஸில் முறைப்பாடு ஒன் றும் பதிவு செய்யப்பட்டது.(இ-5-60)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதி கார சபையானது வடக்கு மாகா ணத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலை யங்களில் ஆங்கில பாடத்தினை கற்பிப்பதற்காக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங் களைக் கோரியுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை நேரிலோ அல்லது தபாலிலோ எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர், மாவட்ட அலு வலகம் முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல.12, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை யாழ்.நிலைய உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் கேட்டுள்ளார். (இ-5)

பெறுபேறு வெளியீடு

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

விஞ்ஞானப்பிரிவு

ப.சிதுர்சிகா- சி2எஸ், ப.சதுர் சிகா-3எஸ்,

வர்த்தகப்பிரிவு

உ.றசிந்தா- 2ஏசி

கலைப்பிரிவு

அ.கார்த்திகாயினி-2பிசி, ம.இமாஜினி-பி2சி

மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ மாவை சித்தி விநாயகர் ஸ்ரீ மஹா முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார திருவிழாவும் மணவாளக் கோல நிகழ்வும் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 29 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

ஆதீன கர்த்தா மஹா ராஜ ஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதி குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இத் திருவிழாவில் பிரதம குருவாக கிரியா சிரோன்மணி செ.சுகுமாரக் குருக்கள், கு.உமாசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)



பண்டத்தரிப்பு மலரும் மொட்டுக்கள் (ஆங்கில மொழிமூலம்) பாலர் பாடசாலையின் கிறிஸ்மஸ் நிகழ்வின் போது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.சுவாம்பிள்ளை அன்ரனிராசன்

NDT, MA, PGD in TESL (Hons)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வளாகத்தில் இன்று (19.01.2016) இடம்
பெறும் 31ஆவது பொதுப் பட்டமளிப்பு
விழா நிகழ்வின் போது பட்டப்பின்
தகைமை சான்றிதழ் ஆங்கிலம்
(PGD in TESL) கற்பித்தலில் பயிற்சி
நெறியின் மேற்பிரிவில்
(Hons) பட்டம் பெறும்
திரு சு.அன்ரனிராசன் அவர்களை
இறைவன் அருளால் சீரும் சிறப்பும்
பெற்று வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

Director & the
Staff Members English Language Learning
Centre,Thurai veethy
Kondavil.

(3308)



குறைகேள் அரங்கு...

வண்ணார் பண்ணை பிரப்பங்குளம் வீதி 20 வருடங்களாகப் புனரமைப்பு இன்றி

யாழ்ப்பாணம் ஜே/82 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வண் ணார்பண்ணை பிரப்பங் குளம் வீதி மற்றும் பிரப்பங் குளம் ஒழுங்கை என்பன கட ந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலை யில் பழுதடைந்து காணப்படுவதாக மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். நாவ லர் வித்தியாலயம் உட்பட பல பாட சாலை மாணவ மாண விகள் மற் றும் பொதுமக்கள் எனப் பல தரப் பினராலும் பயன்படுத்தப்பட்டு வருகின் றன.

இவ்வீதிகளை புனரமைத்து தரு மாறு பல தடவைகள் கோரி க்கை விடப்பட்டிருந்த நிலையி லும் இது வரை வீதி புனரமைப் பிற்கான எந்த வொரு நடவடிக் கையும் எடுக்கப்பட வில்லை.

இவ்வீதிகள் ஊடாக தினமும் பாரவூர்திகள் சென்று வருவ தால் பயணிக்க முடியாத மிக வும் மோச மான நிலைக்கு வீதி கள் மாற்றப் படுகின்றன.

கடந்த வருட நடுப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் திருத்தப்படா மல் இருந்த வீதிகள் அனைத்து க்கும் திருத்த வேலைக்கான நிதி ஒதுக் கப்பட்டதாக பத்திரிகைக ளில் வெளி வந்த செய்திகளை யடுத்து இவ்வீதி களும் புனர மைக்கப்படும் என மக் கள் நம் பியிருந்தனர்.

ஆனால் அந்நிதியினைக் கொண்டு புனரமைக்கப்பட்ட வீதிக ளுக்குள் இவ் வீதிகள் உள் வாங்கப் படவில்லை.

எனவே கவனிப்பாரின்றிய நிலையில் காணப்படுகின்ற இவ் வீதிகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப் பினர் உரிய நடவடிக்கை களை எடு க்குமாறு அங்குள்ள மக்களால் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

உளமார வாழ்த்துகின்றோம்

Dr.திருமதி சந்திரிகா நாகேந்திரன்

B.Sc (Hons)Phd.in Edu
இணைப்பாளர், கல்விமாணி பட்டநெறி
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி-நிலையம்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 19.01.2016
செவ்வாய்க்கிழமை நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு
விழாவில் கல்வியியல் துறையில் கலாநிதிப்பட்டம்
பெறும் Dr.திருமதி சந்திரிகா நாகேந்திரன் அவர்கள்
மென்மேலும் பலபட்டங்கள் பெற்று வாழ்வில் உயர
உளமார வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
2013/2015,
அணி மாணவர்கள்.

(3329)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் தெ.இந்திரகுமார்

B.A(Hons)
Professor A.Thurairajah
Gold Medal for All-round
performance University
of Jaffna 31st convocation

1.Arts faculty Gold medal
2.Inter faculty Gold medal Winner

யாழ்.பல்கலைக்கழகத்தில் 20 ஆம் திகதி
இடம்பெறுகின்ற பட்டமளிப்பு விழாவில்
சகலதுறை சாதனையாளருக்கான கலைப்பீடம்
மற்றும் அனைத்துப்
பீடங்களுக்குமான பேராசிரியர் துரைராஜா
தங்கப் பதக்கங்களை பெற்றுக்கொள்ளும்
எமது நண்பனை மென்மேலும்
சாதனைகள் நிலைநாட்டி
உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- மெய்யியற்றுறை நண்பர்கள் (3334)
(33ஆவது அணி) மற்றும் பாஞ்சாலங்குறிச்சி நண்பர்கள்.

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: ரேவதி கி.பா:74செவ் 1 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/5428	பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 48செவ் 8 இல் தகைமை/தொழில்:பட்டதாரி ஜேமன் குடியுரிமை எதிர் பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும் தொ.இ: G/5435
பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: அத்தம் கி.பா: 32 உயரம்: 6' தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் தொ.இ: B/5430	பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: பூசம் கி.பா: 36சூரிசெவ் 9 இல் தகைமை/தொழில்:BA/அரசதொழில் தொ.இ: G/5436
பிறப்பு: 1970 இந்து நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா: 39செவ் 4 இல் தகைமை/தொழில்:MSCலண்டன் தொ.இ: B/5431	பிறப்பு: 1971 இந்து நட்சத்திரம்: புனர்பூசம் கி.பா: 48செவ் 4 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:A/L/அரசதொழில் தொ.இ: G/5442
பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: பூராடம் கி.பா: 15 உயரம்: 5'4" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/5432	பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: சதயம் கி.பா: 47செவ் 7 இல் உயரம்: 153cm தகைமை/தொழில்:BA/ஆசிரியர் தொ.இ: G/5443

இவர்களுக்கு மணமகன் தேவை

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

முள்ளியவளை-மாங்குளம் வீதியிலுள்ள சிறுவர் பூங்கா கவனிப்பாரற்ற நிலையில்

பாம்பு புற்றுகள் நிறைந்து காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டு



(வற்றாப்பளை)

முள்ளியவளை மாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவானது கவனிப்பாரற்று பற்றைகள் நிறைந்து காணப்படுவதால் பூங்காவிற்கு சிறுவர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் வேள்ட் கென்சேன்ட் சிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி பூங்காவானது தகுந்த பராமரிப்புகள் இன்றி காணப்படுவதால் அங்கு விசஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுடன் பாம்புப் புற்றுக்கள் காணப்படுவதால் சிறுவர்கள் அப்பூங்காவை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகத்தினர் இதனை கவனத்தில் கொண்டு மேற்படி பூங்காவை சிறுவர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்து பராமரிக்க வேண்டுமென பிரதேச மக்கள் சம்பந்தப் பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

பயனாளிகளுக்கு காசோலைகள்

புனர்வாழ்வு பெற்ற போராளிகள், பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோர்கள் ஆகியோருக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக தேவைகளின் அடிப்படையில் ஐந்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வுகள் அனைத்து மாவட்ட பிரதேச செயலகங்களிலும் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கமைய மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கான காசோலைகளை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் கடந்த 14ஆம் திகதி வியாழன் அவரது மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

வாழ்வாதாரத் திட்டங்களை கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்ற பயனுள்ள திட்டங்களுக்கு பயன்படுத்தி நல்லதொரு நிலையான நாளாந்த வருமானத்தை பெறுவதன் மூலம் ஓர் நிலையான அபிவிருத்தியை பெற்று முன்னேற்றம் காண முடியும் என்றார். (2-281)

முல்லை.மாவட்ட கமநல சேவை நிலைய உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்

பசளைப் பாவனை தொடர்பாக விளக்கமளிப்பு ஒழுங்கமைப்பாளர் அமைப்பும் அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை ஆணையாளர் தலைமையில் அவரது காரியாலயத்தில் கடந்த 12ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

ஆணையாளர் மோகனராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை நிலையங்களின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மு.ப 10 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கமநலசேவை நிலையங்களின் உறுப்பினர்களுக்கு சேதனப் பசளை மற்றும் இரசாயனப் பசளை பாவனை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

சேதனப்பசளை தயாரித்து அதனைப் பாவனையில் விடுவது சம்பந்தமாகவும் இரசாயன பூச்சி மருந்துகளை பாவிப்பதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.மேலும் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்கும் நான்கு தூவல் நீர்ப் பாசன கருவி ள் வீதம் 37 தூவல் நீர்ப்பாசன கருவிகள் வழங்கப்பட்டன. ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்கு ஒரு கருவி மேலதிகமாக வழங்கப்பட்டது.தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு இக்கருவிகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை மேற்படி கூட்டத்தில் கமநல சேவை நிலையங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக ஒழுங்குபடுத்தும் அமைப்பு (Organizers Committee) ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உடையார்கட்டு,புதுக்குடியிருப்பு, முள்ளியவளை,குமுழமுனை, ஒட்டுசுட்டான், ஒலுமடு,துணுக்காய்,கொக்குத் தொடுவாய் ,அடைக்கப்பன் ஆகிய கமநலசேவை நிலையங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

ஒன்பது கமநல சேவை நிலையங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 27 உறுப்பினர்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

கமநல சேவை நிலையங்கள் ஒன்றி ணைந்து மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-292)

அகில இலங்கை பொது ஊழியர்சங்க முல்லை.புனரமைப்பு பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டக் கிளையின் 3ஆவது வருடாந்த புனரமைப்பு பொதுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு கச்சேரி கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் S.லோகநாதன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன்,சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், கௌரவ விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், விசேட விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரன் ஜெகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இக்கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பொதுச்செயலாளர் கேட்டுள்ளார்.

மேலும்தொழிற்சங்கத்தில் புதிதாகசேரவிரும்பும் அரசஊழியர்களும் இக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.(2)

தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் பொது மக்களுக்கு உதவிகள் வழங்கல்

(குருமன்காடு)

கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் உறங்கா விழிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனம் தாயகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இம் மாதம் ஒரு இலட்சத்து 25 ஆயிரம ரூபாய் பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளது.

மேற்படி உதவிகள் உயர் கல்வி மற்றும் பாடசாலைக கல்வி, மருத்துவ சிகிச்சை, வாழ்வாதாரம் போன்ற தேவைகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகளுக்காகவும் மற்றும் இலவசக் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உதவிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சிபாரிசுகளுக்கு அமைய பாதிக் கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (2-250)



பசுமை எனும் மகுடம் தாங்கிய சஞ்சிகை கடந்த 15ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு வவுனியா குட்செட் வீதியில் உள்ள கருமாரி அம்மன் கோவிலில் வைத்து வெளியிடப்பட்டது.சஞ்சிகையின் முதற்பிரதியை வவுனியா குருமன் காட்டைச் சேர்ந்த மூத்த விவசாயி எம்.குமாரகுலசிங்கம் பெற்றுக் கொண்டார். (படம்:-குருமன்காடு செய்தியாளர்)

காணாமல் போனோர் உயிருடன் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை

பிரதமர் வெளியிட்ட கருத்துக்கு மன்னார் பிரஜைகள் குழு கண்டனம்

(குருமன்காடு)

காணாமல் போனவர்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்திற்கு மன்னார் பிரஜைகள் குழு கண்டனம் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய பிரதமர், காணாமல் போனவர்கள் தற்போது உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது என மன்னார் பிரஜைகள் குழுவின் இணைப்பாளர் அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, கடந்த 2009ஆம் ஆண்டு அருட்தந்தை பிரான்சிஸ்டன் அதிகளவிலானோர் இராணுவத்திடம் சரணடைந்ததாக குறிப்பிட்ட அவர், அவர்களும் காணாமல் போனவர்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

காணாமல் போனவர்கள் தற்போது உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றால் காணாமல் போனவர்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் எங்கே என்றும் அந்தோனி சகாயம் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, பிரதமரின் கருத்து தொடர்பில்காணாமல்போனவர்களின்பெற்றோர்களை அழைத்து மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

திருத்தம் செய்யப்பட்டுக்கொண்டிருந்த

லொறியுடன் சொகுசு பேருந்து மோதி ஒருவர் ஸ்தலத்தில் பலி!

8 பேர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு பேருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெல் லொறியுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 8 பேர் காயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினமிரவு 11 மணியளவில் வவுனியா ஈரப்பெரியகுளம் கல்குன்னா மடுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் மரதன்கடவலையைச் சேர்ந்த எம்.நஸீர் (வயது-38) என்பவரே ஸ்தலத்தில் பலியான வராவார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கிளிநொச்சியில் இருந்து மரதன்கடவல நோக்கி நெல் ஏற்றிச் சென்றவேளை ஹன் டர்ரக வாகனம்கல்குன்னாமடு பிரதேசத்தில் லொறியின் சக்கரத்தில் காற்று போனமையினால் வீதியோரமாக நிறுத்தப்பட்டு, பட்டா ரக வாகன ஒளியின் உதவியுடன் சக்கரங்களை மாற்றிக்கொண்டிருந்தவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற சொகுசு பேருந்து திருத்தம் செய்து கொண்டிருந்த வாகனங்கள் மீது மோதியுள்ளது.

இதன் காரணமாக சக்கரங்களை கழற்றி திருத்தம் செய்து கொண்டிருந்த ஒருவர் பலியானதுடன் மேலும் எண்மர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பேருந்தின் சாரதியையும் கைது செய்தனர். (2-250)

பண்டாரிக்குளத்தில் கடை உடைத்து துணிகரத்திருட்டு

உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறையீடு

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பாடசாலை வீதியில் இருக்கும் புத்தகம் மற்றும் அழகுசாதன விற்பனை நிலையத்தில் துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த வர்த்தக நிலையத்தின் வர்த்தகர், வியாபார நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் தனது வியாபார நிலையத்தினை மூடிவிட்டுச் சென்றுள்ளார். நேற்று காலை தனது வியாபார நிலையத்தினை திறந்தபோது பின்பக்கம் அமைக்கப்பட்டிருந்த வாசல் கதவு உடைக்கப்பட்டது தெரிய வந்ததையடுத்து வவுனியா பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இத் திருட்டுச் இச்சம்பவத்தில் பத்தாயிரம் ரூபாய் பணம் உட்பட பெறுமதியான பொருட்களும் திருடர்களால் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, அண்மைக் காலமாக வவுனியாவில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

மணலாறில் தமிழர்களின் விவசாயக்காணிகளை விடுக்குமாறுகோரி நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்



தமிழர்களுடைய பூர்வீக நிலமான மணலாறில் காணி அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டு தற்போது இராணுவத்தினரின் வசமுள்ள 2ஆயிரத்து 149 ஏக்கர் விவசாயக் காணிகளை விடுவிக்குமாறு கோரி கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தம்முடன் தாங்கியிருந்தனர்.

'ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத்தெரிவிக்கையில், தமது விவசாய நிலங்கள் மணலாறு பகுதியில் சூனியப் பிரதேசம் எனும் பெயரில் இராணுவத்தினரின் வசமிருந்தது.

இவை பின்னர்வெலி ஓயா, மகாவலி அபிவிருத்தி திட்டத்தினுள்உள்வாங்கப்பட்டுவெளி மாவட்டவிவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. இந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்ஊடாக எங்கள் விவசாய நிலங்கள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு வருகின்றன.

துரித மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்வைக்கப்படும் 2 ஏக்கர் காணி வழங்கல் முறையானது எமது சொந்தக் காணிகளுக்கு பதிலாக எமது விருப்பத்திற்கு மாறாக மாற்றுக்காணி வழங்குவதற்கான ஏற்பாடாகும். இதனை எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

கடந்த அரசாங்கங்கள் எங்களுக்கு விளைவித்த அநீதியை ஆட்சியிலுள்ள அரசாங்கமாவது புரிந்து கொண்டு எங்கள் பிரச்சினையை நிவர்த்தி செய்யவேண்டுமெனக் கூறி ஜனாதிபதிக்கு வழங்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.மோகன்ராஜிடம் இம் மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைகையளித்தனர்.

இதனை உதவி அரசாங்க அதிபர் ஏற்றுக்கொண்டார். பொதுமக்கள்மத்தியில்உரையாற்றிய வடக்குமாகாணசபை உறுப்பினர்அன்னராஜாதன், இம்மக்களின் பிரச்சினைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றாகும்.

தற்போது மேற்படி பிரதேச மக்களின் விவசாய நிலங்கள் வெளிமாவட்ட விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

இதனை வடக்கு மாகாண சபை ஊடாக ஜனாதிபதி மட்டத்திற்கு தெரியப்படுத்துவதாகவும் இதற்கான தீர்வு காலப்போக்கில் கிடைக்குமெனவும் கூறினார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழர்களுடைய பூர்வீக நிலமாகிய மணலாறில் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக நாங்கள் பரம்பரையாக வாழ்ந்ததோடு 1950ஆம் ஆண்டு தொடக்கம் இதற்கு காணி அனுமதிச்சீட்டும்வழங்கப்பட்டுள்ளது.

15 சித்திரை 1988 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் எங்களுடைய விவசாய நிலங்கள் யாவும் வெலிஓயா மகாவலி திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டு தற்போது எங்களுடைய விவசாய நிலங்கள் வெளிமாவட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக முல்லைத்தீவின் பெரும்பாலான இடங்கள் மகாவலி திட்டத்தில் உள்வாங்கப்பட்டு மேலும் வெளிமாவட்டகுடியேற்றங்கள்ஊக்குவிக்கப்பட்டதுடன் அத்திட்டத்தில் அதிகமான நிலங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

சுமார் 2ஆயிரத்து149 ஏக்கர் காணிகளில் சுமார் 929 ஏக்கர் நீர்ப்பாசன விவசாய நிலங்கள் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில்மேலும் ஏனைய விவசாய நிலங்களும் மகாவலி அதிகார சபையால் வெளிமாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் தொடர்ச்சியான நில அபகரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த அரசாங்கத்திடம் எத்தனையோ கோரிக் கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் எங்களுக்கு எந்த நிவாரணமும் முன்வைக்கப்பட வில்லை. எனவேதங்களுடையநல்லாட்சியில் எங்களுக்கு நியாயமான தீர்வைப்பெற்றுக்கொள்ளஆவன செய்யுமாறுவேண்டுகின்றோம் என அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-301)

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்து பாரிய பிரச்சினையாகவுள்ளது

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.லிங்கநாதன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவில் இருந்து தண்டுவான் வழியான இ.போ.ச.பேருந்து சேவையானது மக்களுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதமாகக் கருத வேண்டும். இச்சேவையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென பாராளு மன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பேருந்து சேவையானது கடந்த 14ஆம் திகதி காலை 7 மணியளவில்தண்டுவான் பாடசாலை முன்பாக விருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆரம்பிக்கப்பட்ட பேருந்து சேவையினை மக்கள் பெரும் வரப்பிரசாதமாக கருதி முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் மக்கள் உரிய முறையில் இச் சேவையினை பயன்படுத்தத் தவறினால்இடைநிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றலாம் என்றும் கூறினார்.

அதன்பின்னர் வவுனியா மாவட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.லிங்க நாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

நெடுங்கேணிநகரைமையப்படுத்தி சுமார் 30 பின் தங்கிய கிராமங்கள் இருக்கின்றன. இவற்றில் எல்லைப்புற கிராமங்களாகவும் பழைமை வாய்ந்த கிராமங்களாகவும் போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் பலகிராமங்கள்உள்ளன.

அத்துடன்இக்கிராமங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களின் அடிப்படைத் தேவைகளைப்பூர்த்திசெய்வதற்கு போக்குவரத்துப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது.

இதனைப்போக்க உரிய அதிகாரிகள் உள்ளூர் சேவைகளுக்கென இரண்டு பேருந்துகளை நெடுங்கேணி நகரில் நிரந்தரமாக சேவையாற்ற வழிசெய்யவேண்டுமெனவேண்டுகோள் விடுத்தார். (2-302)

எம்பிலிப்பிட்டியவில் அராஜகம்

பொலிஸ்மா அதிபர் தலையிட வேண்டும்

எம்பிலிப்பிட்டிய அராஜகத துக்கு உட்பட்டுள்ளதாகவும், இதிலிருந்து அப்பிரதேசத்தை மீட்பதற்கு பொலிஸ்மா அதிபர் தலையிட வேண்டும் எனவும ஜாதிக ஹெல உறுமயவின் தலை வர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் குற்ற வாளிகள் சிம்மாசனமேறி யுள்ளனர். பகிரங்கமாக கஞ்சா மற்றும் ஏனைய போதைப் பொருட்களின் விற்பனைகள் இடம்பெற்று வருவதாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்பிரதேசத்திலுள்ள பிரபல பெண் டாக்டர் ஒருவர் வீட்டில இருக்கும் போது காடையர்கள சிலரினால் அவர் பாலியல் துஷ பிரயோகம் செய்ய முயற்சிக் கப்பட்டமை இந்த அராஜக நிலைக்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

எம்பிலிப்பிட்டிய இளைஞர் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொண்டு உரிய குற்ற வாளியைக் கண்டுபிடிக்க வேண்டும். எம்பிலிப்பிட்டிய வில் இருந்த முன்னாள் உத விப் பொலிஸ் அதிகாரி தர்ம ரத்ன, அப்பிரதேசத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பாரிய நடவடிக்கையொன்றை முன்னெடுத்தார்.

இருப்பி னும், தற் பொழுது எம்பிலிப்பிட்டியவின் அரசர் களாக குற்றவாளிகள் மாறி யுள்ளார்கள் எனவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



தாயும் மகளும் விபத்தில் பலி!

15 வயதேயான மகனுக்கு கார் ஓட்ட கற்றுக்கொடுத்த தாய்க்கும் மறியல்

15 வயதேயான சிறுவன் செலுத்திச் சென்ற கார் மோதி தாயும் மகளும் உயிரிழந்த சம்பவத்தையடுத்து பொது மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை மகனுக்கு கார் ஓட்டச் சொல்லிக் கொடுத்த தாயையும் மகனையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தெமட்டகொடையில், பாத சாரி கடவையை கடக்க முய ன்ற தாயையும் மகளையும் தங்களுடைய காரில் முட்டி மோதி உயிரிழக்க செய்த தாக கூறப்படும் அக்காரின் சார தியாக செயற்பட்ட 15 வயதான மொஹமட் பாரூக் மற்றும் அவருடைய தாயான ஷகீலா பானு ஆகிய இருவரையும் விளக கமறியலில் வைக் குமாறு கொழும்பு பிரதான நீதவான், நேற்று முன்தினம் ஞாயிற் றுக் கிழமை உத்தரவிட்டுள்ளார்.

தாயை எதிர்வரும் 25 ஆம திகதி வரையிலும், அவரு டைய 15 வயதான மகனை 29ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கு மாறே உத்தரவிட்டுள்ளது.

தெமட்டகொடை பேஸ்லைன வீதியில் புகையிரத விளை யாட்டு மைதானத்துக்கு அரு கில், சனிக்கிழமை (16) இரவு 8.50க்கு பாதசாரி கடவையை கடக்க முயன்ற கொழும்பு- 08 பேஸ் லைன் வீதி, ரி20 தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதான வீர சிங்ஹ ஆரச்சிலாகே அனுலா, அவரது 10 வயது மகளான சமாதி ரஷ்மிகா ஆகிய இரு வரையும தங்களுடைய காரில் முட்டி மோதி உயிரிழக்க செய்ததாக அவ்விருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்விபத்தில், படுகாய மடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின னர் உயிரிழந்தனர்.

இவ்விருவரும், இரவு நேர உணவினைப் பெற்றுக் கொள்வதற்கென சாப்பா ட்டுக் கடைக்குச் செல்வதற் காக பாதசாரி கடவையில் வீதியை கடந்து கொண்டி ருந்த போதே இவ விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவனையும சிறுவனின் தாயையும் கைது செய்த பொலிஸார், அவர் களிடம் மேற்கொண்ட விசார ணைகளில் சிறுவனின் தாயே, காரினைச் செலுத்திச் செல்வதற்கான அனுமதி யினை வழங்கியதுடன், காரின சாவியையும் வழங்கியிருந்த தாகவும் தெரிய வந்துள்ளது.

குறித்த சிறுவனின், தந்தை கடந்த வெள்ளிக் கிழமையே வெளிநாட்டுக் குச் சென் றதாகவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், இவ் விபத்துத் தொடர்பில் மேலதிக விசார ணைகளை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ)

பெண்ணின் உடலிலிருந்து போதைப்பொருள் மீட்பு!

தெமட்டகொட வாகன விபத்தில் உயிரிழந்த பெண் ணின் உடலில் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

தெமட்டகொட பேஸ்லைன வீதியின் மஞ்சள் கடவையில் 47 வயதான பெண் ஒரு வரும் அவரது 10 வயது மக ளும் வாகனத்தில் மோது ண்டு உயிரிழந்திருந்தனர்.

உயிரிழந்த பெண்ணின் உடலில் மறைத்து வைக் கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலை பொலி ஸார் இந்த தகவலை வெளி யிட்டுள்ளனர்.

வாகன விபத்தினை மேற் கொண்டதாக குற்றச்சாட்டின் பேரில் பாடசாலை மாணவர் ஒருவரும் அவரது தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபத்துக்கு காரணமான இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலை யில் வழக்கை திசைதிருப்பும் வகையிலும் குற்றவாளி களை தப்பிக்க வைக்கும் முயற்சியாக போதைப் பொருள் மீட்பு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர். (இ)

பயங்கரவாதக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட

முன்னாள் ஜனாதிபதி இங்கிலாந்து செல்ல இலங்கை அரசின் அழுத்தமும் காரணமாம்

(மாலே)

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட், தனது சிகிச்சைக்காக ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள நிலை யில், அவர் அவ்வாறு செல் வதற்கு, இலங்கையின் அழுத் தமும் காரணமாக அமைந் ததாக, அவரது மனைவி லைலா நஷீட் தெரிவித்துள் ளார்.

பயங்கரவாதக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு, 13 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன் னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட், முள்ளந்தண்டுப் பிரச் சினைகள் காரணமாக அவ திப்பட்டு வருகின்ற நிலை யில், அதற்கான சிகிச்சை களையும் பெற்றுவந்தார்.

அவருக்கான மேலதிக சிகிச்சைகள் தேவைப்படு வதாகவும், அதற்காக அனு மதிக்குமாறும் கோரிக்கை கள் விடுக்கப்பட்டன.

ஆரம்பத்தில், அதற்குச் சாதகமான சமிக்ஞைகள் வழங்கப்படாத போதிலும், தற்போது, அவர் விரைவில் ஐக்கிய இராச்சியம் செல்ல வுள்ளார் என மாலைதீவு வெளிநாட்டமைச்சு அறிவித் துள்ளது.

தனது கணவருக்கான சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவரது மனைவி, "சிகிச்சைகளுக்காக ஐக்கிய இராச்சியத்துக்கு வர அனு மதிக்கப்பட்டுள்ளமை, பெரிய விடயமாகும். சிறையில் அவர் தடுமாறி வந்த நிலையில், இதற்காக, மாதக்கணக்கில் நாம் முயன்று வந்தோம். எனினும், அரசாங்கம் அதற்கு அனுமதிக்குமென நாம் எண ணவில்லை" எனத் தெரிவித் தார்.

அவருக்கான அனுமதி எவ்வாறு கிடைக்கப்பெற்றது எனக் கேட்கப்பட்டபோது, இலங்கை, ஐக்கிய இராச் சியம், இந்தியா உள்ளிட்ட பல அரசாங்கங்கள், அவ ருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததாகத் தெரிவித்தார். "இலங்கை, பிரித்தானிய அரசாங்கங்கள், மிகவும் ஆதரவுடன் செயற்பட்டன" எனக் குறிப்பிட்ட அவர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர, கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட விஜயத்தை யும், ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாடு மற்றும் பொது நலவாய அலுவலகத்துக்கான இராஜாங்க அமைச்சரான ஹியூகோ ஸ்வையர், கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட விஜயம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் புதிய அர சாங்கம், கடந்தாண்டு பதவி யேற்றதைத் தொடர்ந்து, மாலைதீவுகளின் அரசாங் கத்துக்கு, மனித உரிமைகள் தொடர்பாகக் கடுமையான நிலைப்பாட்டை, இலங்கை பின்பற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

பாலியல் ரீதியாக மற்றும் பகிடிவதையால்

பாதிக்கப்பட்ட பல்கலை. மாணவருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பாலியல் ரீதியான வன் முறைகளுக்கோ அல்லது பால் அடிப்படையிலான வன் முறைகளுக்கோ உள்ளாக் கப்பட்ட பல்கலைக்கழக மாண வர்களுக்கு அதற்கான நிவா ரணம் வழங்கப்படுவதுடன் குற்றவாளிகள் மீது இறுக் கமான சட்ட நடவடிக்கை எடு த்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கவும் நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் மோகன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக ஆங்கில வார இதழ் ஒன்றி ற்கு கருத்துத் தெரிவித்த அவர்,

குற்றவாளிகளுக்கு எதி ராக நடவடிக்கை எடுப்பதற்கு உயர்கல்வி அமைச்சின் ஊடாக சட்ட ஏற்பாடுகள் செய்யப்ப டும். இவ்வாறான குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எனது தலை மையில் மூன்றுபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள் ளது.

மனிதவுரிமைகள் ஆணைக் குழு தலைவர் பேராசிரியர் தீபிக்க உடுகம, ஸ்ரீ ஜயவர்த் தனபுர பல்கலைக்கழக பேரா சிரியர் குமுது விஜேவர்த்தன ஏனைய உறுப்பினர்களாவர்.

பால்நிலை சமத்துவம் குறி த்து இந்தக்குழு ஒரு ஒழுங்கு முறையில் கூடி எடுக்க வேண் டிய நடவடிக்கைகள்குறித்து ஆராயும்.

மேலும் பகிடிவதை தொடர் பாகமுறைப்பாடுகள் உள்ளன. இவற்றை அறிக்கையிடுவத ற்கு ஏற்றவகையிலான செயன் முறை ஒன்றை அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும். பாதிக் கப்பட்ட மாணவர்கள் முறைப் பாடு செய்வதற்கு ஒரு நிலை யம் ஸ்தாபிக்கப்பட்டிருக் கிறது.

அவர்கள் இது தொடர்பான உளவள ஆலோசனைகளை வழங்குவதுடன் சட்ட ஆலோ சனை தொடர்பாகவும் முன் னெச்சரிக்கையுடன்நடந்துகொள் வது தொடர்பாகவும் நடவடிக் கைகளை எடுப்பர். பாதிக்கப் பட்டவருடைய அடையாளத்தை பாதுகாத்து உறுதிப்படுத்து வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒவ்வொரு பல்கலைக் கழ கங்களிலும் இதற்கென ஒரு தனியான பிரிவு ஸ்தாபிக்கப் பட்டு பிரதான நிலையத்து டன் இணைந்து பாதிக்கப்பட் டவர்களுக்கு உதவி செய்யும்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை நூறுவீதம் இல் லாதொழிக்க முடியாவிட்டா லும் பாலியல் ரீதியான மற் றும் பால் அடிப்படையிலான வன்முறைகளை ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும்.

மேலும் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களினால் மாணவர்கள் துஷ்பிரயோகம் செய் யப்படும் சம்பவங்கள் தொடர் பாகவும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவி த்துள்ளார். (3)



புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ சனசமூக நிலைய ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

பருத்தித்துறை மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்பணி ஜே.ஜே.மவுலிஸ் அடிகளாரின் பிரியாவிடை நிகழ்வும் மறைக்கோட்ட புதிய குரு முதல்வர் அருட்பணி ஜே.யாவிஸ் அடிகளாரின் வரவேற்பு நிகழ்வும் அண்மையில் புனிததோமையார் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற போது...



சிறுவர்களையும் பெண்களையும் இலக்கு குழுக்களாக கொண்டு 12 கிராம சேவகர் பிரிவில் சிறுவர் கழகங்கள், மழலைக்குழுக்கள், சமூக மட்ட அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் போன்றவற்றின் ஊடாக பயிற்சிப்பட்டறைகள், செயலமர்வுகள் என்பவற்றினை ஆளுமை விருத்திக்கான வகையில் மேற்கொண்டு வருகின்றனர். இச் செயற்றிட்டத்தின் அடிப்படையில் இப்பிரதேச சிறுவர்களுக்கான ஆண்டிறுதி பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் அமலமரித்தியாகி சுகவாழ்வு நிலையத்தின் உள சமூகப் பணிப்பாளர் பி.றெனிபஸ் தலைமையில் புத்தூர் பிரதேச சபை பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற போது...

யாழ்ப்பாணம் எஸ். ஓ.எஸ். சிறுவர் கழகத்தினரால் நத்தார் தின நிகழ்வுகள் அண்மையில் கொண்டாடப்பட்ட போது... (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

ஒற்றைத் தலைவலிக்கான காரணங்களும் தீர்வுகளும்



தாங்கவே முடியாதது எனச் சில வலிகள் உண்டு. அந்தப் பட்டியலில் முதல் வலி... தலைவலி. அதிலும், ஒற்றைத்தலைவலி வந்துவிட்டால்... அதோ கதி. தலையில் ஒரு பக்கமாகத் தொடர்ந்து வலித்துக் கொண்டே இருக்கும் ஒரு வேலையும் செய்ய முடியாது. கையும் ஓடாது, காலும் ஓடாது. சிலருக்கு மாலை வேளையானால் தலைவலி தொடங்கிவிடும். அதிக சத்தம் கேட்டால், மனதுக்குப் பிடிக்காத சம்பவங்கள் நடந்தால்... என தலைவலிக்கான காரணப் பட்டியலின் நீளம் அதிகம். தலைவலிக்கும் நேரத்தில் யாராவது அன்பாகப் பேசினால் கூட எரிச்சலாக வரும் கோபம் தலைக்கு ஏறும். இதற்குத் தீர்வே இல்லையா? எனப் புலம்புவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. காலையில் எழுந்து பல் துலக்கியதுகூட, ஒற்றைத் தலைவலிக்குக் காரணமாக இருக்கலாம் என்றால் நம்ப முடிகிறதா?

ஒற்றைத்தலைவலி ஏன் வருகிறது?

அதிக வேலை, மனக் குழப்பம், மன அழுத்தம் ஆகியவையே, ஒற்றைத்தலைவலி வருவதற்கு முக்கியமான காரணங்களாக அமைகிறது. உடலின் வெப்பமும் தலைவலி வருவதற்கு ஒரு காரணம். உடலில் வெப்பம் அதிகரிக்கும் போது, தலைக்குச் செல்லும் நரம்பு மண்டலங்களில் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால், அதன் இயக்கத்தில் மாறுபாடு உண்டாகி, தலைவலி வரும். உடல் வெப்பத்தைச் சமநிலையில் வைக்க, வாரம் ஒரு முறையாவது எண்ணெய்க் குளியல் எடுத்தால் போதும்.

சிலருக்கு மலச்சிக்கல் பிரச்சினை இருந்தாலும், உடலில் வெப்பம் அதிகமாகி, தலைவலியை உண்டாக்கும். உணவில் உப்பு, காரம், புளிப்பு சம அளவில் இருக்க வேண்டும். இதில், ஏதேனும் ஒன்றை மட்டும், தொடர்ந்து அதிகமாக எடுத்துக்கொள்வோருக்கும் இந்தப் பிரச்சினை உண்டாவதற்கு வாய்ப்புகள் உண்டு.

இரத்தக் குழாய்கள் விரிவடைதல் மற்றும் வீங்குதலாலும் வலி உண்டாகும். அந்த நேரத்தில், நைட்ரிக் ஒக்ஸைடு அமிலம் அதிகமாகச் சுரக்கும். அது, இரத்தக் குழாய்களைத் தூண்டும்.

5-ஹைட்ராக்சிரிப்டமின் (5-Hydroxytryptamine) எனும் அமிலத்தின் அளவும் இரத்தத்தில் அதிகரிக்கும். அப்போது ஏற்படும் சீரற்ற இரத்த ஓட்டத்தினால் நரம்புகள் பாதிக்கப்பட்டு, வலி உணரப்படும். வலிஉணர்ச்சியைத் தரக்கூடிய ட்ரைஜெமினல் (Trigeminal) என்னும் அமிலமும் அதிகம் சுரந்து, வலி உணர்வை அதிகரிக்கும். இவ்வாறு உண்டாகும் வலி, அதிக பட்சம் நான்கு மணி நேரம் வரையிலும் நீடிக்கலாம். சிலருக்கு இரண்டு பக்கங்களிலும் வலி வரலாம்.

பார்வை நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளாலும் ஒற்றைத்தலைவலி வரும். இரவில் அதிக நேரம் கண் விழித்திருத்தல், காலையில் அதிக நேரம் உறங்குதல், வெயிலில் அதிக நேரம் இருப்பதும் கூட தலைவலிக்குக் காரணமாகிவிடும். உடலின் வேறு பிரச்சினைகளுக்காக அடிக்கடி மருந்து, மாத்திரைகள் எடுத்துக்கொள்வோருக்கும் ஒற்றைத்தலைவலி ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

அறிகுறிகள் என்னென்ன?

வலி வருவதை சில அறிகுறிகளை வைத்து முன்னரே கண்டுகொள்ளலாம். திடீரென சில பகுதிகள் வட்டமாகப் பார்வைக்குத் தெரியாமல் போவது (Scotoma), ஒரு பக்கம் மட்டும் தெரியாமல் போவது (Hemianopsia). கண்ணில் 'பளிச் பளிச்' என மின்னுவது (Teic hop sia), சமதளமான இடத்திலும் வரிவரியாகக் கோடுகள் தெரிவது (Fortification Spectra), கண்ணுக்குள் பூச்சி பறப்பது, எதிரில்உள்ள உருவம கறுப்பாகத் தெரிவது எனச் சில அறிகுறிகள் தென்படும்.

சிலருக்கு, தற்காலிகமாகப் பேச்சு வராது. ஒரு பக்கமாக கை, கால்களில் துடிப்பு, மதமதப்பு உண்டாகி சரியாகும். வாந்தி அல்லது குமட்டல் உணர்வு இருக்கும். இந்த நேரத்தில், அமைதியாக அறைக்குள், அனைத்து விளக்குகளையும் அணைத்து விட்டு, இருளை ஏற்படுத்திக் கொண்டு உறங்குவது சற்று ஆறுதல் தரும்.

உங்கள் பற்பசையில் இருக்கிறது சிக்கல்

சமீப காலங்களில் பல் துலக்கும் பற்பசைகளாலும், ஒற்றைத்தலை வலி வருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பல்துலக்கியதும், கடமைக்கு என வாய் கொப்பளிப்போருக்குத் தான் இந்த வாய்ப்பு இன்னும் அதிகம். நாக்கிலேயே ஒட்டியிருக்கும் பற்பசையின் வேதிக்கலவை, சாப்பிடும் போது அப்படியே உடலுக்குள் சென்றுவிடும். நேரடியாக நுரையீரலைப் பாதிக்கும். பல நாட்களுக்குத் தொடர்ந்து இவ்வாறு நடக்கும் போது, தலைவலியை உண்டாக்கி விடும். உடுத்தும் உடைகளில் ஒட்டியிருக்கும் சலவைத்தூள்கள், வாசனைத் திரவியங்கள் வியர்வை வழியாக உடலில் கலந்தாலும் இப்படியான சிக்கல்கள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு சொக்லேட், சீஸ், எண்ணெய் உணவு, வெண்ணெய், புளிப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவதாலும் வலி வரும்.

பாதிப்பது அதிகம் பெண்களே!

ஆண்களைக்காட்டிலும், பெண்களே ஒற்றைத்தலை வலியால் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு, வயிற்றில் நீர்க்கட்டிகள், கர்ப்பப்பை பிரச்சினை, ஒழுங்கற்ற மாதவிலக்கு மற்றும் வெள்ளைபடுதல் போன்றவை காரணமாக இருக்கின்றன. மேலும் பூப்பெய்தும் காலம், மாதவிலக்கு வரும் காலகட்டம், மெனோபாஸ் நிலையை அடையும் போது, கருத்தடைக்காகஓமோன் மாத்திரைகள் சாப்பிடும் நேரங்களிலும ஒற்றைத்தலைவலி வருவதற்கான வாய்ப்புகள் அதிகம.

பீடி, சிகரெட், புகையிலை பயன்படுத்தும் ஆண்களின் உடலில் உண்டாகும் பித்தத்தால், உடலின் ஆற்றல் குறையும். இதனால், வயிற்றுப் புண் உண்டாகி, வெப்பம் அதிகரிக்கும். இதுவும் ஒற்றைத்தலைவலியில் முடியும்.

எப்படிக் குணப்படுத்துவது?

பக்கவாத ஒற்றைத் தலைவலி (Hemiplegic Migraine), கண் நரம்பு ஒற்றைத்தலைவலி (Ophthalmoplegic Migraine), முக நரம்பு ஒற்றைத்தலைவலி (Facioplegic Migraine) என வலிகளில் பலவகை உள்ளன. மனதை அமைதியாக வைத்துக்கொள்ளுதல், தேவையற்ற சிந்தனையைத் தவிர்த்தல், நல்ல தூக்கம் என வாழ்க்கைமுறைகளை மாற்றிக்கொண்டாலே வலி வராமல் தடுத்துக்கொள்ள முடியும். அலுப்பு தரக்கூடிய ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் இருத்தல், மனதுக்குப்பிடித்த வேலைகளைச் செய்தல், வயல் வெளி, பூங்கா, இயற்கைக் காட்சிகளை ரசித்தல் எனப் பசுமையான இடங்களுக்குச் செல்வதன் மூலம் மனதை அமைதிப்படுத்தி, வலி உண்டாகாமல் தவிர்க்கலாம். அத்துடன் உடலில் வெப்பம் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். தலையில் நீர்கோர்த்தல், மூளையில் கட்டி என ஒற்றைத்தலைவலி ஏற்பட பல காரணங்கள்உள்ளன.எனவே, சாதாரண தலை வலி என்று புறக்கணிக்காமல், ஏன் ஏற்படுகிறது எனக் காரணத்தை ஆராய்ந்து, அதற்கான சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும். வலி, தாங்கவே முடியாத பட்சத்தில் மட்டும் மருத்துவரின் பரிந்துரைப்படி வலி நிவாரண மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம். ஒற்றைத் தலைவலி தீர்க்கவே முடியாத நோய் என்றுதான் பலரும் பயப்படுகின்றனர். அது, ஓர் அறிகுறிமட்டுமே. நோய்க்கான அறிகுறியை அறிந்து வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டால், ஒற்றைத் தலைவலியில் இருந்து விடுபடுவது நிச்சயம்.

Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

விண்வெளியில் பூத்த முதல் பூ!

அறிவியல் வளர்ச்சியின் மாபெரும சாதனையாக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் வளர்க்கப்பட்ட பூச்செடி ஒன்று முதல் முதலாக பூத்துள்ள பூக்களின் படங்களை விண்வெளி வீரர்கள் வெளியிட்டுள்ளனர்.

பூமியிலிருந்து சுமார் 250 கி.மீ தொலைவில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் செயற்பட்டு வருகிறது.

இந்த ஆய்வு மையத்தில் பூச் செடிகளை வளர்க்க முடியுமா என்ற கேள்வி எழுந்ததை தொடர்ந்து கடந்த நவம்பர் 16 ஆம் திகதி சின்னியா என்ற பூச்செடி விதைகளை விதைத்தனர்.

சரியாக புத்தாண்டு தினத்தில் பூக்கள் மலரும் விதத்தில் வீரர்கள் அந்த செடிகளை பராமரித்து வந்துள்ளனர்.

பூச்செடிகளுக்கு சூரிய வெளிச்சம் தேவை என்பதால், அதற்கு மாறாக LED விளக்குகள் மூலம் ஒளியை உற்பத்தி செய்து செடிகளை வளர்த்துள்ளனர்.

ஆராய்ச்சியாளர்களின் கடின முயற்சிக்கு பலனாக அழகான சின்னியா மலர்கள் முழுமையாக தற்போது பூத்துள்ளன.

இந்த பூக்களின் படங்களை "விண்வெளியில் பூத்த முதல் பூ" என்ற தலைப்பில் அமெரிக்க விண்வெளி வீரரான ஸ்கோட் கெல்லி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம், விண்வெளியில் பிற தாவரங்களையும் வளர்க்க முடியும் என்பது நிரூபணம் ஆகியுள்ளது.

ஆனால், இதற்கு முன்னதாகவே விண்வெளி வீரர்கள் கீரை வகை தாவரங்களை பயிருட்டு வளர்த்து அதையே உணவாகவும் உண்டு வருகின்றனர்.

இதன் கட்ட சாதனையாக, விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் தக்காளி உள்ளிட்ட பழவகை தாவரங்களையும் வளர்க்க ஆராய்ச்சியாளர்கள் முயன்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

பருவநிலையை ஆய்வு செய்யும் செயற்கைக்கோள்களுடன்

அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் 9 ரொக்கெட் நேற்று விண்ணில் பாய்ந்தது



(நியூயோர்க்)

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் இணைந்து அமைத்த சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு 'ஸ்பேஸ் எக்ஸ்' ரொக்கெட் மூலமாக பருவநிலை மாற்றத்தை ஆய்வுசெய்யும் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்த அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா முடிவு செய்தது.

சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், கட்டுமான பொருட்கள் போன்றவை தனியாருக்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் என்ற ரொக்கெட் மூலம் அனுப்பப்பட்டு வந்தன.

இந்நிலையில், அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள புளோரிடா மாநிலத்தின் கேப் கனவெரல் விமானப்படை நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த ஏவுதளத்தில் இருந்து 23 பிரிவுகளை கொண்ட ஒன்பது நிலைகளில் இயங்கும் "ஸ்பேஸ் எக்ஸ் பால் கன் 9" ரொக்கெட் கடந்த மாதம் புறப்பட்டு சென்றது. அதில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 11 செயற்கைக் கோள்கள் இணைக்கப்பட்டிருந்தன.

பூமியில் இருந்து சீறிப்பாய்ந்து சென்ற அந்த ரொக்கெட்டின் 156 அடி நீளம்கொண்ட முதல்நிலை உந்து இயந்திரம் (first stage rocket) ரொக்கெட்டில் இருந்து கழன்று, பிரிந்து, பத்தே நிமிடங்களில் பூமியை நோக்கி பத்திரமாக திரும்பி வந்தது. இதைக்கண்ட ஆர்ப்காம் நிறுவன பொறியாளர்களும், பணியாளர்களும் உற்சாக மிகுதியால் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து துள்ளிக்குதித்தனர்.

அதேவகையிலான "ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் 9" ரொக்கெட் மூலம் பருவநிலை மாற்றத்தை ஆய்வு செய்யும் செயற்கைக்கோளை அமெரிக்கா நேற்று விண்ணில் செலுத்தியுள்ளது. கலிபோர்னியா அருகேயுள்ள வான்டன்பெர்க் விமானப் படைத்தளத்தில் இருந்து ஏவப்பட்ட அந்த ரொக்கெட் செயற்கைக் கோளை சுமந்தபடி திட்டமிட்ட இலக்கை நோக்கி வெற்றிகரமாக சென்று கொண்டிருப்பதாக நாசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனத் தயாரிப்பான ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட்டுகளின் 'டிராகன் கேப்ஸ்யூல்கள்' மூலமாக நாசா தனது விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு அனுப்ப முடிவு எடுத்திருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த செயற்கைகோளை சுமந்து செல்லும் "ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் 9" ரொக்கெட்டை பத்திரமாக கடலில் தரையிறக்க விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.(இ)

உயிருக்கு போராடிய தாயாரை காப்பாற்றிய சிறுவனுக்கு விருது

கனடாவில் ஒரு நெகிழ்ச்சி சம்பவம்

கனடா நாட்டில் கார் விபத்தில் சிக்கிய தாயாரை அவரது 9 வயது மகன் துணிச்சலுடன் காப்பாறிய செயலை பாராட்டி அவருக்கு "துணிச்சலுக்கான" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பரித்தானிய கொலம்பியா மாகாணத்தில் உள்ள வில்லியம்ஸ் லேக் நகரில் Josef Aschwanden என்ற 9 வயது சிறுவன் தனது பெற்றோருடன் வசித்து வருகிறான்.

கடந்த புதன்கிழமை அன்று வீட்டிற்கு சில பொருட்களை அவர்களது காரில் கொண்டு வந்துள்ளனர்.

வீட்டில் தந்தை இல்லாததால் சிறுவனின் தாயார் காருக்கு அருகில் சென்று அங்குள்ள பொருட்களை வெளியே எடுக்க முயன்றுள்ளார்.

அப்போது கார் திடீரென பின்னோக்கி நகர்ந்து தாயார் மீது மோதி அவர் உடல் மீது நின்றுள்ளது. காரை அகற்ற முடியாமல் வலியால் துடித்த தாயாரைக்காப்பற்ற சிறுவன் விரைந்து வந்துள்ளான்.

சிறுவனாலும் காரை நகர்த்த முடியாததால் உடனடியாக வீட்டிற்கு சென்று மீட்பு குழுவினரின் 911 என்ற அவசர எண்ணை தொடர்பு கொண்டு விபத்து குறித்து தகவல் அளித்துள்ளான்.

அவசர எண்ணான 911 பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் சில தினங்களுக்கு முன்னர் தான் தனது பெற்றோர்களிடம் தெரிந்து கொண்டுள்ளான்.

அது மட்டுமல்லாமல், வீட்டிற்குள் இருந்த ஒரு நீண்ட உடுப்பை எடுத்து வந்து தாயாரை சுற்றி போர்த்தி விட்டு உடலில் இருந்து வெப்பம் குறையாமல் பாதுகாத்துள்ளான்.

சில நிமிடங்களுக்கு பிறகு மீட்புக்குழுவினர் அங்கு வந்து தாயாரை பத்திரமாக மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சிறுவனின் துணிச்சல் மிக்க செயலை பாராட்டி Cariboo Regional District துறை அதிகாரிகள் சிறுவனுக்கு 'துணிச்சலுக்கான' விருதை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளனர்.

சிறுவனை பாராட்டி பேசிய Steve Forseth என்ற அதிகாரி, 'விருது வென்ற சிறுவனுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அவசர எண்ணான 911 பற்றி தெரிந்து கொண்டு அதனை உரிய நேரத்தில் பயன்படுத்தியது பாராட்டுதலுக்குரியது.

இந்த சிறுவனை போன்று அனைத்து வயதினரும் 911 அவசர எண் குறித்து தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும் என அவர் விருது வழங்கும் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார். (இ)

புதிய மருந்துப் பரிசோதனைக்கு மனிதர்களை பயன்படுத்தும் அவலம்

பிரான்ஸில் ஒருவர் பலி!

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் மருத்துவப் பரிசோதனையில் ஏற்பட்ட பெரிய அசம்பாவித சம்பவமாக பரிசோதனைக்குள்ளான கோமா நிலை ஏற்பட்ட ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்பான வலி நிவாரணி மருந்தை சோதிப்பதற்காக ஆறு பேர் பயன்படுத்தப்பட்டார்கள்.

இந்த சோதனை வட மேற்கு பிரான்சில் உள்ள ரென்னெஸ் ஐரோப்பிய ஆய்வகத்தில் நடைபெற்றது. அப்போது இந்த துயர சம்பவம் நடைபெற்றுள்ளது. இதில் ஒருவர் கோமா நிலை ஏற்பட்ட நிலையிலும், மேலும் ஐந்து பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சோதனை உடனடியாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முனதினம் உயிரிழந்தார்.

சிகிச்சை பெற்றுவரும் ஐந்து பேரும் குணமடைந்து வருவதாகவும், அவர்களில் மூவருக்கு சரிப்படுத்த முடியாத பக்கவாத பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ரென்னெஸ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

ஐ.எஸ். தீவிரவாதிகள் அட்டூழியம் 400 பேரைக் கடத்திச் சென்றனர்

(பெய்ரூட்)

சிரியாவில் 85 பொதுமக்கள், 50 இராணுவத்தினரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளதாக ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது. 400 பேரை தீவிரவாதிகள் கடத்தி உள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

சிரியாவின் தெர்-அல்-ஜோர் என்ற நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கார் வெடிகுண்டுகள், தற்கொலைப் படை தாக்குதல் மற்றும் தலையை வெட்டி வீழ்த்தியும் ஏராளமானோரை கொன்றுள்ளதாக அந்த ஐ.நா. மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது. இவர்களில் 85 பொதுமக்கள், 50 இராணுவத்தினரும் அடங்குவர். பெரும்பாலானவர்கள் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் என சிரியா அரசு கூறியுள்ளது.

இதனிடையே 400 இற்கும் மேற்பட்டவர்கள் குறித்த தகவல் இல்லை என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கூறுகிறது. இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தீவிரவாதிகள் தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை குறித்து மாறுபட்ட தகவல்கள் வந்துள்ளன. சில 300 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என கூறுகின்றன.

இதுபோன்றே கடத்தப்பட்டவர்கள எண்ணிக்கை குறித்தும் முரணபட்ட தகவல்கள் உள்ளன. 300 பேர் கடத்தப்பட்டார்கள் என்றும் சில 400 இற்கும் அதிகமானோர் கடத்தப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றன.

கடத்தப்பட்டவர்களை தீவிரவாதிகள் கொல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையே, 300 பேரை தீவிரவாதிகள் கொன்றுள்ளதாக சிரியா அரசு குற்றஞ்சாட்டியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

புத்த பகவான் உயிருடன் இருந்திருந்தால் அவரும் சிறைக்கு செல்ல நேர்ந்திருக்கும்

உதய கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)

புத்த பகவான் உயிருடன் இருந்தால், அவரும் சிறை செல்ல நேரிடும் வகையிலான சட்டமூலம் ஒன்றையே அரசாங்கம் கொண்டு வரப்போகிறது என உதய கம்மன்பில தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக் கையில், இந்த சட்டமூலம் கொண்டு வந்தால் புத்த பகவான் கூட மடத் தில் அல்ல சிறையில் வாழ நேரிடும்.

சட்ட மூலத்திற்கு பிக்குமாரின் ஒழுக்கம் என்ற ஆடையை அணி வித்து பிக்குகள் அரசியலுக்கு வருவதை தடுக்கும் சூட்சுமமான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் 95 வீதமான பௌத்தர்கள் வாழ்கின்றனர். எனி னும் அது ஆசியாவின் பாலியல் தொழில் நிலையமாக மாறியுள்ளது.

இவ்வாறான சட்ட மூலத்தை கொண்டு வருவதன் ஊடாக இலங் கையும் தாய்லாந்தை போல ஆசி யாவின் பாலியல் தொழில் நிலை யமாகவோ அல்லது மதுபானசாலை யாகவோ மாறிவிடும்.

தேரவாத பிக்குகளுக்காக கொண்டு வரப்படும் இந்த சட்ட மூலம் ஊடாக தேரவாத பிக்குகள் மகாயான பிக்குகளாக மாற ஊக் கப்படுவதை காணமுடிகிறது.

பிக்கு சமூகம் என்பது பாரிய அமைப்பு, இதனால், பிக்கு ஒருவர் ஒழுக்கம் தவறி நடந்து கொண் டால், அவரை சங்கசானத்தில் இருந்து விலக்கும் அதிகாரம் பிக்கு மாருக்கே அன்றி வேறு நபர்க ளுக்கு இல்லை எனவும் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேலும் தெரிவித் தார். (இ)

பிரதமர் மோடிக்கு இரண்டாம் இடம்

(டில்லி)

இந்தியாவில் உள்ள பிரபலங் களின் டுவிட்டர் பின் தொடர்பவர் களில் அமிதாப்பச்சன் 1.76 கோடி பேர்களுடன் முதல் இடத்திலுள்ளார்.

அதற்கு அடுத்த இடத்தில் இருந்த பாலிவுட் நடிகர் ஷாருக் கான் தற்போது பின்னுக்கு தள்ளப் பட்டுள்ளார். மூன்றாம் இடத்தில் இருந்த பிரதமர் மோடி தற்போது இரண டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

மோடியை பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 17,371,600 ஆகும். அதேசமயம், ஷாருக்கானை பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 17,351,100 ஆக உள்ளது. பிரதமர் மோடியை பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதி கரித்து வருவதாகவும் டுவிட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடியின் டுவிட்டர் கணக்கு 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உலகம் முழு

வதிலும அதிகம பேர பினபறறக கூடிய தலைவர்களின் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விற்கு பின், இரண்டாம் இடத்தை மோடி பிடித்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (இ)

காஷ்மீரில் உறைய வைக்கும் கடும் குளிரால் மக்கள் அவதி

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த மாதம் 21 ஆம் திகதி குளிர் காலம், ஆரம்பமாகியது. இந்த மாநிலத்தில் பனிப்பொழிவு அதிக மாக இருப்பதால், புகழ்பெற்ற டால் ஏரி உட்பட அனைத்து நீர்நிலை களும் உறைந்து காணப்படுகின்றன.

மாநிலத்தின் பல பகுதிகளில் கடுங்குளிர் நிலவுவதால் காஷ்மீர் பள்ளத்தாக்கு, லடாக் பகுதிகளில் தட்பவெப்பநிலை உறைநிலைக் கும் தாழ்வாக குறைந்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் கோடைக் கால தலைநகரான ஸ்ரீ நகரில் மைனஸ் 3.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.(இ)

தாக்குதலுக்குள்ளான பெண் வைத்தியசாலையில்

(கரணவாய்)

மோசமான தாக்குதலுக்குள் ளான குடும்பப் பெண்ணொருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பிலான முறைப் பாடு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள் ளது.

புலோலி வடக்கைச் சேர்ந்த புஸ்பராசா ஜெபமாலினி (வயது-31) என்பவரே இவ்வாறு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவரா வார்.

நேற்று முன்தினம் இரவு வேளை குறித்த பெண் கணவனால் மோச மான நிலையில் தா க்கப்பட்டார்.

இதனையடுத்து உடனடியாக பருத்தித்துறை பொலிஸ் நிலையம் சென்று நடந்தவற்றை முறைப் பாடாக பதிவு செய்து விட்டே வைத்திய சாலைக்கு சென்றுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(இ-5-60)

காஷ்மீரில் ஆட்சி அமைக்க முடிவெடுக்கும் அதிகாரம் மெகபூபா முப்திக்கு

காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகமது சையது உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 7 ஆம் திகதி காலமானார்.

முப்தி முகமது மறைவைத் தொடர்ந்து அவரது மகளும், மக் கள் ஜனநாயக கட்சி தலைவரு மான மெகபூபா முப்தி புதிய முதல மைச்சராக கட்சி எம்.எல்.ஏக்களால் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

ஆட்சி அமைப்பது தொடர்பாக மெகபூபா தொடர்ந்து மௌனம் காத்து வந்ததால், காஷ்மீரில் புதிய அரசு அமைவதில் இழுபறி ஏற் பட்டது. கடந்த 8 ஆம் திகதி முதல் காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சி நீடித்து வருகிறது. இந்த விவகாரத்தில் முடிவு எடுப்பதற்காக், மெகபூபா தனது வீட்டில் கட்சி தலைவர்கள் கூட்டத்தை நேற்று முன்தினம் கூட்டினார்.

இதில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக முடிவு எடுக்கும் முழு அதி காரத்தையும் மெகபூபா முப்தியிடம் வழங்குவது என்று அக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றபட்டது.(இ)

டில்லி முதல்வர் மீது இளம்பெண் மை வீச்சு

அரசு விழாவில் பரபரப்பு

புதுடெல்லி)

கார் கட்டுப்பாடு திட்டம் தொடர் பான நன்றி தெரிவிக்கும் விழா வில், முதல்வர் கெஜ்ரிவால் மீது இளம்பெண் ஒருவர் மை வீசிய தால் பரபரப்பு ஏற்பட்டது. டில்லியில் காற்று மாசு அதிகரித்ததை தொடர்ந்து, அதை குறைக்கும் வகையில், ஒற்றைப்படை, இரட்டைப் படை கடைசி எண் அடிப்படையில் கார்களை மாற்று நாட்களில் இயக் கும் திட்டத்தை பரிசோதனை ரீதியில் டில்லி மாநில அரசு அமுல் படுத்தியது. இந்நிலையில், இத் திட்டத்தின் வெற்றி விழா சத்ரசால் மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

இதில் முதல்வர் கெஜ்ரிவால், அமைச்சர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழா தொடங்கிய தும் மாலை 5 மணியளவில் முதல் வர் கெஜ்ரிவால் மேடையேறி பேசத் தொடங்கினார்.

அப்போது கூட்டத்தில் நின்றி ருந்த 20 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் திடீரென கையில் வைத்திருந்த மை, காகிதங்கள், இறுவெட்டு என்பவற்றை கெஜ்ரி வாலை நோக்கி எறிந்தார்.

கெஜ்ரிவால் நின்ற இடத்திற்கு சற்று முன்பாக மை பாட்டில் விழுந் தது. அவர் மீதும், அருகே நின்று கொண்டிருந்த சிலர் மீதும் மை துளிகள் பட்டன.

இதனால் கெஜ்ரிவால் தனது உரையை நிறுத்தினார். உடனடி யாக அந்த பெண்ணை, பாலீசார் சுற்றிவளைத்து பிடித்தனர். ஆனா லும், அந்த பெண்ணை விடுவிக்கு மாறு பொலிஸாரை கெஜ்ரிவால் கேட்டுக் கொண்டார்.

எனினும் பாதுகாப்பு காரணங் களுக்கு அந்த பெண்ணை மாடல் டவுன் பொலிஸார் விசாரணைக் காக அழைத்து சென்றனர். முதற் கட்ட விசாரணையில், அந்த பெண் ஆம் ஆத்மி கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஆம் ஆத்மி சேனா அமைப்பின் பஞ்சாப் பிரிவை சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. அவரிடம் பொலிஸார் தொடர்ந்து விசா ரணை நடத்தி வருகின்றனர்.(இ)

ஏ.ரி.எம். நிலையத்தில் பயங்கர தீ விபத்து

4 இலட்சம் ரூ. எரிந்து நாசம்

திருப்பூரில் உள்ள ஏ.ரி.எம். நிலையம் ஒன்றில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 4 இலட்சம் ரூபா எரிந்து நாசமாகியுள்ளது.

திருப்பூர் ஊத்துக்குளி வீதி மண்ணரைப் பகுதியில் உள்ள எஸ்பிஐ ஏ.ரி.எம். நிலையத்திற்கு, நேற்று முன்தினம் காலை தனி யார் நிறுவன ஊழியர்கள் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் நிரப்ப சென் றுள்ளனர்.

அப்போது இயந்திரத்தில் பணம் நிரப்ப முடியவில்லை. இதைய டுத்து அவர்கள் ஏ.ரி.எம். இயந் திரம் பழுதடைந்ததாக உயரதிகாரி களுக்கு தகவல் கொடுத்துவிட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் மாலை 4 மணி அளவில் ஏ.ரி.எம். நிலையத்தில் இருந்து திடீரென பயங்கரமாக தீப்பற்றி எரிய தொடங்கியுள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள், தீயணைப்பு படையினருக்கு தகவல் கொடுத் துள்ளனர்.

விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்த போதி லும், ஏ.ரி.எம். முழுமையாக எரிந்து போனது.

இதுகுறித்து நடந்த விசாரணை யில், கடந்த 13 ஆம் திகதி ஏ.ரி.எம். இயந்திரத்தில் 9 இலட்சம் ரூ.வைக் கப்பட்டது என்றும், அதில் 5 இலட் சம் ரூபாவை வாடிக்கையாளர்கள் எடுத்துள்ளதும், மீதம் இருந்த 4 இலட்சம் ரூ.எரிந்து நாசமானதும் தெரியவந்துள்ளது.

இந்த தீ விபத்துக்கு காரணம் மின்கசிவா? அல்லது சதிவேலையா? என பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

விண்ணப்பதாரர்களை பதிவு செய்ய கோரிக்கை

பாடசாலை விண்ணப்பதாரராகத் தோற்றாது முதற்தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாக க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 2016 ஆம் ஆண்டில் தோற்ற எதிர்பார்க்கும் அல்லது இதற்கு முன்னர் பரீட்சைக்கு தோற்றி, தோற்றிய பாடத்துறை அல்லது குறைந்த பட்சம் ஒரு பாடத்தையேனும் மாற்றி மீண்டும் வெளிவாரி விண்ணப்பதாரியாக பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் 2016 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியன்று 21 வயதை விடக் குறைந்த விண்ணப்பதாரிகள் தமது முகவரிக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் மேற்படி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பகுதியில் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதவி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மார்ச் மாதத்தில் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்தமைக்கான உரிய தகவல்களை அதில் உள்ளடக்கி உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி முறையான விண்ணப்ப படிவமொன்றினை பரீட்சைத் திணைக் களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ

நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 18.01.2016

நாணயம்	நாடு	வாங்கும் விலை	விற்பனை விலை
டொலர்	அமெரிக்கா	141.80	145.92
பவுண்ட்	பிரிட்டன்	201.50	208.88
ஈரோ	ஐரோப்பிய ஒன்றியம்	153.58	159.85
பிராங்	சுவிட்சர்லாந்து	140.29	146.26
டொலர்	கனடா	96.87	101.02
டொலர்	அவுஸ்திரேலியா	96.74	101.46
டொலர்	சிங்கப்பூர்	98.10	101.97
ரூபா	இந்தியா	2.1245	-------

மத்திய கிழக்கு நாடு

நாடு	நாணயம்	பெறுமதி
பகரெயின்	டினார்	381.9614
குவைத்	டினார்	473.2817
ஓமான்	ரியால்	373.4998
கட்டார்	ரியால்	39.4964
சவுதி அரேபியா	ரியால்	38.3632
ஐக்கிய அரபு எமிரேட்ஸ்	டிராம்	39.1603

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	கொடிகாமம்	சுன்னாகம்	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	160	120	100	140	120	160
உருளைக்கிழங்கு	70	60	55	70	70	80
பச்சைமிளகாய்	400	300-350	280	350	450	400
தக்காளி	60	60	55	70	80	70
மரவள்ளிக்கிழங்கு	40	40	30	40	40	40
கோவா	100	100	80	140	140	120
கரட்	180	120	150	180-300	200	200
பூசணி	70	60	40	60	80	50
புடோல்	100	60	70	100	120	120
வாழைக்காய்	80	60	50	60	60	70
சின்ன வெங்காயம்	120	80-160	110	120	160	120
பெரிய வெங்காயம்	80	100	65	80	80	90
பாகற்காய்	140	150	150	150	200	180
வெண்டிக்காய்	150	100	100	120	100	180
கருணைக் கிழங்கு	80	60	60	80	100	70
பயற்றங்காய்	140	150	100	150	120	160
லீக்ஸ்	140	100	120	100	160	140
பீற்றூட்	180	160	–	–	280	–
கறிமிளகாய்	300	400	220	300	400	300
முருங்கைக்காய்	–	–	–	–	–	–
போஞ்சி	180	–	–	240	200	220
கத்தரிதம்புள்ள	120	–	80	–	100	–
கீரை - 1 பிடி	40	20	35	40	40	30
தேசிக்காய்	120	100	60	120	60	120
தேங்காய் (ஒன்று)	50	30-40	30-45	50	30-40	50
இராசவள்ளி	140	120	110	160	160	150
வெங்காயப்பூ	150	120-160	210	200	200	300
முள்ளங்கி	50	40	–	60	80	40
பொன்னாங்காணி	30	50	10	30	30	40
வல்லாரை	10	20	20	10	20	20
ஈரப்பலா	50	50	–	–	80	–

இலங்கைத் தமிழர் வரலாறு

விடுதலைப்புலிகளுக்கு எம்.ஜி.ஆர் உதவி 82

தனக்குப் பிடித்தவர்களைக் காலை விருந்துக்கு அவர் அழைப்பது வழக்கம் என்றார் செயலாளர்.

விருந்து

சாப்பாட்டு அறைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கே முதலமைச்சர் எங்களுக்காகக் காத்திருந்தார். வாருங்கள், வாருங்கள். உங்களுக்கென்று விசேடமாகக் காலை உணவு தயாரித்து இருக்கிறோம் என்று கூறி பெரியதொரு சாப்பாட்டு மேஜை அருகில் எங்களை அமரச் செய்தார்.

முதலில் இட்லி, அதன்பின் தோசை, பின்பு பூரி, உப்புமா, தயிர் வடை இப்படி உணவு வகைகள் வாழை இலையில் மாறி மாறி பரிமாற்றப்பட்டன.

எம்.ஜி.ஆருக்கு ஈடாகப் பிரபாகரன் சுவைத்து ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இவர்களுக்கு ஈடுகட்ட முடியாமல் நான் திணறிக் கொண்டிருந்தேன்.

நீரிழிவு வியாதி இருப்பதால் எனக்கு உணவுக் கட்டுப்பாடு. இதனால் கொஞ்சமாகத் தான் சாப்பிட முடிந்தது.

இதை எம்.ஜி.ஆர் கவனித்துவிட்டார். எனது வீட்டிற்கு வருபவர்கள் வயிறு நிறைய சாப்பிட வேண்டும். தம்பி பிரபாகரன் நன்றாகச் சாப்பிடுகிறார். நீங்கள் சிரமப்படுவது போலத் தெரிகிறது. நிறைய சாப்பிடுங்கள் என்றார்.

சார்! எனக்குச் சர்க்கரை வியாதி. இன்சுலின் ஊசியும் ஏற்றவில்லை. அதிகம் சாப்பிட முடியாது என்றேன்.

எனக்கும் சர்க்கரை நோய் இருந்தது. இப்பொழுது குணமாகிவிட்டது. சர்க்கரை வியாதி இருந்தால் சாப்பிடக் கூடாது என்று யார் சொன்னார்கள்? என்றார் எம்.ஜி.ஆர்.

அதுமட்டுமல்ல. ஒரு டாக்டரை வரவழைத்தார். என்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கச் சொன்னார்! அவருடைய அன்புத் தொல்லையால், அப்பலோவில் நான் இரண்டு வாரம் சிறை இருந்தேன்!

சென்னைக்கு வந்த ஆயுதங்கள்

தமிழ் ஈழ சுதந்திரப் போராட்டத்திற்கு எம்.ஜி.ஆர். அளித்த உதவிகள் அளப்பரியது.

ஒருமுறை சென்னைத் துறைமுகம் வழியாக ஆயுதங்களைத் தருவிக்க முயன்றோம். நவீன ஆயுதங்கள் அடங்கிய கொள்கலனுடன் (கண்டெய்னர்) வெளி நாட்டுக் கப்பல் ஒன்று, சென்னை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. ஆயுதங்கள் அடங்கிய கொள்கலனை வெளியே எடுக்க நாங்கள் செய்த பகீரத முயற்சிகள் பயனளிக்கவில்லை.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்புதான் உமா மகேஸ்வரன் ஏற்பாடு செய்த ஆயுத கப்பல் ஒன்று இந்திய புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்டது. பல கோடி மதிப்புள்ள ஆயுதங்களை உமா மகேஸ்வரனின் பிளாட் இயக்கம் இழக்க நேரிட்டது. புலிகளுக்கும் இந்த கதி நேரக்கூடாது என்று விரும்பினோம். ஆயுதங்களைப் பறிகொடுக்காமல் வெளியே எடுப்பதற்கு எம்.ஜி.ஆரின் உதவியை நாடுவதே ஒரே வழி என்று தென்பட்டது.

பிரபாகரனும் நானும் எம்.ஜி.ஆரிடம் சென்றோம். நிலைமையை எடுத்து விளக்கினோம்.

நீங்கள் கொடுத்த பணத்தில் இந்த ஆயுதங்களை வாங்கி இருக்கிறோம். சென்னைத் துறைமுகத்தில் ஒரு கப்பலில் ஒரு கொள்கலனக்குள் இந்த ஆயுதங்கள் இருக்கின்றன.

எப்படியாவது அதனை வெளியே எடுத்துத்தர வேண்டும். நீங்கள் மனம் வைத்தால் முடியும் என்று கூறினோம்.

எவ்வித தயக்கமோ, பதற்றமோ அவரிடம் காணப்படவில்லை. இதுதானா பிரச்சினை? செய்து முடிக்கலாம் என்று கூறிவிட்டு தொலைபேசியில் சிலரிடம் பேசினார்.

ஆயுதங்கள் உங்களுக்குக் கிடைத்துவிடும் என்று எங்களிடம் எம்.ஜி.ஆர் கூறினார். நாங்கள் மகிழ்வுடன் திரும்பினோம்.

சில நாட்களுக்குப் பின் எங்களுக்கு ஆயுதங்கள் வந்து சேர்ந்தன. ஏவுகணைகள், தானியங்கித் துப்பாக்கிகள், ரவைப் பெட்டிகள், கைக்குண்டுகள்...

நினைவுப் பரிசு

எந்தப் பிரச்சினையும் இன்றி பாதுகாப்பாக ஆயுதங்களைப் பெற்றுத் தந்ததற்காக எம்.ஜி.ஆருக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார், பிரபாகரன்.

அந்த உதவியின் நினைவுச் சின்னமாக புதிதாக வந்த ஆயுதங்களில் இருந்து ஏகே 47 ரக தானியங்கித் துப்பாக்கியை எம்.ஜி.ஆரிடம் வழங்கினார். அந்தத் துப்பாக்கியைக் கழற்றிப் பூட்டி, அதன் செயற்பாட்டு இயக்கத்தையும் விளக்கினார். எம்.ஜி.ஆருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இந்த சம்பவம் நிகழ்ந்து நீண்டகால இடைவெளிக்குப் பிறகு ஒரு தடவை உடல் நலம் இல்லாமலிருந்த முதலமைச்சரை நான் சந்திக்கச் சென்றேன். பிரபாகரன் நன் பற்றி விசாரித்தார். தமிழ் ஈழத்தில் சௌக்கியமாக இருக்கிறார் என்றேன்.

அப்போது தன் படுக்கையில் தலையணைகளின் கிழ் வைக்கப்பட்டிருந்த ஏகே 47 துப்பாக்கியை எடுத்துக் காண்பித்து இது பிரபாகரன் தந்த நினைவுப் பரிசு என்று பெருமிதத்துடன் சொன்னார்.

இவ்வாறு பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

கப்பல் போக்குவரத்து பாதையில் கவனம் செலுத்தும் அமெரிக்கா

இலங்கையுடன் இணைய முயற்சி

(கொழும்பு)

கப்பல் போக்குவரத்துப் பாதையின் பாதுகாப்பு விடயத்தில் இலங்கையுடன் இணைந்து செயற்படும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில், கப்பல் போக்குவரத்து வழியைப் பாதுகாப்பதில் இலங்கையுடன் எவ்வாறு இணைந்து செயற்படலாம் என்பது குறித்து, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஆய்வு செய்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி காலியில் உள்ள இலங்கையின் கடற்படையின் தென்பிராந்தியத் தலைமையகத்துக்கு சென்றிருந்த அமெரிக்கத் தூதுவர், இலங்கையின் கடற்படையின் போர்க்கப்பல்களையும் பார்வையிட்டார்.

மேலும், காலி துறை முகத்தை அமெரிக்கத் தூதுவர் படகில் சென்று பார்வையிட்டுள்ளார.

அத்துடன், இந்தியப் பெருங்கடல் கப்பல் போக்குவரத்து வழியை பாதுகாப்பதில் இலங்கையின் கடற்படையின் உதவியை எவ்வாறு பெறலாம் என்பது குறித்தும், அவர் கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (இ)

பிக்குமார்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டமூலம் அவசியம்தான்

பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவிப்பு

பிக்குமார்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டமூலம் அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தரும், பெல்லன்வில விகாரையின் விகாராதிபதியுமான விமலரத்ன தேரர் ஆனமடுவையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பிக்குமார்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் குறித்தும் அவர் தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இவ்வாறானதொரு சட்டமூலத்தை கொண்டவர்களே குறித்த சட்டமூலத்தை எதிர்க்கின்றனர்.

ஆனால் குறித்த சட்டத்தின் மூலம் பிக்குமாரின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுவதுடன், அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பிக்கு சம்மேளனத்துக்கே உரித்தாகும். அத்துடன் பிக்குமார்களுக்கென புதிய சட்டங்களும் உருவாக்கப்படும். சாதாரண சிவிலியன்கள் தொடரான சட்ட வரைவுகளின் கீழ் பிக்குமார்கள் விசாரிக்கப்பட கூடாது. அதற்கென தனியான சட்டங்கள உருவாக்கப்பட வேண்டும்.

மகாநாயக்கர்கள் உள்ளிட்ட முக்கிய தேரர்கள் இது போன்றதொரு சட்டமூலத்தை உருவாக்கித் தருமாறு சந்திரிகா மற்றும் மகிந்த ஆகியோரின் தலைமையிலான அரசாங்கங்களிடம் கோரிக்கை வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் அதனை பல்வேறு காரணிகளை முன்வைத்து தட்டிக்கழித்து விட்டனர்.

கடந்த காலங்களில் தம்பையா என்றொருவர் பிக்குமார்கள் குறித்து விமர்சித்து நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இன்னும் சிலரும் விமர்சனக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவை தவறான விடயங்களாகும்.

எனவே பிக்குமார் தொடர்பான சட்டங்கள் தனியாக உருவாக்கப்பட வேண்டும். அதனை எதிர்ப்பவர்கள் சட்டமூலத்தை தெளிவாக வாசித்து விட்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டட்டும் என்றும் பெல்லன்வில தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

நிலக்கரி கொள்வனவில் முறைகேடு

இலங்கையின் மின்சார உற்பத்திக்கான நிலக்கரிக் கொள்வனவில், தவறான முறையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது. குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டிய நிலக்கரிக்குப் பதிலாக, அதிக விலையுடைய நிலக்கரிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

1.9 மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரிக்கான ஒப்பந்தம் சுவிஸ், சிங்கப்பூர், ஓவர்சீஸ் என்டர்பிறைஸஸ் (தனியார்) நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு மெற்றிக் தொன்னுக்கு 58 அமெரிக்க டொலர்கள் எனும் விலையிலேயே, இவ்வொப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், லங்கா நிலக்கரி நிறுவனம் (LC), இதை விடக் குறைவான மூன்று ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே, தனக்கான நிலக்கரிகளைக் கொள்வனவு செய்து வருகின்றது.

அதில் ஓர் ஒப்பந்தத்தின் படி, ஒரு மெற்றிக் தொன்னுக்கு 55.70 அமெரிக்க டொலர்களும், மற்றைய மெற்றிக் தொன்னுக்கு 51.29 அமெரிக்க டொலர்களும், மூன்றாவதுக்கு, 49.85 அமெரிக்க டொலர்களுமாக, அந்நிறுவனம்செலுத்திவருகின்றது.

சுவிஸ், சிங்கப்பூர் நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்கும் முடிவை, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் செயற்குழுவே எடுத்துள்ளது. குறைவான ஏலத்தொகையை விட 8.15 அமெரிக்க டொலர்கள் அதிகமான விலைக்கே இந்தக் கொள்வனவுக்கு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, 1.9 மில்லியன் மெற்றிக் தொன்னுக்காக இலங்கை 15.485 மில்லியன அமெரிக்க டொலர்களை அதிகமாகச் செலுத்தவுள்ளது.

இந்த முடிவுக்கு எதிராக கொள்வனவு முறைப்பாட்டுச் சபையிடம் ஏனைய நான்கு ஏலத்தொகையாளர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து சிங்கப்பூரைச் சேர்ந்த சுவிஸ், சிங்கப்பூர் நிறுவனத்தின் கொள்வனவை நிறுத்தி புதிய ஏலத்தை நடத்துமாறு, அமைச்சரவைக்கு அச்சபை பிரேரித்திருந்தது. எனினும், அந்த ஏலம் நிறுத்தப்படாததோடு, புதிய ஏலமும் கோரப்படவில்லை. மாறாக சுவிஸ், சிங்கப்பூர் நிறுவனத்துக்கே அந்த ஏலத்தை வழங்குமாறு கொள்வனவுச் செயற்குழு பரிந்துரை செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (இ)

சூதாட்ட நிலையம் மூற்றுகை

கொஸ்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் இயங்கி வந்த சூதாட்ட நிலையம் ஒன்று பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. கொஸ்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போத்த லேகம பிரதேச வீடொன்றில் மிகவும் இரகசியமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட சூதாட்ட நிலையமே இவ்வாறு பொலிஸாரின் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின்போது அவ்வீட்டில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

மாத்தறைப்பகுதியில் கசிவு ஏற்படக்கூடிய எண்ணெய் நிரப்பு நிலையத்திற்குப் பூட்டு

நில்வளகங்கைக்கு எண்ணெய் ஊடுருவுவதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய எண்ணெய் நிரப்பும் நிலையத்தை தற்காலிகமாக மூடுவதற்கு உத்தரவிடுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த நிலையத்தை மூடுவதற்கான உத்தரவை இன்றைய தினத்திற்குள் எழுத்து மூலம் வழங்குவதாக அதன் மாத்தறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சுசந்த வெதகே தெரிவித்தார்.

கசிவு ஏற்படக்கூடிய நிலத்தடியில் உள்ள எண்ணெய் தொட்டிகள் அனைத்தும் தற்போது அகற்றப்பட்டுள்ளதாகவும், நில்வள கங்கையில் கலக்கப்பட்டுள்ள எண்ணெய்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும தெரிவித்தார்.

இது தவிர மாத்தறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் அமுலில் இருந்த நீர்வெட்டு, தற்போது வழமைக்கு திரும்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

2 மாதங்களில் 3 மில்லியன் டொலர் இலங்கை கடற்படைக்கு வருமானம்

கடற்படையினர் இரண்டு மாத காலப்பகுதியில் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்ச்சைக்குரிய அவன்கார்ட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகள கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த இரண்டு மாத காலப் பகுதியில் கடற்படையினர் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த 14 ஆம் திகதி பாரிய நிதி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கடற்படையினர் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டின்முதல் 10 மாதங்களில் சராசரியாக கடற்படையினரால மாதமொன்றுக்கு 130 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவன் கார்ட் நிறுவனத்திடம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் சராசரியாக மாதாந்தம் 45 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

கடற்படையின் ரியர் அட்மிரல் தர்மேந்திர மனோஹர வெத்தேவ ஆணைக்குழு முன்னிலையில் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கடற்படையினரிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவன் கார்ட் நிறுவனத் தரப்புக்கள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

இன்று ஒரு தகவல்

வழிகாட்டிகள்

நாம் எத்தனையோ நண்பர்களை அறிந்து வைத்திருக்கிறோம். அவர்களுள் குறிப்பாக எவரை யேனும் கண்டு நீங்கள் வியந்திருக்கக்கூடும்.

என்ன இருந்தாலும் பழனியைப் போன்ற ஒரு பண்பாளரைக் காணமுடியுமா?

முருகனைப் போன்ற உழைப்பாளியை நான் பார்த்ததே இல்லை.

குமரனைப்போன்ற துணிச்சலான மனிதரைக் காண்பது அரிது

கந்தனுக்கு இருக்கும் பெருந்தன்மை யாருக்கு வரும்?

வேலனுக்கு இருக்கும் சிக்கன குணம்– ஆகா எவ்வளவோ சேருமே! என்று இப்படியெல்லாம் அவர்களை வாயாரப் பாராட்டாவிட்டாலும் உள்ளூர எண்ணி வியந்து கொண்டாவது இருப்பீர்கள்.

நான் மேலே கொடுத்துள்ள பெயர்களெல்லாம் வெறும் உதாரணங்களே. ஆனால் இந்தப் பெயர்களையெல்லாம் நீக்கிவிட்டு அந்த இடங்களில் உங்களுக்குத் தெரிந்தவர்களின் பெயர்களை நிரப்புங்கள்.

இப்படியாக மனித இனத்தின் மகத்துவங்களுக்கு உதாரணங்களாக உங்களுள் சிலர் நிச்சயமாக இருப்பார்கள்.

பிரச்சினைகளை அணுகும்போது வாழ்க்கையில் முன்னேற விரும்பும்போது உங்களுக்குத் தெரிந்த அந்த உதாரண புருஷர்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

அவர்களாக இருந்தால் இந்நேரம் என்ன செய்திருப்பார்கள் என்பதை அடிக்கடி எண்ணிப் பாருங்கள்.

நான் புத்தரைப்போலவோ காந்தியைப் போலவோ வாழச் சொல்லவில்லை. உங்களோடு உங்கள் கண்ணெதிரிலேயே நடமாடிக் கொண்டிருக்கும் மனிதர்களைத் தான் பின்பற்றச் சொல்கிறேன்.

இத்தகைய நடைமுறையில் இன்னுமோர் அனுகூலமும் இருக்கிறது. அவர்கள் எப்படிச் செயற்படுகிறார்கள். பிரச்சினைகளை எப்படி அணுகுகிறார்கள். அவர்களால் எப்படி அவ்வாறு இருக்க முடிகிறது என்பவற்றை எல்லாம் நீங்கள் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.

அப்படியிருக்கையில் அவர்களுடைய சிறப்புகளுள் ஒன்றிரண்டையேனும் நீங்கள் பெறமுடியாமலா போய்விடும்.

நிச்சயம் முடியும்.

பஞ்சாமிர்தம் ஓர் இனிய கலவை. அந்த இனிய கலவைக்கு எத்தனையோ மூலப்பொருட்கள் தேவைப்படுகின்றன. அந்த மூலப்பொருட்கள் எங்கெங்கோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டிச் சேர்த்துப் பக்குவப்படுத்தும்போது ஆகா என்னமாய் இனிக்கிறது.

அதேபோல் உங்களுக்குத் தெரிந்தவர்களிடையே எத்தனையோ சிறப்பியல்புகளைக் காண்கிறீர்கள். அவற்றையெல்லாம் திரட்டுங்கள். உரிய விதத்தில் பக்குவப்படுத்திப் பயன்படுத்துங்கள்.

வாழ்க்கை இனிக்கிறதா இல்லையா என்று பாருங்கள்.

லேனா தமிழ்வாணன்

இரண்டு பொற்காசுகள்!

அரசவைக்குக் கழைக் கூத்தாடி ஒருவன் வந்தான். கயிற்றின் மேல் நின்றபடி பல வித்தைகளைச் செய்து காட்டினான். அவையில் இருந்தவர்கள் அவன் திறமைகளை எல்லாம் வியப்புடன் பார்த்துக் கொண் டிருந்தனர். கழைக் கூத்து முடிந்தது. இரண்டு பொற் காசுகளை அவனுக்குப் பரி சாகத் தந்தார் அரசர். மாட்டு வண்டியை ஓட்டியவாறு மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பி னான் கழைக் கூத்தாடி.

வழியில் இருந்த காட்டு வழியே சென்றான். தண் ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண் டியை விட்டு இறங்கி கிண ற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டு தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

"யார் கிணற்றுக்குள் இருந்து தண்ணீர் எடுப்பது?" என்று பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய கழைக் கூத்தாடி கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரிய வில்லை. நடுங்கும் குரலில் அவன், "ஐயா! நான் கழைக் கூத்தாடி. தண்ணீர் குடிப் பதற்காக இங்கு வந் தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல் லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாது காக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரிய மாட்டேன்!" என்றது அந்தக் குரல்.

"மந்திரக்கிணறா! விரும்பி யதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன்.



"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தச் கிணற் றுக்குள் போடு. உன் விருப் பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண் ணத்தை நிறைவேற்றும்." என்றது அந்தக் குரல்.

"என்னதான் நடக்கிறது பார்ப்போம்" என்ற எண்ணத் தில், ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான்.

"விலை உயர்ந்த நகை களாலும், பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண் டும்!" என்றான்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும், நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் கழைக் கூத்தாடி.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்து விட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ் செல் வன் நான்தான" என்று மகிழ்ச்சியுடன் சொல்லியபடி வண்டியில் அமர்ந்தான்.

"ஐயோ! காட்டு வழி யாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே! அவர்கள் இந்த நகைகளையும், பொற் காசுகளையும் கைப்பற் றிக் கொள்வார்களே! என்ன செய்வது" என்று சிந்தித் தான் அவன்.

நல்ல வழி ஒன்று அவனு க்குத் தோன்றியது. கிணற் றருகே வந்து, தன்னிடம் இருந்த இரண்டாவது பொற் காசையும் கிணற்றுக்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண் டும்!" என்று உள்ளிருந்து குரல் கேட்டது...

(தொடரும்)

இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2016 19

- 1419 - நூறாண்டுப் போர்: நார்மாண்டியை கைப் பற்றிய இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியிற்கு ரொவ்வென் சரணடைந்தது.
- 1764 - ஜான் வில்க்ஸ் ஜக்கிய இராச்சியத்தின் மக்கள வையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
- 1839 - பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி யேம னின் ஏடென் நகரைக் கைப்பற்றியது.
- 1853 - ஜ°செப்பே வேர்டியின் ஆப்பெரா இல் ட்ரவ டோர் ரோமில் பிரமாதமான பாராட்டுகளைப் பெற்றது.
- 1899 - ஆங்கிலோ- எகிப்திய சூடான் அமைக்கப்பட் டது.
- 1903 - ஜக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.
- 1920 - அமெரிக்க மேலவை உலக நாடுகள் சங்கத் தில் சேர்வதிற்கு எதிர்ப்பாக தீர்மானம் நிறை வேற்றியது.
- 1927 - பிரித்தானியா சீனாவுக்கு படைகளை அனுப் பியது.
- 1937 - ஹோவார்ட் ஹியூஸ் லாஸ் ஏஞ்சலஸிலிரு ந்து நியூயோர்க் நகரத்திற்கு 7 மணி நேரம், 28 நிமிடங்கள், 25 நொடிகளில் பறந்து சாத னைப் புரிந்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படை கள் பர்மாவை முற்றுகையிட்டனர்.
- 1949 - கூபா இசுரேலை கண்டுகொண்டது.
- 1966 - இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.
- 1981 - ஈரானில் 14 மாதங்களுக்கு முன்னர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 52 அமெரிக்கர் களை விடுவிக்க ஜக்கிய அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.
- 1983 - நாசி போர்க் குற்றவாளி கிளவுஸ் பார்பி பொலிவியாவில் கைது செய்யப்பட்டான்.
- 1986 - முதற் கணினி நச்சுநிரலான பிரெயின் ((c)Brain) பரவத் தொடங்கியது.
- 1993 - வேதி ஆயுத உடன்படிக்கை (CWC) கையொப்பமிடப்பட்டது.
- 1993 - ஐ.பி.எம் நிறுவனம் 1992 ஆண்டிற்கான அறிக்கையில் கூ4.97 பில்லியன் நட்டத்தை அறிவித்தது, இன்றுவரையில் அமெரிக்கா வில் வேறொரு நிறுவனம் இந்த அளவில் நட்டம் அடைந்ததில்லை.
- 1997 - 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் ஹெப்ரோன் திரும்பினார்.
- 2006 - சிலவாக்கியாவின் விமானப்படை விமானம் ஹங்கேரியில் வீழ்ந்து நொருங்கியது.
- 2006 - புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரை சன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண் ணுக்கு ஏவியது.
- 2007 - இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவ ட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்ட தாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

பிறப்புகள்

- 1736 - ஜேம்ஸ் உவாட், கண்டுபிடிப்பாளர் (இ. 1819)
- 1807 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்கப் பொறியியலாளர் (இ. 1870)
- 1809 - எட்கார் அலன் போ, அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ. 1849)
- 1839 - பால் செசான், பிரெஞ்சு ஓவியர் (இ. 1906)
- 1912 - லியோனிட் கண்டரோவிச், நோபல் பரிசு பெற்ற இரசியப் பொருளியலாளர் (இ. 1986)
- 1933 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரை யிசைப் பாடகர் (இ. 1988)
- 1948 - வானம்பாடி யோகராஜ், ஈழத்து வில்லிசைக் கலைஞர் (இ. 1999)

இறப்புகள்

- 1597 - மகாராணா பிரதாப், இந்திய மன்னர் (பி. 1540)
- **1990 - ஓஷோ, இந்திய ஆன்மிகவாதி (பி. 1931)**
- 2014 - ஸ்டான்லி ஜெயராஜா தம்பையா, ஈழத்து மானிடவியலாளர், பேராசிரியர் (பி. 1929)
- 2015 - ரஜினி கோத்தாரி, அரசியல் அறிஞர் (பி. 1928)

ஓஷோ



ஓஷோ 1931 டிசெம்பர் 11 இல் மததிய பிரதேசத்தில் உள்ள குச்வாடா என்ற சிற்றூரில் பிறந்தார். ஓஷோவுடைய இயர் பெயர் ரஜ்னீஷ் சந்திர மோகன். சிறுவயதி லிருந்தே தியானத்தில் ஈடுபட்ட ஓஷோ தனனுடைய இருபத்து ஒன்றாவது வயதில் அதாவது 1953 மார்ச் 21 இல் ஞானம் அடைந்தார். குச்வாடா ஓஷோவுடைய தாய் வழி தாத்தா, பாட்டி வாழ்ந்து வந்த ஊர். முதல் ஏழு வருடங்கள் அங்கேதான் வளர்ந்தார். ஓஷோவுடைய பெற் றோர்கள் கடர்வாடாவில் வசித்து வந்தார்கள். தாத்தா இறந்த பிறகு பாட்டியுடன் கடர்வாடா வந்துவிட்டார்.. 1956 இல் ஓஷோ தத்துவயிய லில் முதல் வகுப்பு சிறப்பு நிலை தேர்ச்சி பெற்று, சாகர் பல்கலைகழகத் திடமிருந்து முதுகலை பட்டம் பெறுகிறார். அவர் தனது பட்டப் படிப்பில் அகில இந்திய அளவில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவனாவார். 1957 இல் ரெய்ப்பூரில் உள்ள சமஸ்கிருத கல்லூரியில் ஓஷோ பேராசிரி யராக நியமனம் பெறுகிறார். 1958 இல் ஜபல்பூரில் உள்ள பல்கலைக் கழகத்தில் தத்துவ பேராசிரியராக நியமனம் பெற்ற ஓஷோ 1966 வரை அங்கேயே கல்வி கற்பிக்கிறார்.

1966 இல் ஒன்பது வருட பேராசிரியர் வேலையை விடுத்து, மனித குலத்தின் விழிப்புணர்வை உயர்த்துவதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறார். 1970 ஜ°லையில் மும்பாய்க்கு வந்த அவர் பகவான் ஸ்ரீரஜனீஷ் என்று அழைக்கப்பட்ட அவர் ஆன்மீக சாதகர்களுக்கு தீட்சை அளித்து சிஷ்யர்க ளாக்கினார்.

1990 ஜனவரி 19 மாலை 5 மணிக்கு ஓஷோ தன் உடலை விட்டு நீங்கினார். அவருடைய ஒரே செய்தி தியானம் தான். அதைத்தான் அவர் தன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

தேசிய நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்

டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் நல்லிணக்கம் உரிய முறையில் கட்டியெழுப்பப்படாதுள்ள நிலையில், அதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ள தற்போதைய அரசு, தேசிய நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் தற்போது மீண்டும் தலைதூக்கி வருகின்ற இனவாத செயற் பாடுகளை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், நாட்டில் சுயலாப அரசியல் காரணங்களுக்காக சிலர் நேரடியாகவும், மறை முகமாகவும் இனவாதத்தைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக நாம் பல வருடகால யுத்த அனர்த்தங்களுக்கு முகங் கொடுத்துள்ள கசப்பான அனுபவங் களைக் கொண்டிருக்கிறோம்.

தற்போது அந்த சூழ்நிலை அகற்றப்பட்டு, எமது மக்கள் நிம் மதியானதொரு வாழ்வை நோக்கி அடியெடுத்துவைத்து வரும் நிலை யில், எமது மக்களின் நிம்மதியான தும், சுதந்திரமானதுமான வாழ்க் கையை உறுதிப்படுத்தும் முகமாக தேசிய நல்லிணக்கம் வலுவுள்ள தாகக் கட்டியெழுப்பப்பட வேண்டி யது அத்தியாவசியமாக உள்ளது.

இதனை நன்குணர்ந்துள்ள இந்த அரசு, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில், அதனை சீர்குலைக்கின்ற வகையில் இனங்களுக் கிடையில் முரண்பாடு களையும், தேவையற்ற குழப்பங்க ளையும் ஏற்படுத்தும் வகையில் சில விசமத்தனமான செயற்பாடுகள் தென் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதை அறிய முடிகின்றது.

எனவே, இவ்வாறான செயற் பாடுகளின் பின்னணியில் இருப் போரை இனங்கண்டு, அவர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், இவ்வாறான செயற் பாடுகளை முற்றாக நிறுத்தவும், இனிமேலும் இவ்வாறான செயற் பாடுகள் தலையெடுக்காமல் தடுக்க வும் அரசு உரிய நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா மேலும் வலியுறுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

மசகு எண்ணெய் இறக்குமதி குறித்து இலங்கை அரசாங்கம் அதிக கவனம்

(கொழும்பு)

ஈரானிடமிருந்து மசகு எண் ணெயை மீண்டும் இறக்குமதி செய்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வாயுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம்தொடர்பில் அமைச்சு உறுப்பினர்களிடம் கலந்துரையாடு வதாக அமைச்சர் சந்திம வீரக் கொடி தெரிவித்தார்

ஈரான் மீது விதிக்கப்பட்ட பொரு ளாதார தடைகள் அகற்றப்பட்டதை யிட்டு மகிழ்ச்சியடைவதாக தெரி வித்துள்ள அமைச்சர், ஈரான் மீதான தடைகள் காரணமாக அண்மைக் காலமாக மசகு எண்ணெயை இறக் குமதி செய்ய முடியாத நிலை ஏற் பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனால் பெரும் அசௌகரி யத்தை எதிர்நோக்கியதாகவும், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வாயுத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் விற் பனை செய்யப்படும் விலைக்கு அமைவாக, ஈரானிடமிருந்து குறைந்த விலையில் எண்ணெய் பெற்றுக் கொள்ள முடியுமாயின் அது தொடர் பில் கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் மசகு எண்ணெய்க்கான விலைச்சுட்டெண் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாட வுள்ளதாகவும் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையில் எண்ணெய் இறக்குமதி செய்வதால், அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை நாட்டு மக்களுக்கு வழங்க எதிர் பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 607

Search for people, places and things Nagendram Home

எயோனா



சோபன்

ஸ்மைலினி



யூட்



அபிநயா

கணவன்: நெஞ்சு வலிக்குது டாக்டருக்கு போன் பண்றியா!

மனைவி: உங்க செல்போன் பாஸ்வேர்ட் சொல்லுங்க?

கணவன்: இப்ப பரவால்ல, போன் பண்ணவேண்டாம்.

டில்னா

எந்தக் காலத்திலும் பெண்கள் ஆண்களை விட அதிகம் உழைப்பவர்கள் தான். ஆனால் அவர்கள் உழைப்பு என்றும் போற்றப்படுவதில்லை

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

சீனப் பொருளாதார வளர்ச்சியும் மேலைத்தேய எதிர்பார்ப்பும்

நன்கு ஆழ ஊடுருவி தனது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இலங்கையினால் இலகுவாக உதறித் தள்ளி விடமுடியாத நிலையில் சீனா தனது நிலையை எடுத்துள்ளது.

மேலைத்தேய தலைமையில் உலக ஒழுங்கை தீர்மானிக்கும் நிர்ணயங்களை அல்லது அறிவுறுத்தல்களை, தேசங்கள் மத்தியிலும் தேசியங்கள் மத்தியிலும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியிலும் கூட நடைமுறைப்படுத்தும் பிரதான அமைப்புகளான உலக வங்கி, அனைத்துலக நாணய நிதியம் போன்ற வற்றுக்கு சவாலாக இந்த சீன நாட்டு வங்கி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் 25 ஆம் நாள், 57 அங்கத்தவ நாடுகளின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கி தனது முதல் நடவடிக்கைகளை வைபவ ரீதியாக அடுத்தவாரம் சீன தலைநகர் பீகிங்கில் தொடங்க உள்ளது.

சீனாவின் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வு, உலக அரசுகளாலும், அரசசார்பற்ற நிறுவனங்களாலும் மிகவும் கவனமாக நோக்கப்படுகிறது.

தாராள பொருளாதார உலகுடன் கூட்டுசேராத அல்லது ஒத்துப்போகாத நாடுகளை பொருளாதாரத் தடை போட்டு பணிய வைக்கும் மேலைதேய நாடுகளுக்கு தமது இராஜதந்திர சக்தி நீர்த்துப்போக வைக்கக் கூடிய நிலையை ஒட்டி கலக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

பழமைவாய்ந்த பட்டுப் பாதை பொருளாதார நகர்வுகளை புதிய வடிவில் கடல் வழியாக "சமுத்திரப் பட்டுப் பாதை" என்றும் தரை வழியாக "ஒரு சூழல் ஒரு பாதை" எனவும் சீன கொள்கை வகுப்பாளர்களின் கூட்டு வகுத்து செயற்படுத்துகிறது.

பாரிய பொருளாதார இராஜ தந்திர முன்னெடுப்புகளை கொண்ட இந்த அரசியல் நகர்வுக்கு துணையாக சீனாவின் AIIB வங்கி திறக்கும் நிகழ்வு அமைந்துள்ளது.

இந்த வங்கி அமைப்பு உலகை கோட்பாட்டு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், மாற்றும் வல்லமை கொண்டது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சீனா உலகின் பெரிய கைத்தொழில் முன்னேற்றம் கண்ட ஏழு நாடுகளின் கூட்டுக்குள் சேர்க்கப்படவில்லை. ஆனால் இன்று சீனப் பொருளாதாரம் பெரிய ஏழு சைகத்தொழில் நாடுகளின் கூட்டில் அங்கம் வகிக்கும் நாடுகளிலும் பலம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

தனது "ஒரு சூழல் ஒரு பாதை" திட்டத்தில் குறிப்பாக மத்திய ஆசிய நாடுகளையும், தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளையும் கடந்து தரை வழியாக ஐரோப்பா வரை விஸ்தரிக்கும் திட்டத்தின் மூலம் சுமார் அறுபது நாடுகளை கூட்டு சேர்த்து, தனது நேச அணியொன்றை உருவாக்குவதன் மூலம் நீண்ட கால மூலப்பொருள் வழங்கல் கட்டுமானத்தை உறுதி செய்து கொள்வதற்கு சீனா முனைகிறது.

சீனாவின் இந்த மாற்றமும், வளர்ச்சியும் உலக ஏகாதிபத்திய போட்டியில் தளம்பல் நிலையை உருவாக்க வல்லது.

உலக தலைமைத்துவத்தைப் பேணுவதில் மிகவும் பிரயத்தனம் கொண்டிருக்கும் ஐக்கிய அமெரிக்கா, தனது தலைமைத்துவத்தை நிலை நிறுத்த இராணுவ பல நிலையை உச்சத்தில் வைத்திருப்பதன் மூலம் இராஜதந்திர பொருளாதார நகர்வுகளை நிறைவேற்றுவது பொதுவான பண்பாக இருந்து வந்தது.

ஆனால் கடந்த ஆண்டுகளில் ஈராக்கியப் படை எடுப்பு, ஆப்கானிஸ்தானிய நடவடிக்கைகள் ஆகியன மூலம் தனது பொருளாதார வளநிலையில் தளர்வு கண்டிருந்தது. மேலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை தொடர்வது ஏற்றதல்ல என்ற ஆலோசனைகளின் பெயரில், நேரடி யுத்தத்தில் ஈடுபட்டு பொருளாதார சீரழிவை உருவாக்கும் தன்மையை அமெரிக்கா தவிர்த்து வந்தது.

அதேவேளை அமெரிக்க தலைமையை சவாலாக நோக்கும் சீன, ரஷ்ய வல்லரசுகளின் எழுச்சி தவிர்க்க முடியாததாக இருப்பதாக அமெரிக்க அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அண்மைய காலங்களில் அமெரிக்க அரசுத் தலைவர் தேர்தல் மிக மும்முரமாக சூடுபிடித்து வரும் நிலையில், சீன ரஷ்ய நாடுகள் மிகத்துரிதமாக மைய நிலைக்கு வந்துள்ளன. அத்துடன் குறிப்பாக சீனா பாரிய அளவில் உலகை கட்டியாளும் நோக்கு கொண்ட வியூகம் வகுத்துள்ளதாக கருதப்படுகிறது.

தற்போது செயற்பாட்டில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பன நிர்வாக வழிமுறைகளில் சிக்கல்கள் பலவற்றை கொண்டதாக இருக்கிறது என்பது சீன ஆய்வாளர்களின் பார்வையாக உள்ளது. அத்துடன் வறுமையை நீக்கும் கடன்களாகவும் நாடுகளின் உள்நாட்டு பொருளாதார கொள்கைகளில் தலையீடு செய்யும் தன்மையை கொண்ட கடன்களாகவுமே இவ்வங்கிகள் உள்ளன என்பது இன்னுமோர் குற்றச் சாட்டாகவுள்ளது.

ஆனால் சீனாவின் AIIB நாடுகளுக்கு தேவையான வீதிகள், விமான நிலையங்கள், மின் உற்பத்தி தொழிற் சாலைகள் என கட்டமைப்பு மையங்களை உருவாக்கும் நோக்கம் கொண்டதாக இருப்பதால் போக்குவரத்தில் இலகுநிலை ஏற்படுகிறது. சமூகத்தில் வசதி நிலை ஏற்படுகிறது. இதனால் உள் நாட்டு வர்த்தகத்தில் சுழற்சி ஏற்பட்டு வளர்ச்சி தானாக இடம் பெறும் என சீன ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் தனது திட்டவாக்கங்களை கொண்டிருக்கும் அதேவேளை சீனாவிலிருந்து பின் புறமாக ஐரோப்பா வரை, தனது முக்கியமான" ஒரு சூழல் ஒரு பாதை" போக்கு வரத்து திட்டத்தை வகுத்துள்ள சீனா, ஏற்கனவே தனது திட்டங்களுக்கு ஏதுவாக, புவியியல் மூலோபாய நோக்கோடு அமெரிக்க நேச நாடுகளான துருக்கி, கசக்கிஸ்தான் ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டு விட்டது.

அத்துடன் பாதுகாப்பான கடல் போக்குவரத்தை உறுதி செய்யும் திட்டங்களும் தீர்மானங்களும் அவற்றிற்கு ஏற்றாற் போலான உடன் படிக்கைகளும் தயாராகி உள்ளன.

சீனா தனது திட்ட ஆரம்ப வேலைகள் குறித்து தீவிர மான தீர்மானங்களை மிகவும் தீர்க்க தரிசனத்துடன் முன்னோக்கி நகர்த்தியும் வருகிறது. மேலைத்தேய சந்தை தொடர்பு நிறுவனங்கள் சீனாவின் வளர்ச்சி குறித்த எச்சரிக்கை அறிவுறுத்தல்களில் முழு மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இவை தவிர்ந்த அமெரிக்க நேச நாடுகளான இந்தியா, ஜப்பான் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை கையாள்வதற்கும் உரிய தனித்துவமான இராஜதந்திர பொறிமுறைகள் வகுக்கப்பட்டு விட்டன. இவை ஒவ்வொன்றையும் குறித்த கொள்கை ஆய்வுகளை இனி வரும் கட்டுரைகளில் ஆராய்வது மூலம் தற்கால உலக அரசியலை ஒரு தனித்துவமான பார்வையூடாக காணலாம்.

இராணுவ ஆக்கிரமிப்புகள் இன்றி இராஜதந்திர அலுவலர்களின் விதிமுறை அழுத்தங்கள் இன்றி, அனைத்துலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து நாடுகளின் அயல் நாட்டு முரண்பாட்டு யுத்தங்களிலும் உள் நாட்டு வேறுபாடுகளிலும் தலையிடாது, சமாதானமான முறையில் தனது வளர்ச்சியை மட்டும் குறிக் கோளாக கொண்டு செயற்படும் சீனாவின் இந்த எழுச்சி, சமாதான எழுச்சியாக கருதப்படுகிறது.

சீனாவின் சமாதான எழுச்சிக்கு அத்திவாரமாய் இருக்கும் பொருளாதார திட்டங்களையும், அதே வேளை சீனா எந்தவகையில் பின் தங்கக் கூடும் என்ற மேலைத்தேய நோக்குகளையும் பார்க்கலாம்.

சீனத் தரப்பு தலைவர்களிடமோ அல்லது ஆய்வாளர்களிடமோ அனைத்துலக தலைமைத்துவத்தை எட்டுவது குறித்த எந்தவித குறிப்புகளும் வெளிப்படையாக கூறப்படுவதில்லை.

ஆனால் சீனாவின் பல் வேறு தேசிய சமுதாயங்கள் மத்தியிலும் இருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சிக்கான தேவை குறித்த குறிப்புகளே, பொதுவாக பேசப்படுகிறது.

உதாரணமாக தரைவழியான பட்டுப்பாதை விஸ்தரிப்பு குறித்த கருத்துகளில்: "சீனாவின் உள்ளூர் மாநிலங்களின் பொருளாதாரம், கரையோர மாநிலங்கள் போல் லாது பின்தங்கி போயுள்ளது. அத்துடன் மேற்கு சீனாவை சூழ உள்ள அரசுகளின் பொருளாதார வளர்ச்சியிலும் எமக்கு கரிசனை உள்ளது. இந்த வகையில் புதிய சந்தைப்படுத்தலையும் உற்பத்தியையும் உருவாக்குவதன் மூலம் வர்த்தக முயற்சிகளை செதுக்கி எடுப்பதே எமது நோக்கம். மேற்கு சீனப் பகுதிக்கும் கரையோர சீனப் பகுதிக்கும் இடையில் ஒரு பொருளாதார சுழர்ச்சியை ஏற்படுத்துவதே இதன் அடிப்படை" என்கிறார China Institutes of Contemporary International Relations இன் பேராசிரியர் Hu Shisheng.

(தொடரும்)

தவிடுபொடியாகிய மூடநம்பிக்கைகள் திரிசங்கு நிலையில் முன்னாள் இராஜதந்திரி

முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரான ஏ.எஸ்.பி லியனகே,முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கிய அவரது ஆடம்பர வீடுகளில் ஒன்றில் இருக்கின்ற நீச்சல் தடாகம் தங்கம் மற்றும் பண நோட்டுக்கள் இடப்பட்டு கடற்கரை மணலினால் மகிந்தவின் மூட நம்பிக்கையின் அடிப்படையில் மூடப்பட்டது எனக் கருதப்படும் இந்த நீர்த்தடாகத்திலிருந்து மணலை அகற்றுவதற்கு லியனகே பொலிஸாரின் உதவியை நாடியுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக லியனகே பெரும் மன அழுத்தத்திற்குஉள்ளாகியிருப்பதாக வெலிக்கடை பொலிஸ் நிலைய பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரலுக்கு செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றை அடுத்து அவர்பொலிஸ்நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு கருத்துதெரிவித்த அவர், பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டமுறைப்பாட்டிற்குஅமைவாக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு தேவையா? அல்லது ஏதாவது மிரட்டல்களை எதிர்





நோக்க வேண்டியுள்ளதா? மற்றும் நீச்சல் தடாகம் நிரப்பப்பட்ட மணலை அகற்றுவதற்கு செலவு செய்ய முடியுமா என்று கேட்கப்பட் டேன்.

மகிந்தராஜபக்ஷவுக்கு இரண்டு வருடங்கள் வசிப்பதற்கு வழங் கப்பட்ட எனது வீட்டில் சோதி டர்களின்சிபார்சுகளுக்கு அமை வாக வீட்டின் முன்பாக காணப் படுகின்ற நீச்சல் தடாகம் மண லினால் நிரப்பப்பட்டு பெரிய மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறான கலகலப்புகளுக்கு மத்தியில் பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை எடுத்து மணலை அகற்றுமாறு கேட்டிருக்கிறேன்.

மணலை அகற்று வதற்கான செலவை வழங் குவதாகவும் கூறியிருக்கிறேன். இந்த பரபரப்பான செய்திகளால் எனது குடும்பம் மிகவும் நெருக்கடிக் குள்ளாகியிருக்கிறது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

லியனகே கடந்த மகிந்த அரசாங்கத்தின் மிகப்பெரிய அதிகாரமிவர்.இவர்இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவர் என்பதுடன் கடந்த 2010-ஆம் நடைபெற்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்காக ஊர்வலங்கள் நடத்தியவர்.

தனது தோட்ட வியாபார முகவர் தொழிலை மீண்டும் ஆரம்பிக்க முற்பட்டார்.இதற்கு நிதி தேவைப்பட்டது.

இதனால் தனது முதுசம் எனக்கருதிய வீடு அமைந்திருந்த காணியின் ஒரு ஏக்கர் நிலப்பகுதியை 450 மில்லியன் ரூபா வுக்கு விற்பனை செய்ய முற்பட்டார். இதன் போதே அனைத்துப் பிரச்சினைகளும் ஆரம் பமாகின.

தனது வீட்டை முன்னாள் ஜனாதிபதியின் குடும் பத்திற்கு வழங்குவதற்கு முன் வந்த போது இந்தியாவின் கேரளா மாநிலத்தில் இருந்து வர வழைக் கப்பட்ட சோதிடர்களின் பரிந்துரைக்கு அமைவாக பல்வேறு மாற்றங்கள் அதில் செய்யப் பட்டிருந்தன.

பேய்களையும்பிசாசுகளையும் அந்த வீட்டில் இருந்து விரட்டுவதற்காக நள்ளிரவில் உள்ளூர் சோதிடர்களினால் பூசைகள் செய்யப்பட்டன.

வீட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள்வீட்டின்மேற்கேஅமைக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுடன் ஆரம்பமாகின. ஒரு நீர்த்தடாகம் வீட்டின் மேற்குத் திசையில் அமைந்திருந்தால் அந்த வீட்டில் வசிக்கும் மனிதருடைய அதிகாரம் அந்த நீர்த்தடாகத்தினால் உறிஞ்சப்பட்டு விடும் என்று மலையாள சோதிடர் ஒருவர் காரணம் கூறியிருந்தார்.

உடனடித் தீர்வாக நீச்சல் தடாகத்தை கடற்கரை மணல் கொண்டு நிரப்புவதற்கு பொறியியலாளர்கள் முடிவு செய் திருந்தனர்.

பின்னர் வாஸ்து சாஸ்திர ஆலோசகரின் அறிவுறுத்தலுக்கமைய வீட்டின் முன் கதவை கிழக்குத் திசைநோக்கி சூரிய உதயத்தை பார்க்கக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

அதேநேரம் இந்தியாவைச் சேர்ந்த சோதிடர்கள் குழுவொன்று எல்லா நன் மைகளும் அதிகாரங்களும் கவரக் கூடிய வகையிலான பிரமிட் வலயம் ஒன்றை வீட்டின் ஒரு கோணத்தில் விஸ்வ சக்தி என்ற பெயரில் அமைத்தனர்.



எல்லா அதிகாரங்களும் ஒருமுகப்படுத்தப்பட்ட அந்த பிரமிட் வலயத்தை தனது வாழ்வில் எந்தவொரு முக்கிய மான முடிவுகளையும் எடுக்க முன்னர் முன்னாள் ஜனாதிபதி அங்கு விஜயம் செய்ய வேண்டும் என அவர்கள் ஆலோசனை வழங்கினர்.

பிரதான படுக்கை அறை

பயனற்றது என்பது உறுதிப் படுத்தப் பட்டது. வீட்டில் செய்யப்பட்ட மாற்றங்களின் பின்னர் இந்த வீட்டில் வசிப் பதற்குவருகின்றமனிதர் இதனை விட மிகவும் சக்தி மிக்க மகா சக்தியுள்ளவர்என்பதால் இந்த வீட்டை திரும்பப் பெற மாட்டார் என்று சோதிடர்களில் ஒருவர் கூறியமை என்னை மிகவும் கடுமையாக கலக்கத்திற்கு உள்ளாக்கியது.

இதனை எனது மனைவியிடம் கூறியபோது வீட்டை விற்பனை செய்தால் விவாகரத்து பெறவேண்டி நேரிடும் என எனது மனைவி எச் சரித்தார்.

இதனால் நான் இப்பொழுது திரிசங்கு நிலையில் இருப்பதுடன் எல்லா பக்கங்களில் இருந்தும் அரசியல் ரீதியான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளேன்.

என்னை இந்த நெருக்கடிகளில் இருந்து விடுவிப்பதற்கு பொலிஸ்மா அதிபரின் தலையீட்டிற்காக காத்திருப்பதாக லியனகே மனம் கசிந்துள்ளார். (3)

செய்திக் துளிகள்

திருமலையில் சடலம் மீட்பு

திருகோணமலை, கொட்டியாவப்பகுதியில்நேற்று காலை சடலமொன்று மீட்கப் பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். திரியாய் -05ஆம் வட் டாரம், சோலையடியைச் சேர்ந்த 06 பிள்ளைகளின் தந்தையான செல்லத்தம்பி சண்முகராசா (வயது 57) என்பவரே சுல மாக மீட்கப்ப ட்டார். கடந்த 16ஆம் திகதி கட்டுக்குளம் பகுதியிலுள்ள வய லுக்கு காவ லுக்குச் சென்ற மேற்படி நபர் காணாமல் போயு ள்ளார். இது தொடர்பில் பொலி ஸில் குறித்த வயல் உரிமையாளர் முறைப பாடு செய்துள்ளார். இந நிலையில், காணா மல் போன இந்த நபரை தேடிய போது வய லுக்கு அருகிலுள்ள ஆற்றில்இவர சடலமாக்காணப்பட் தாகவும் பொலிஸர்தெரிவித்தனர். (இ)

இரத்தினக்கற்கள் குறித்து அரசாங்கம் கணக்காய்வு

சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ள இரத் தினக கற்கள் தொடர்பில் அரசாங்கம் கணக்காய்வு செய்ய உள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக காலத்தில் இவ்வாறு நாட்டை விட்டு பெருந்தொகை இரத்தினக் கற்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட இரத்தினக் கற்கள் பற்றிய மதிப்பீடு செய்யப்பட உள்ளது. இவ்வாறு சட்ட விரோதமான முறையில் இரத்தினக் கற்கள் கொ ண்டு செல்லப்பட்டதனால் இலங்கை இரத்தினக் கல் மற்றும ஆபரண அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட உள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவிற்கு அமைய சட்ட விரோதமான முறையில் நாட்டிலிருந்து இரத்தினக் கற்கள் எடுத்துச் செல்லப்படுவதனை தடுக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதி காரசபையின் தலைவர் அசங்க வெலகெதர தெரிவித்துள்ளார். (இ)

சட்டவிரோத சிகிச்சைகள் இலங்கையில் அதிகரிப்பு

இலங்கையில் 30 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச சிறுநீரக உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் இலங்கையில் சட்டவிரோதமாக இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறுநீரக உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையுடன் தொடர்புடைய பலரை தெலுங கானா மாநில அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுற்றுலா விசாவின்ஊடாக சிறுநீரகங்களை வழங்கும்நபர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்து சட்ட விரோதமான முறையில் சத்திர சிகிச்சைகள் மேற் கொளளபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.சத்திர சிகிச்சைக்காக 27 முதல் 30 லட்சம் இந்திய ரூபா பணம அறவீடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

கணவன் மரணம்; மனைவி அச்சத்தில்

எம்பிலிப்பிட்டிய - மஹாஎல பகுதியிலுள்ள வீடொன றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் போது பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தவரின் மனைவி தனக்கு பாதுகாப்பு இல்லை என ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் தனது கணவர் உயிரிழந்த இடத்தில் உள்ள சாட்சிகளை பொலிஸார் முறையாக பாதுகாக்காமல் அசமந்த போக்கில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய - மஹாஎல பகுதியிலுள்ள வீடொன்றில இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்ட 29 வயதுடைய சுமித் பிரசன்ன ஜயவர்தன என்ற குடும்பஸ்தர் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் வீட்டின் மேல் மாடியில் இருந்து கீழே விழுந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

689 மில்லியன் ரூபாவாக கடன்தொகை அதிகரித்தது

இலங்கை கடற்றொழில் சங்கத்தின் பல் நிறுவனங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை 689 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை ,மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மீன்களுக்காக செலுத்தப்படவுள்ள கடன் தொகை என்பவை இவற்றுள் உள்ளடங்குவதாக இலங்கை கடற்றொழில் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி துசித அளுத்பட்டபெந்திகே தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மாத்திரம் 77 மில்லியன் ரூபா நிதி செலுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத் திற்கு உரிய முறையில் நிதி செலுத்தப்படாமை யால ஊழியர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் இலங்கை கடற் றொழில் சங்கங்களின்பொது சேவைச் சங்கத்தின் செயலாளர் ஜே. எச். நிசாந்த தெரிவித்தார்.(இ)

ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

08.01.2016-27.07.2017 வரை

விரய ஸ்தானத்தில் ராகு, வீட்டில் விரயம் கூடும்!
அனுபவ அறிவால் பிறரை கவரும் கன்னி இராசி நேயர்களே!

நவக்கிரகங்களில் 'கல்விக்கிரகம்' என்று போற்றப்படும் புதன் உங்கள் ராசி நாதனாக விளங்குகிறார். எனவே கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்குவீர்கள். புதன் வலிமை இழந்திருப்பவர்கள் கல்வியறிவைக் காட்டிலும அனுபவ அறிவு மிக்கவர்களாக விளங்குவர்.

'சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்' என்ற வைர வரிகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர் நீங்கள். எந்தக் காரியத்தையும் கடைசி வரை இருந்து முடித்துக் கொடுக்கும் கடமை உணர்வைப் பெற்றிருப்பீர்கள். எப்படியும் வாழலாம் என்று வாழ்பவர்களுக்கு மத்தியில் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நினைப்பீர்கள்.

பழைய சடங்கு, சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை கொண்ட உங்களுக்கு இந்த ராகு- கேது பெயர்ச்சி எப்படிப் பட்ட மாற்றங்களைக் கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்யும் கோதண்ட ராகு! ஆற்றலைப் பளிச்சிட வைக்கும் ஆறாமிட கேது!

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும், தனது வான்வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழி செய்யப் போகிறார்கள்.

பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு, பயணங்களால் பலன் கிடைக்கச் செய்யும். தூர தேசத்திலிருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வந்து சேரலாம். சுய ஜாதகத்தை ஆராய்ந்து அந்த வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் வரும் விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்ளுங்கள்.

காது குத்து முதல் கல்யாண வாய்ப்பு வரை சுபகாரியங்கள் வந்து அலைமோதும். தங்கம், வெள்ளி மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ உகந்த நேரமிது. நீங்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதில் உங்கள் திறமையைக் காட்டிப் பெருமை பெறப்போகிறீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு அருகிலிருப்பவர்களால் ஏற்பட்ட ஆபத்துக்கள் அகலும். அதிகாரிகளிடம் கவனமுடன் செயறபடுவது நல்லது. வீடு கட்டும் முயற்சியில் அல்லது வாங்கும் முயற்சியிலும், பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும் விரயங்களைச் செய்யலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

வெற்றி உங்கள் வீடு தேடி வரும். தேக நிலை சீராகும். தெய்வ அருள் கிடைக்கும். மக்கள் செல்வாக்கு மேலோங்கி மகத்தான வாழ்வை அமைத்துக் கொள்வீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும. வி.ஐ.பி.க்கள் தினமும் வீடு தேடி வருவர்.

வாகன யோகம் முதல் வளர்ச்சி தரும் அத்தனை யோகங்களும் கிடைப்பதற்கான வாய்ப்பை இந்த ராகு வழங்குவார். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். நாடாளும் நபர்களின் நட்பால் நன்மைகள் வந்து சேரும். 'ராகுவைப் போல கொடுப்பானுமில்லை' என்பது பழமொழி. பொதுவாழ்வில் புகழ் சேரவும், தலைமைப் பதவிகள் தானாக வந்து சேரவும் வழிவகுக்கும் கேதுவையும், கிள்ளிக்கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் ராகுவையும் வழிபாடு செய்து வந்தால் வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். நாகநாதர்தான் உங்களுக்கு யோக நாதர், சர்ப்ப கிரகங்கள்தான் சந்தோஷம் தரும் கிரகம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஆதாயம் தரும் ஆறாமிடத்து கேது!

சப்தம ஸ்தானத்தில் இதுவரை சஞ்சரித்து வந்த கேது இப்பொழுது ஆறாமிடத்தில் அடியெடுத்து வைக்கப் போகின்றது. எனவே எதிரிகள் உதிரியாவர். இதுவரை இருந்த குடும்பப் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக முடியும். சகோதர ஒற்றுமை பலப்படும். தக்க விதத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

ஆரோக்கியம் சம்பந்தமாக இருந்த குறைபாடுகள் அகல மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. உடனடி நிவாரணம் உங்களுக்கு கிடைக்கும். பூமி சேர்க்கைக்கு அஸ்திபாரமிடுவீர்கள். புதிய மனைகட்டிக் குடியேறும் ஆசை மனதில் நீண்டநாட்களாக இருக்கலாம். அவை செயறபடும் நேரம் இப்பொழுதுதான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்போடு எப்பொழுதும் முன்னேற்றம் காண வழிபிறக்கும். இதைக்காட்டிலும் நல்ல வேலை கிடைக்குமா? என்று காத்திருந்தவர்களுக்கு தற்போது பணிபுரியும் இடத்திலேயே உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிடைத்து மகிழப்போகிறீர்கள். உயர் அதிகாரிகளும், மேலிடமும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நீங்கள்தான் எங்கள் கம்பெனி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். எதை கேட்டாலும் தருகிறோம் என்று சொல்லி கம்பெனி முதலாளிகள் கைகோர்த்துக் கொள்வர். கேது பலத்தால் வி.ஐ.பி.க்களாகவும், வி.வி.ஐ.பி.க்களாகவும் மாறப்போகிறீர்கள். 'மாபெரும் சபைதனில நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்' என்ற கண்ணதாசனின் வைர வரிகள் இப்பொழுது உங்கள் வாழ்க்கையில் நடக்கப் போகின்றது.

அஞ்சல் வழியில் நெஞ்சம் மகிழும் தகவல்கள் வரும்

கொஞ்சிப்பேசும் குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுக்க வழி பிறக்கும். மணமாலை சூடும் வாய்ப்பும், மங்கல நிகழ்ச்சிகள் நடத்தும் வாய்ப்பும் கேது பலத்தால் உருவாகப் போகின்றது.

கேதுவின் பலத்தால் கடன் சுமை கூடலாம். இருப்பினும், புதிய கடன்களும் உங்களுக்கு கிடைக்கும். பொருளாதார நிலை உயரும் என்றாலும், ஒருவருக்கேனும் கடன் பாக்கி வைத்திருப்பீர்கள். எதிரிகளின் பலம் கூடும் என்பதால் இந்த நேரத்தில் நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பார்களா? என்பது சந்தேகம்தான். பகை நட்பாக விநாயகப் பெருமான் வழிபாடு அவசியம் தேவை.

பாதசாரப்படி ராகு தரும் பலன்கள்!

ராகு பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 10.3.2016 வரை): அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறைவாகக் கிடைக்கும். திடீர் இடமாற்றங்கள் திக்குமுக்காடச் செய்யும். ஆரோக்கியத் தொல்லைக்காகவும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று புனிதப்படுத்திக் கொள்வதன் மூலமே எண்ணிய காரியங்கள் எளிதில் நடக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விருப்பம் இல்லாத இடத்திற்கு மாறுதல் கிடைத்து மகிழ்ச்சிக் குறைவை உருவாக்கும். இதுபோன்ற காலங்களில் வீண் செலவுகள் ஏற்படாமலிருக்க வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது.

ராகு பகவான் சுக்ர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை): பற்றாக்குறை அகலும். தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரணப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். உடன்பிறப்புகளின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். இதுவரை பாசம் காட்டாத பெற்றோர்கள் இனி பாசமும், நேசமும் காட்டுவர். தக்க சமயத்தில் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

ராகு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை): வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. தொழிலில் இழப்புகளைச் சந்திக்க நேரிடும். நட்பு பகையாக மாறவும் வாய்ப்பு உண்டு. புது முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

எனவே, உங்களுக்கு கிடைக்க வேண்டிய உத்தியோக உயர்வு உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களுக்கு கிடைத்துவிடலாம். இட மாற்றம் செய்யலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். இனம்புரியாத கவலை மேலோங்கும் இந்த நேரத்தில் வடக்கு நோக்கிய விநாயகரையும், மேற்கு நோக்கிய துர்க்கையையும் வழிபட்டு வருவது நல்லது.

பாதசாரப் அடிப்படையில் கேது தரும் பலன்கள்!

கேது பகவான் குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை) குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திருமண முயற்சிகளில் அனுகூலம் உண்டு. நீண்ட நாளைய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உதவிகளும் கிடைக்கும். லாபமும் வந்து சேரும். வாழ்க்கைத் துணையின் வேலைவாய்ப்பிற்காக ஏற்பாடு செய்திருந்தால் அது கிடைக்கும். அதன் மூலம் உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

கேது பகவான் ராகு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (14.7.2016 முதல் 22.3.2017 வரை) உடல் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவு குடும்பத்தில் வந்துகொண்டிருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். இடையூறுகள் ஏற்பட்டு பல பணிகள் பாதியிலேயே நிற்கும். செலவு கூடும்.

குடும்பச் சுமையும் அதிகரிக்கும். வீடு, வாகனப் பராமரிப்பில் கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டு முயற்சிகளிலும் தடை ஏற்படலாம். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

கேது பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல் 26.7.2017 வரை) வீண் பிரச்சினைகள் அலைமோதும். உடன் பிறப்புகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம். அரசு வழித்தொல்லைக்கு ஒருசிலர் ஆட்பட நேரிடலாம். உறவினர்கள் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் உருவாகி பிரிவு ஏற்படலாம். விற்ற சொத்துக்களில் வில்லங்கம் இருக்கிறதே என்று சொல்லி மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்கலாம். எதையும் யோசித்துச் செய்ய வேண்டிய நேரமிது. அங்காரக வழிபாட்டைச் செய்தால் அல்லல்கள் தீர்ந்து ஆனந்தம் பெருகும்.

வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

பனிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பணிகளில் தொய்வு ஏற்படாதிருக்கவும், ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அல்லல்கள் அகலவும், வாரம் தோறும் சனிக்கிழமை அன்று சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. மேலும் புதன்கிழமை விரத மிருந்து அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

(நாளை துலாம்)

விரய ஸ்தானத்தில் ராகு வருவதால்! வீட்டில் விரயம் கூடும்!

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந்துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச் செல்லும்
– கவி தாம்ஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

பரட்டைக்காட்டுக்கு கரட்டி ஓணான் பஞ்சவர்ணக்கிளி

தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் என்றொரு பழமொழி நம் தமிழ்மொழியில் உண்டு.

சிறுவயதில் இப் பழமொழியைப் படித்தபோது அதன்பொருளை விளங்குவதில் கடினம் இருந்தது. காரணம் உதாரணங்களை கண்டறிய முடியவில்லை.

ஆனால் இப்போது இந்தப் பழமொழியின் பொருள் அப்படியே உள்வாங்கப்படுகிறது. காரணம் வடக்கு மாகாண சபையில் உள்ள சில உறுப்பினர்கள் ஆடுகின்ற ஆட்டமே இதற்கு நல்ல உதாரணமாக இருப்பதால்.

வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டைக் குழப்புவதில் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் மிகமோசமான–அடாவடித்தனமான முறையில் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துவரும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவர்களின் செயற்பாடுகள் அமைந்திருப்பது உறுதியாகியுள்ளது.

அதிலும் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் மிக உன்னதமான உரை ஒன்றை பிரதமர் ரணில், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இருந்த அரங்கில் ஆற்றியிருந்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆற்றிய இந்த உரை உலகத்தமிழினம் முழுமையினதும் கவனத்தை ஈர்ப்புச் செய்திருந்தது.

இதனால் ஆத்திரமடைந்த; இலங்கை அரசுக்கு ஆதரவான; வன்னிப்போரில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டும் என அல்லும் பகலும் பாடுபட்டவர்கள் என இனங்காணப்பட்ட; வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பில் இருக்கக்கூடிய நான்கு, ஐந்து மாகாண சபை உறுப்பினர்கள், முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்ந்தும் முதலமைச்சராக இருந்தால் அது தமிழினத்துக்குப் பலமாக அமையும் என்ற அடிப்படையில், அவருக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்டு வருவதில் கடுமையாக முயற்சி செய்கின்றனர்.

இவர்களின் நடவடிக்கையால் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழர் அரசு என்ற அடிப்படையில் அமையப் பெற்ற வடக்கு மாகாண சபையில் இருந்து கொண்டு மாகாண சபையை குழப்புவதற்கு இவர்கள் செய்கின்ற சதித்திட்டம் தமிழ் மக்களுக்குச் செய்யும் மிகப்பெரும் துரோகத்தனமாகும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களுக்கான உரிமையை அரசு உரியவாறு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பது இவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது என்பதை தமிழ் மக்கள் நிச்சயம் அவதானிப்பர்.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களாக இருந்து கொண்டு, முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தொடர்ந்தும் செயற்பட்டு வரும் வடக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பின்– தமிழரசுக் கட்சி சார்ந்த சில உறுப்பினர்கள் தொடர்பில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவைசேனாதிராசாவும் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொறுப்புடன் நடக்க வேண்டிய சபை உறுப்பினர்கள் சபையில் சண்டித்தனக்காரர்களாக; குழப்பம் விளைவிப்பவர்களாக நடந்து கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும்.

இதைச் செய்யாமல் விட்டால், பரட்டைக்காட்டுக்கு கரட்டி ஓணான் பஞ்சவர்ணக் கிளி என்பதாக நிலைமை ஆகிவிடும். இந்நிலைமை ஏற்பட்டால் தமிழ் மக்கள் உரிய நேரத்தில் தக்க பாடம் புகட்டுவர்.

தருமபுரம் ஆதீனத்தின் அனுசரணையுடன் யாழில் சைவசித்தாந்த, திருமந்திர பயிற்சி

அகில இலங்கை சைவ மகா சபை இந்தியா தருமபுரம் ஆதீனத்தின் அனுசரணையுடன் சைவ சித்தாந்தம் மற்றும் திருமந்திர பயிற்சி நெறியை நடத்தவுள்ளது. அண்மையில் இந்தியாவுக்கு சென்ற சைவ மகா சபையின் பிரதிநிதிகள் தருமபுரம் மற்றும் திருவாவடுதுறை ஆதீனங்களின் குருமுதல்வர்களுடன் கலந்துரையாடியதன் பேரில் யாழ்ப்பாணத்தில் இந்தப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இந்தப் பயிற்சி நெறி ஒரு வருட காலத்தில் நிறைவடையும். பயிற்சி நிறைவில் திருவாவடுதுறை ஆதீனத்தால் பட்டச் சான்றிதழ் வழங்கப்படும். சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையிலான போதனாசிரியர்களால் இந்தப் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

தைப்பூசத் தினமான எதிர் வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு கீரிமலையில் (நகுலேஸ்வரத்திற்கு அண்மையில்) உள்ள குழந்தை வேல் சுவாமிகள் சமாதி, மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் சமாதி ஆகியவற்றில் இடம்பெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து மேற்படி பயிற்சி நெறி ஆரம்பமாகும். தொடர்ந்து சைவ மகா சபையின் கொக்குவில் தலைமை அலுவலகத்தில் பயிற்சிகள் நடைபெறும்.

பாடசாலைகளில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறநெறி ஆசிரியர்கள், சமயப் பிரசங்கிகள், சிவதொண்டர்கள் மற்றும் சைவ சமயத்தில் ஈடுபாடுடையோர் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற முடியும்.

பயிற்சியில் இணைய விரும்புபவர்கள் கொக்குவிலில் உள்ள அலுவலகத்தில் பதிவுசெய்யலாம். அல்லது 0770711152, 021 320 32 84 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று சைவ மகா சபை தெரிவித்துள்ளது. (இ)

முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட சகல வர்த்தகர்களினதும் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கு நேற்று முதல் 22ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ்.மாவட்டசெயலகத்தில் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவில் பரிசோதித்து முத்திரையிடப்படும் என்ற அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ். மாநகரசபைக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் மேற்படி தினங்களில் தங்கள் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகளைப் பரிசோதித்து அசௌகரியங்களை தவிர்க் குமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழிசைப் போட்டி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள தமிழிசை விழாவையொட்டி நடத்தப்படும் மாணவர்களுக்கான தமிழிசைப்போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மாணவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் ஏனைய மாவட்டத்திலுள்ள மாணவர்கள் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கம் இல.7, சங்கம் வீதி (உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை), கொழும்பு-06 சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் வரவை தொலைபேசி இல.011 236 3759, தொலைநகல் 011 236 1381 ஆகிய இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு சங்கத்தின் பதில் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சுந்தசாமி அறிவித்துள்ளார். (இ

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் எந்தவொரு அபிவிருத்தி வேலைகளும் இடைநிறுத்தப்படாது எனவும் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தற்போது அபிவிருத்தி வேலைகளில் இடம்பெற்று வருகின்ற தேவையற்ற மோசடிகளே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அபிவிருத்தி வேலைகள் எதுவும் தடுத்து நிறுத்தப்படவில்லை.

பெண்தோட்டப் பகுதியில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பெண்தோட்ட மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 53 குடும்பங்களுக்கான வீட்டு நிலங்கள் இதன்போது கையளிக்கப்பட்டது. (இ)

மேலதிகமாக இரண்டு பேருந்து சேவைகள்

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை வரையிலான இ.போ.ச. பேருந்துச் சேவைகளில் நேற்று முதல் இரண்டு மேலதிக பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப் பட்டதாக இ.போ.ச. பருத்தித்துறை சாலை முகாமையாளர். கே. கந்தசாமி தெரிவித்தார்.

இது வரை காலமும் அதிகாலை 4.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கான சேவை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் காலை 7.45 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை நோக்கிய சேவை இடம் பெற்றது.

ஆனால் இன்று முதல் காலை 8.30 மணிக்கு மேற்படி சேவை இடம்பெறும் எனவும் மாலை நேர சேவை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் தீருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு காலை 8 மணிக்கும் பிற்பகல் 4.30 மணிக்கும் சேவைகள் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை நோக்கி நண்பகல் 12 மணிச் சேவையானது வழமை போல் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-60)

புகையிரதத்தில் பயணித்தார் இராஜாங்க அமைச்சர் சுஜீவ

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற பொருளாதார உச்சிமாநாட்டில் விடுக்கப்பட்ட சவாலை சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க நிறைவேற்றியுள்ளார்.

இந்த மாநாட்டில் எதிர்கால இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமாக போக்குவரத்து துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அல்பேனிய நாட்டின் நகரபிதா "பொது போக்குவரத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலமே ஒரு நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும்" என தெரிவித்தார்.

அத்துடன் அரச அதிகாரிகளும், அமைச்சர்களும் ஒரு தடவையாவது ரயில் அல்லது பஸ் போன்ற பொது போக்குவரத்து சேவைகளினூடாக பயணிப்பதன் மூலம் அதில் காணப்படும் குறைகளைக் கண்டு அதை நிவர்த்தி செய்யமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் இந்த பொது போக்குவரத்து சேவைகளில் பயணிக்கும் இந்த சவாலை அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

எனவே இந்த சவாலை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து கண்டியிலிருக்கும் தனது வீட்டிற்கு ரயிலில் சென்றுள்ளார். (இ)

இலங்கையில் முதன் முறையாக சமுத்திர சுற்றாடல் சுகாதார மாநாடு

(கொழும்பு)

முதற்தடவையாக இலங்கையில் சமுத்திர சுற்றாடல் சுகாதார மாநாடு எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திமிங்கிலம்உட்படஏனைய கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் சமுத்திர சுற்றாடலை தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் நோக்கில் இம்மாநாடு நடத்தப்படுகிறது.

இந்து சமுத்திர பாலூட்டிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (CRIOMM-Centre for Research on Indian Ocean Marine Mammals), எங்கள் இனம் மற்றும் சமுத்திர நிறுவனம் (ONS-Our Nation and the Sea Initiative), இந்து சமுத்திர மற்றும் சமுத்திர விவகார ஒத்துழைப்பு (IOMAC-Indian Ocean Marine Affairs Co-operation) செயலகம் ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு 26ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

உங்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கின்றேன்; தேவி உங்கள் இதயத்தில் எழுந்தருள்வாளாக! உங்கள் கைகளுக்கு எல்லையிலா வலிமை தருவாளாக! ஜெய் காளி, ஜெய்காளி, ஜெய்காளி! அவள் நிச்சயமாக இறங்கி வருவாள், மகா பலத்துடன் வெற்றி அனைத்தையும் கொண்டு வருவாள், உலகையே வெற்றி கொள்ளச் செய்வாள். அன்னை வந்து கொண்டிருக்கின்றாள். ஏன் பயம்? யாரிடம் பயம்? ஜெய்காளி, ஜெய்காளி! உங்கள் ஒவ்வொருவரின் நடையிலும் பூமி நடுங்கட்டும். ஜெய்காளி, ஜெய்காளி!மேலே மேலே செல்லுங்கள். முன்னேறுங்கள்,ஜெய்குரு! ஜெய் ஜெகதம்பா! ஜெகதம்பா!

நான் தேவியின் அடிமை. நீங்களும் தேவியின் அடிமைகள். நமக்கு என்ன அழிவு? என்ன பயம்?

பொதுநலன் வழக்கு மூலம் எனது தலைமை திறனை பரிசீலியுங்கள்

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி மெல்பேர்னில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த போட்டியில் அவுஸ்திரேலியா அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது. மக்ஸ்வெல் 83 பந்தில் 8 பவுண்டரிகள், 3 சிக்சர்களுடன் 96 ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

போட்டிக்குப் பின் பேசிய இந்திய அணி கப்டன் டோனி கூறியதாவது,

மோசமான பீல்டிங் காரணமாகவே இந்த போட்டியில் தோல்வியை தழுவினோம். குறைந்தது மூன்று பவுண்டரிகளையாவது எளிதாக தடுத்து இருக்க முடியும். இந்த போட்டியில் பட்ஸ்மேன்கள் சிறப்பாக செயற்பட்டனர். அறிமுக போட்டியில் விளையாடி ரிஷி தவன் மற்றும் குர்கிரத் ஆகியோர் சிறப்பாகவே பந்து வீசினர். எனினும், மற்றொரு இளம் வீரரான ஷரன் நன்றாக வீசவில்லை. இதனால் பவுலர் களை மாற்றுவதில் சிரமமாக இருந்தது என்று கூறினார். டோனியிடம் அவரது கப்டன் சீப் பற்றி கேள்வி எழுப்பிய போது,

என்னுடைய தலைமை செயற்றிறன் பற்றி நான் ஆய்வு செய்தால் அதில் சொந்த விருப்பு வெறுப்புகள் இருப்பதாக குற்றச்சாட்டு எழும். எனவே ஒரு பொது நலன் வழக்கு மூலம் என்னுடைய தலைமை செயற்றிறன் பற்றி முடிவு செய்யலாம் என்று கிண்டலாக பதில் அளித்தார். (க)

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி; செரீனா, குவிட்டோவா முதல் சுற்றில் வெற்றி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நேற்று ஆரம்பமாகியது.

நடப்பு சம்பியனும், உலகின் முதல் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) முதல் சுற்றில் இத்தாலியை சேர்ந்த கேமிலாவை எதிர்கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-4, 7-5 என்ற செட் கணக்கில் வென்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். அவர் 2 ஆவது சுற்றில் சூட்வெய் (சீனதையே) அல்லது ஜெல்னாவை (இத்தாலி) எதிர்கொள்கிறார்.

6 ஆம் நிலை வீராங்கனையான பெட்ரா குவிட்டோவா (செக்குடியரசு) தொடக்க சுற்றில் தாய்லாந்தை சேர்ந்த லுக்சிகாவை சந்தித்தார். இதில் குவிட்டோவா 6-3, 6-1 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்றார்.

மற்ற ஆட்டங்களில் 10 ஆம் நிலை வீராங்கனை கார்லா சுராஸ் (ஸ்பெயின்), டாரியா (அவுஸ்திரேலியா) வென்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

7 ஆம் நிலை வீரரான நிஷி கோரி (ஜப்பான்) தொடக்க சுற்றில் ஜேர்மனியை சேர்ந்த பிலிப்பை சந்தித்தார். இதில் நிஷி கோரி 6-4, 6-3, 6-3 என்ற கணக்கில் எளிதில் வென்று முன்னேறினார்.

15 ஆம் நிலை வீரரான டேவிட் காபின் (பெல்ஜியம்), 3-6, 6-3, 6-4, 6-4 என்ற கணக்கில் உக்ரைனை சேர்ந்த செர்ஜியை தோற்கடித்தார். (க)

டெஸ்ட் தரவரிசையில் ஸ்டுவர்ட் பிராட் முதலிடம்

தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது. இதன் முதல் இன்னிங்ஸ் முடிவில் தென்னாபிரிக்கா 10 ஓட்டங்கள் மட்டுமே பின்தங்கியிருந்தது. 2 ஆவது இன்னிங்சில் அந்த அணி 83 ஓட்டங்களில் சுருண்டது. இதற்கு இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட்டுதான் முக்கிய காரணமாக இருந்தார். அவர் ஒரு கட்டத்தில் 30 பந்துகளில் 1 ஓட்டம் மட்டுமே கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி தென்னாபிரிக்க அணியை நிலைகுலையச் செய்தார்.

இவரது அபார பந்து வீச்சால் தென்னாபிரிக்கா 83 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து 3 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா மண்ணில் சுமார் 20 ஆண்டுகள் கழித்து இங்கிலாந்து தொடரை வென்றது. வெற்றிக்கு காரணமாக இருந்த பிராட் ஐ.சி.சி. டெஸ்ட் பந்து வீச்சு தரவரிசையில் முதன் முறையாக முதல் இடத்திற்கு முன்னேறினார்.

கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவின் அஸ்வின் முதன்முறையாக முதல் இடத்திற்கு முன்னேறினார். சுமார் 16 நாட்கள் அந்த இடத்தில் இருந்த அஸ்வினை பின்னுக்குத் தள்ளி பிராட் முதல் இடத்திற்கு முதன்முறையாக முன்னேறியுள்ளார்.

பிராட் 880 புள்ளிகள் பெற்று முதல் இடம் பிடித்துள்ளார். அஸ்வின் 871 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார். காயத்தால் அவதிப்பட்டு வரும் ஸ்டெயின் 850 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திற்கு இறங்கியுள்ளார்.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் யாசீர் ஷா 4 ஆவது இடத்தையும், இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஆண்டர்சன் 5 ஆவது இடத்தையும், ரவீந்திர ஜடேஜா 6 ஆவது இடத்தையும், நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் போல்ட் 7 ஆவது இடத்தையும், அவுஸ்திரேலியாவின் ஹசில்வுட் 8 ஆவது இடத்தையும், நியூசிலாந்தின் மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் சவுத்தி 9 ஆவது இடத்தையும், தெனனாபிரிக்காவின் பிலாண்டர் 10-வது இடத்தையும் பிடித்துள்ளனர். (க)

இருபது-20 உலகக்கிண்ணம் இந்தியாவுக்கு எளிதல்ல

இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய அணிக்கு எளிதானதாக இருக்காது என்று அதிரடி துடுப்பாட்ட வீரரான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

மோசமான பார்ம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சுரேஷ் ரெய்னா இடம்பெறவில்லை.

தற்போது உள்ளூர் தொடரான சையது முஷ்டாக் அலி டிராபி போட்டியில் உத்தர பிரதேச அணியை வழி நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் சொந்த மண்ணில் இருபது-20 உலகக்கிண்ணப் போட்டியில் பங்கேற்றாலும் இந்திய அணிக்கு அது எளிதாக அமையாது என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், உலகக்கிண்ணப் போட்டியில் வீரர்கள் கடினமாக உழைக்க வேண்டியது அவசியமான ஒன்று.

முக்கியமாக 'டெத்' ஓவர்களில் சிறப்பாக துடுப்பெடுத்தாட முயற்சி செய்ய வேண்டும்.

எத்தகைய வித்தியாசமான சொட்களை ஆட வேண்டும் என்று ஒவ்வொரு துடுப்பாட்ட வீரரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கண்டிப்பாக ஆடுகளம் வெற்றியாளரை தெரிவு செய்யப் போவது இல்லை. எனவே கடினமாக உழைக்க வேண்டும்.

இருபது-20 போட்டியை பொறுத்தவரை அங்கு என்ன செய்கிறோம் என்பதை பொறுத்தே வெற்றி தேடிவரும்.

துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என அனைத்திலும் சிறப்பாக செயற்படும் போது வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

அணியில் உள்ள அனைவருக்கும் என்ன செய்ய வேண்டும் என்பது நன்றாக தெரியும். இந்திய அணியில் உள்ள ஒவ்வொரு வீரரும் அணித்தலைவரே. அதற்கு ஏற்றார் போல் செயற்பட வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

மொட்டைக் கடி...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் பேரவையில் தலைவராக இருக்க முடியாது எனவும் அவ்வாறு இருந்தால் முதலமைச்சராக இருக்க முடியாது எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் முதலமைச்சரிடம் நேரடியாக கூறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஆரம்பகட்டமாக யாழ்.பொது நூலகத்தில் நேற்றைய தினம் இரகசிய கூட்டம ஒன்றை மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் சேர்ந்து நடத்தியுள்ளனர். பெரும்பாலான உறுப்பினர்கள் இக் கூட்டத்தை புறக்கணித்தும் உள்ளனர். கலந்து கொண்டவர்களில் சிலருக்கு கூட்டம் நடைபெறும் வரையில் எதற்கான கூட்டம் என்ற தெளிவு இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தின் போது வடக்கு மாகாண அவைத்தலைவர் மற்றும் இரு அமைச்சர்கள், ஒருசில உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தம்மை நாளை 20-ம் திகதி கட்டாயம் சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதற்கான கடிதம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதில் உறுப்பினர்களது கையெழுத்துக்களும் பெறப்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று சுவிஸ்சர்லாந்து நாட்டின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலகத்தில் நேற்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு வடக்கு மாகாண முதலமைச்சர், அவைத தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், மீன்பிடி அமைச்சர டெனிஸ்வரன், கல்வி அமைச்சர் குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்கள் அஸ்மின், ஆனோல்ட், சயந்தன் உள்ளிட்ட சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கருத்தரங்கு நடைபெற்று கொண்டு இருக்கும் போது கூட்டத்தின் பின்வரிசையில் இருந்து எவ்வித உறுதிப்படுத்தலுமற்ற கடிதமொன்று மாகாணசபை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டு உள்ளது. அக்கடிதத்தில், இக்கருத்தரங்கு முடிவுற்றதும் உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறுமென குறிப்பிடப்பட்டிருந்த தோடு, அனைவரும் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டிருந்தது.

இதனை பார்த்த சக மாகாண சபை உறுப்பினர்கள் இது மொட்டைக்கடிதம் எனவும், இதனை வைத்து கொண்டு தாம் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது எனவும் கூறியுள்ளனர். பின்னர் கருத்தரங்கு முடிவுற்றதும் முன்னறிவித்தல் ஏதுமின்றி தாம் ஒரு கூட்டம் நடத்தப்போவதாக முதலமைச்சர் மீது அதிருப்தி கொண்ட சில இளம் மாகாண சபை உறுப்பினர்கள் கூறியுள்ளனர். இத்திடீர் கூட்டத்திற்கான காரணத்தை ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் அவர்களிடம் கேட்ட போது, தம்மை முதலமைச்சர் நாளை 20-ம் திகதி சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுத்து மூலம் முன்வைக்கப்போவதாக கூறியுள்ளனர். சந்திப்புக்கான காரணத்தை அறிய முற்பட்ட போது தெளிவான பதில் கூறப்படாத நிலையில், பெரும்பாலான உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என கூறி வெளியேறியுள்ளனர். பெரும்பாலான உறுப்பினர்களின் எதிர்ப்பையும் மீறி அதிருப்தியாளர்கள் கூட்டத்தை நடத்தினர்.

கூட்டத்தின் முடிவில் நாளை 20-ம் திகதி முதலமைச்சர் தம்மை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு கடிதம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு உறுப்பினர்கள் சிலரின் கையெழுத்தும் பெறப்பட்டுள்ளது. கூட்டத்தில் கலந்து கொள்ளாத ஏனைய உறுப்பினர்களுடன் தொடர்பை ஏற்படுத்திய அதிருப்தியாளர்கள் சிலர், கடிதத்தில் கையெழுத்திட முடியுமா? இல்லையா? என கேட்டுள்ளனர்.

கூட்டம் போடுதற்கு நீங்கள் யார்? உங்கள் நேரத்துக்கு எல்லாம் நாங்கள் வர முடியாது என மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் கடிந்துள்ளனர். எனினும் தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் கையெழுத்துடன் முதலமைச்சரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட தரப்பு தெரிவிக்கின்றது.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதியன்று கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டம் ஒன்று தமிழரசு கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இக்கூட்டத்தில முதலமைச்சர் மீது சில குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட உள்ளது எனவும்,

இதனை முன்னிட்டே முதலமைச்சர், தம்மை 20-ம் திகதி சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கை அதிருப்தியாளர்கள் சிலரினால் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் இது உள் நோக்கம் உடைய ஏற்பாடாகும் எனவும் உறுப்பினர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.(நு-4)

மிருசுவில் கொலை...

கொள்ளையடித்த குற்றத்துக்காக 3 பேருக்கு நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம 15 ஆம் திகதி மிருசுவில் பகுதியைச் சேர்ந்த முருகேசு சத்தியநாதன் என்பவரை குறித்த நபர்கள் உலக்கையால் அடித்து கொலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கொலைக்குப் பயன்படுத்திய இரத்தம் தோய்ந்த உலக்கையை குடமியன் இராணுவ முகாமுக்கு எதிரில் உள்ள வயலில் வீசியெறிந்த போது, அதனை தொலை நோக்கியொன்றின் மூலம் கண்ட இராணுவ சிப்பாய் ஒருவரின் உடனடி நடவடிக்கையையடுத்து, முதலாம் எதிரி கைது செய்யப்பட்டார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மிருசுவில் பகுதியைச சேர்ந்த முருகேசு சத்தியநாதன் என்பவரைக் கொலை செய்த வேளை அவருக்குச் சொந்தமான ஹைஏஸ் வாகனம் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாக பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முதலாம் எதிரியாகிய சூரியகுமார் அஜந்தன் அல்லது அஜித்தன், இரண்டாம் எதிரியாகிய விக்னராஜா செல்வேந்திரன், மூன்றாம் எதிரியாகிய சிவதாசன நிசாந்தன் அல்லது தினேஸ் என்ற மூன்று பேருக்கும் எதிராக சட்டமா அதிபரினால் கடந்த 2014 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 28 ஆம் திகதி கொலை மற்றும் கொள்ளைக் குற்றச்சாட்டுக்கள் கொண்ட குற்றப் பகர்வுப் பத்திரம் யாழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்றைய தினம் தீர்ப்புக்காக மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தீர்ப்பின் போது இந்த மூன்று எதிரிகளும் பொது எண்ணத்துடன் ஒன்றாகச் சேர்ந்து முருகேசு சத்தியநாதனை கொலை செய்தமையும், கொலை செய்யப்பட்டவரின் ஹைஏஸ் வாகனத்தைக் கொள்ளையடித்தமையும் வழக்குத் தொடுநரினால் எண்பிக்கப்பட்டதையடுத்தே, எதிரிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதாக யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரைக் கொலை செய்ததன் பின்னர், கொலைக்குப் பயன்படுத்திய உலக்கையை குடமியன் இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள வயல்வெளியில் வீசியபோது, அந்த இராணுவ முகாமில் அப்போது கடமையில் இருந்த பள்ளியகுருகே என்ற இராணுவ சிப்பாய் தனது தொலைநோக்கியின் மூலம் கண்டதாக சாட்சியமளித்துள்ளார் என்பது முக்கியமானதாகும்.

கொலைச் சம்பவத்தையடுத்து, இந்த வழக்கின் முதலாம் எதிரி மோட்டார் சைக்கிளிலும், இரண்டாம், மூன்றாம் எதிரிகள் கொல்லப்பட்டவரின் உடைமையில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஹைஏஸ் வாகனத்திலும் தப்பிச் செல்கையில், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட உலக்கையை வயல் வெளியில் வீசியதை இராணுவச் சிப்பாய் பள்ளிய குருகே கண்டுள்ளார்.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரி நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. அவர் தலைமறைவாகியுள்ளார்.

விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் சாட்சியமளித்த முதலாம் எதிரியும், மூன்றாம எதிரியும், இந்தக் குற்றச் செயலை இரண்டாம எதிரிதான் செய்ததாகவும், வாகனம் தொடர்பான பணம் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்டிருந்த வாக்குவாதம் காரணமாகவே, இரண்டாம் எதிரி உலக்கையால் தாக்கியதுடன் அனைத்து குற்றங்களையும் அவரே செய்ததாகவும், இரண்டாம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில், நீதிமன்றத்தை திசை திருப்பும் வகையில் தெரிவித்தனர்.

அதேநேரம் கொலை நடந்த போது அவ்விடத்தில் தாங்கள் நின்றதையும், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட உலக்கையை எடுத்துச் சென்று குடமியன் இராணுவ முகாமுக்கு எதிரில் உள்ள வயல் வெளியில் வீசியெறிந்ததையும் தமது சாட்சியத்தில் அவர்கள் இருவரும் ஒப்புக்கொண்டிருந்தனர்.

எனவே, இந்த வழக்கின் முதலாம், இரண்டாம், மூன்றாம் எதிரிகள் ஆகிய மூவரும முதலாவது குற்றச்சாட்டாகிய கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்டதால் மூவருக்கும் மரணதண்டனை விதித்தும், இரண்டாவது குற்றச்சாட்டாகிய வாகனத்தைக் கொள்ளையடித்த குற்றமும் நிரூபிக்கப்பட்டிருப்பதனால், 5 ஆண்டுகள் கடுழிய சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்படுகின்றது. தண்டப்பணம் கட்டத்தவறின் மேலும் ஒருவருட கடுழிய சிறைத்தண்டனையும் வழங்கி நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

அதேநேரம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகியுள்ள இரண்டாம் எதிரியை சர்வதேச பொலிஸாரின் துணையுடன் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு கட்டளை பிறப்பித்ததுடன் இந்த எதிரியைக் கண்டால் உடனடியாகக் கைது செய்யுமாறு கட்டுநாயக்க விமானநிலைய கட்டுப்பாட்டாளருக்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இரண்டு எதிரிகளும் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (செ-4-9)

யாழ்ப்பாண பல்...

521 பட்டதாரிகள் பட்டமளிப்பு விழாவில் நேரடியாக சமுகம் தந்து பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 8 அமர்வுகளாக நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் யாழ்.பல்கலைகழக வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி.பத்மநாதன் மாணவர்களுக்கான பட்டங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

இன்று 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் 170 மாணவர்களுக்கும், முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகும் 2 ஆவது அமர்வில் 193 மாணவர்களுக்கும், பிற்பகல் 1.45 மணிக்கு ஆரம்பமாகும் 3ஆவது அமர்வில் 196 மாணவர்களுக்கும், 3.30 மணிக்கு ஆரம்பமாகும் 4ஆவது அமர்வில் 201 மாணவர்களுக்கான பட்டங்களும் வழங்கப்படும்.

நாளை20ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் 5 ஆவது அமர்வில் 181 மாணவர்களுக்கும், முற்பகல் 10.45 மணிக்கு ஆரம்பமாகும் 6 ஆவது அமர்வில் 193 மாணவர்களுக்கும், பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் 7 ஆவது அமர்வில் 188 மாணவர்களுக்கும், பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் 8 ஆவது அமர்வில் 199 மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கும் பட்டம் பெறுவதற்கும் சமுகமளிக்கும் ஒவ்வொருவருக்கும் மேலதிகமாக ஒருவர் மண்டபத்தில் பார்வையாளராக அனுமதிக்கப்படுவர்.

பட்டம் பெறுவோர் தமக்குரிய புகைப்பட பிரதிகளையும் வீடியோ பிரதிகளையும் பல்கலைக்கழக கல்விக் கிளையில் அதற்குரிய கொடுப்பனவினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விழாவின் ஒழுங்கமைப்பை நல்ல முறையில் பேணும் வகையில் வேறுபுகைப்படப் பிடிப்பாளர்கள் வீடியோப்படப் பிடிப்பாளர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பார்வையாளரின் நலன் கருதி தொலைக்காட்சியூடாக இவை நேரடியாகப் பல்கலைக்கழக வளாகத்தினுள் காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (செ-4-9)

தமிழ் மக்கள்...

தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே அதற்கு கட்சியரசியல் நோக்கமில்லை எனவும் அரசியலை மக்கள் மயப்படுத்தலே தமது நோக்கம் எனவுந்தெளிவாகத் தெரிவித்து அதன் பிரகாரம் நடந்தும் வருகின்றது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்கள் பேரவையைத் தொடர்ந்தும் கட்சியரசியல் நோக்கில் பார்ப்போரும் அரசியல் மக்கள் மயப்படுத்தப்படுவதை எதிர்ப்போரும் பலவிதமான விசமத்தனமான பிரசாரங்களைச் செய்து வருகின்றனர். அவற்றின் ஒருபாகமே தமிழ் மக்கள் பேரவை கலைக்கப்பட்டு விட்டதாகவெளிவருகும் செய்திகள்.

இவர்களின் அநாகரிகமான பிரசாரங்களை சில ஊடகங்களும் வெளிப்படுத்தி வருகின்றமை வருந்துதற்குரியது. தமிழ்மக்கள் பேரவை தொடர்ந்தும் அமைதியாகத் தனது பணியை முன்னெடுத்துச் செல்கின்றது என்பதனை இச் செய்தியறிக்கை மூலம் உறுதிப்படுத்துகின்றோம்.

இனப் பிரச்சினைக்கான தீர்வை தமிழ் மக்களின கலந்தாலோசனையுடனும் பங்குபற்றலோடும் உருவாக்கும் பேரவையின் முயற்சி தொடர்பில் வடக்கு மாகாண சபை முதல்வரும் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மிகவும் உறுதியாக உள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதில் பேரவையின் உப குழு தனது பணிகளை செவ்வனே தொடர்ந்து செய்து வருகின்றது. அக்குழு தனது பணிகளை முடித்தவுடன் அந்த ஆவணம் மக்கள் கலந்தாய்வுக்காக விடும் செயன்முறை ஆரம்பமாகும்.

தமிழ் மக்கள் பேரவைதொடர்பில் தகவல்களைப் பெற 075693211 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (நு)

யாழ்.நகரை...

அருகாமையில் தனியார் பஸ்நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை உலக வங்கி முன்னெடுக்கவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் அமைத்துள்ள யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான காணியில், தனியார் பஸ் நிலையத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த உலக வங்கி குழு, மேற்படி காணியை நேரில் சென்று பார்த்து ஆராய்ந்து உள்ளனர். இதன் போது தனியார் பஸ் நிலையம் எவ்வாறு அமைக்கப்படல் வேண்டும், எந்தளவில் அமைக்கப்படல் வேண்டும் என்பவை தொடர்பில் உலக வங்கி குழுவினரால் ஆராயப்பட்டுள்ளன.

இவ் ஆராய்வின் போது யாழ்.வணிகர் கழக தலைவர், யாழ்.மாநகர சபையின் ஆணையாளர், யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண தனியார் பஸ் சங்கத்தின் பிரதிநிதிகள் என்போரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-12)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- INTERNATIONAL DIPLOMA (DELF A1): இலங்கையில் AF மட்டுமே இப் பரீட்சையை நடாத்துகிறது. இதனைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை. கட்டணம் : AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/= கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம். மொழிபெயர்ப்புகள்

மாணவர்களுக்கு 40% கழிவு

- இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல். CD, BOOKS பாவனை.....
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்

(3327)

ஆரம்பம் 31-01-16 2 pm. உடன் தொலைபேசியில் பதியவும்
021 222 8093 01, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் ➡ புகையிரதக்கடவை ➡ AF (வெள்ளை மாடிக்கட்டம்)

புலமைப் பரிசில் பரீட்சைக்கு
தயாராகும் தரம் 4 , 5
மாணவர்களுக்கு!

புலமைச்சங்கமம்

கணிதம் , தமிழ் , சுற்றாடல் சார்செயற்பாடுகள் , ஆங்கிலம் , அழகியல் , விளையாட்டு , சிங்களம் ஆகிய பாடங்களின் தொகுப்பு விடைகளுடன்.

தொகுப்பு : திருமதி.சகுந்தலா ஜெயகுமார்
தரம். 4 விலை : 350/-

தொகுப்பு : கெக்கிராவ M.S.M. நளீம்
தரம் 5 விலை : 550/-

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு: யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/1, ஜிந்துப்பிட்டிய வீதி கொழும்பு 13. தொ. பே : 077 6258778

(சி-3471)

சா/த பரீட்சையில்...

மற்றும் ஆங்கில பாட வினாத்தாள்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இதேவேளை,எதிர்வரும் ஆண்டு முதல் சில கடினமான பாடங்கள் தொடர்பில் நெகிழ்வுத்தன்மை பின்பற்றப்பட உள்ளது. மாணவர்கள் எத்தனை பாடம் கற்க வேண்டும் என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும்.

இந்தப்புதியமுறை மையின் ஊடாக திறமைகூடிய மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியைத் தொடரவும் ஏனையவர்கள் தொழில் சார் கல்வியைத் தொடரவும் வழியமைக்கப்படும் என்றும் பணிப்பாளர் நாயகம் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.(செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மெஹந்தி அணிவிக்கப்படும்

திருமண வைபவங்கள் மற்றும் ஏனைய சுபகாரியங்களுக்காக உங்கள் இல்லங்களுக்கு வந்து மெஹந்தி அணிவிக்கப்படும்

T.P : 0778583330
(ஆயிஷா)

(3339)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

A/L பரீட்சை பெறுபேறுகளின் பின்னர்
உங்களின் எதிர் கால நலன் கருதி

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

- எமது கற்கை நெரிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.

Batch1 : .01.2016
Batch2 : .01.2016
Batch3 : .01.2016
Batch4 : .01.2016

No.15, Sirambiyady Lane (Off Stanley Road) ,Jaffna.
(Above Sathosa SM)
Telephone 021-2224550
Hotline : 0770365728, 077722422, 0776555677

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

(சி-3469)

மரண அறிவித்தல்

அமரர்

அன்னம்மா கதிரவேலு

அத்துளு அம்மன் கோவிலடி கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற உலகப்பர் பிள்ளையம்மாவின் அன்பு மகளும், கதிரவேலு (சின்னக்கண்டு)வின் பாசமிகு மனைவியுமான அன்னம்மா கதிரவேலு அவர்கள் 17.01.2016 அதிகாலை காலமானார்.

அன்னார் அமரர் தங்கராசா, சின்னாச்சி, வடிவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் பத்தினி, இலட்சுமி, கந்தசாமி, அமரர் நடராசா ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீகரன் (சுவிஸ்), அன்னலோசினி (சுவிஸ்), மனோகரன் (லண்டன்), மதிவதனி, வாசுகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமதினா, சிவானந்தம், ஷகிதா, மகேந்திரராசா (நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை), மகிந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாருஜன், சர்மியா, சதுர்ஷன், அனமீரா, அகிர்தா, அக்ஷானா, அக்ஸ்விகன், ஹரிகரன், ஹம்சா, அபினுஷா, அருஷன், பிரதீப் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஜயின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2016 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அத்துளு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(சி-3472)

தகவல்:
குடும்பத்தினர்
021 226 3479

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.